Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3210)

முரசு – 04 | திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 08 திங்கட்கிழமை (23.12.2013) பக்கங்கள் 20 | ஓசை – 083

## ஜன்னல் வழியே உள்நுழைந்து பெருமளவு நகை, பணம் திருட்டு

### ஏழாலையில் சம்பவம்

(ஏழாலை)

யாழ். ஏழாலைப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து பெருமளவு தங்கநகைகளும் ஒருதொகைப் பணமும் திருடப்பட்டுள்ளதாக. வீட்டு உரிமையாளரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வீட்டிலுள்ளவர்கள் இரவு உறங்கிக்கொண்டிருந்தபோது, வீட்டின் ஜன்னல் வழியாக உள்நுழைந்த திருடர்கள் வீட்டிலிருந்த தங்கநகைகள், பணம் உட்பட

(19) ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவில் குதிரை இனத்தை பாதுகாக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்த வனவிலங்குகள் பாதுகாப்பு அமைச்சர் விஜிதமுனி சொய்சாவுக்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இரவு விருந்துபசாரம் வழங்கிக் கௌரவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள மங்கோஸ் விடுதியில் நேற்று இரவு விருந்துபசாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன்போது, நெடுந்தீவில்

(19) ஆம் பக்கம் பார்க்க

# ஜெனிவா மாநாட்டிற்கு முன்னர் உண்மை நல்லிணக்க ஆணைக்குழு

## தென்னாபிரிக்க உதவியும் கோரல்

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத தொடருக்கு முன்னதாக, உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை நியமிப்பது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பது தொடர்பாக தென்னாபிரிக்காவின் உதவியையும், ஆலோசனையையும் அரசாங்கம் கோரியுள்ளது.

இதுதொடர்பாக பேச்சுக்களை நடத்துவதற்கு அடுத்த மாதம் அரசாங்க குழுவொன்று தென்னாபிரிக்கா செல்லவுள்ளது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தும் நடவடிக்கையில் ஒரு பகுதியாக இந்த உண்மை நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்படலாம் என்று தெரிவித்துள்ளார்.

இதன் முக்கியமான நோக்கம், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கும் என்றும், நல்லிணக்க ஆணைக்குழு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆகியன ஒன்றுடன் ஒன்று முரண்படாதவாறு இது அமைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் வீரமந்திரி இதற்குத் தலைமை தாங்குவதற்கு சிறந்தவராக இருப்பார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்து, நீதிபதி உடலகம, மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் அங்கம் வகித்தவர்களான கலாநிதி றொகான் பெரேரா, எச்.எம்.ஜி.எஸ்.பாலிஹகார ஆகியோரும் ஆணைக்குழுவின் தலைமைக்குப் பொருததமானவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இந்த உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பது குறித்தோ அதற்குத்

(19) ஆம் பக்கம் பார்க்க



2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் அனைத்து கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விருந்துபசாரமொன்று சபாநாயகரின் இல்லத்தில் இடம்பெற்றது. இதன்போது ஜனாதிபதியுடன் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் அளவளாவுவதைக் காணலாம்.

## மதுபோதையில் வந்த அதிபர்கள் காவலாளி மீது கடும் தாக்குதல்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு, முள்ளியவளைப் பகுதியிலுள்ள பிரபல பாடசாலையில் காவல் கடமையில் இருந்த நபரை மதுபோதையில் வந்த இரு அதிபர்கள் கடுமையாக தாக்கிய சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

இதில் முள்ளியவளைப் பகுதியைச் சேர்ந்த வைத்திலிங்கம் கோகிலநாதன் (வயது - 32) என்பவரே தாக்குதலுக்குள்ளான நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த வெள்ளிக்கிழமை மதியம் 11.30 மணியளவில் க.பொ.த (சா/த) பரீட்சை நிறைவடைந்த நிலையில் பரீட்சைக் கடமையில் ஈடுபட்ட குறித்த இரு அதிபர்களும் மதுபோதையில் அன்றைய தினம் இரவு 7.00 மணியளவில் குறித்த பாடசாலை காவலாளியிடம் மது பாவனைக்காக பாடசாலைக்குள் தம்மை அனுமதிக்குமாறு கேட்டபோது பாடசாலைக்குள் அனுமதிக்கமுடியாது எனக் கூறியுள்ளார்.

இதனையடுத்து குறித்த இரு அதிபர்களும் காவலாளியை தகாத வார்த்தைகளால் பேசியதுடன் கடுமையாக அடித்துள்ளனர். காயமடைந்த காவலாளி உடனடியாக வைத்தியசாலை சென்று வைத்தியசாலையில் உள்ள பொலிஸ் முறைப்பாட்டு பகுதியில் முறையிட்டுள்ளதாகவும் அதன் பின்னர் சிகிச்சையை மேற்கொண்டதாகவும் தெரியவருகிறது.

குறித்த சம்பவம் தொடர்பாக அப்பாடசாலை நிர்வாகத்தாலோ

(19) ஆம் பக்கம் பார்க்க

03



மாதகலில்

18



அவகாசம்

## பத்திற்கும் மேற்பட்ட மனித எச்சங்கள் மீட்பு

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் இதுவரை 10 இற்கும் மேற்பட்ட மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் இரண்டாவது நாளாகவும் நேற்றையதினம் மனித புதை குழி தோண்டப்பட்டு மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளமையினைத் தொடர்ந்து குறித்த பகுதியில் நேற்று முன்தினம் மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் மனிதப் புதைகுழிகள் தோண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை தோண்டப்பட்ட போது மூன்று மனித மண்டையோடுகளும், ஏனைய பாகங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மன்னார் பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பாக மன்னார் நீதவானின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## வயோதிபப் பெண்ணின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருவையாறு பகுதியிலுள்ள வீடொன்றின் கிணற்றிலிருந்து வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

யாழ். சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த சண்முகநாதன் செல்லம்மா (வயது - 71) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த வயோதிபப் பெண் திருவையாற்றிலுள்ள தனது வீட்டினைப் பார்ப்பதற்கு அடிக்கடி செல்வதாகவும் கடந்த சனிக்கிழமை அந்த வீட்டில் தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே அவருடைய சடலம் கிணற்றிலிருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு வந்த திடீர் மரண விசாரணை அதிகாரி கே.திருலோகமூர்த்தி சடலத்தை பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த சடலம் தற்போது கிளிநொச்சி பொது வைத்திய

(19) ஆம் பக்கம் பார்க்க

# மக்களின் உள்ளங்களில் இருந்தே நாட்டில் சமாதானம் பிறக்கும்

## ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார்



(யாழ்ப்பாணம்)

நாட்டில் சமாதானம் வேண்டும் என்று நாங்கள் சொல்கின்றோம். சமாதானம் எங்களது உள்ளத்தில் இருந்தால் தான் நாட்டில் சமாதானம் ஏற்படும். அரசாங்கம் எமக்கு சமாதானம் தரமுடியாது. ஆளுநர் எங்களுக்கு சமாதானம் தரமுடியாது. நாங்கள் எல்லோரும் எமது உள்ளங்களில் சமாதானமாக இருந்தால் தான் இந்த நாட்டில் சமாதானம் உண்டாகும். என அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவித்தார்.


நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற கிறிஸ்மஸ் ஒளி விழாவில் விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையான சமாதானம் எங்கள் உள்ளங்களில் இல்லை. அன்பு இல்லை. மற்றவர்களை மதிப்பது இல்லை, எம்மிடம் இவ்வாறான பழக்கங்கள் இல்லாதவிடத்தில் வேறு எதில் இருந்து சமாதானம் பிறக்க முடியும். நாம் முதலில் சமாதானமாக பழக வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளான நீங்கள் உங்கள் குறைகளை மறந்து வாழவேண்டும். உங்களுக்குள்ளேயும் எத்தனையோ திறமைகள் இருக்கின்றன. அவற்றை நீங்கள் திறம்பட வெளிக்கொண்டுவரவேண்டும். உங்கள் எல்லோரது மனங்களிலும் அன்பு மலரவேண்டும். அதன் மூலம் தான் சமாதானம் ஏற்படமுடியும். இதைத்தான் இயேசு கிறிஸ்துவும், வீட்டில் சமாதானம், ஊரில் சமாதானம், நாட்டில் சமாதானம் என எல்லோருக்கும் கூறியிருக்கிறார். என அடிகளார் தனது உரையில் தெரிவித்தார். (இ)

# வாடியடி நகரில் உணவகம் தீக்கிரை



பூநகரி வாடியடி நகர்ப்பகுதியில் இயங்கிவந்த "பிரன்ட்ஸ் கோட்டேல்" உணவகம் கடந்த 18ஆம் திகதி இரவு தீப்பற்றி எரிந்ததில் நாலரை இலட்சம் ரூபா பெறுமதியுள்ள பொருள்கள் முற்றாக அழிவடைந்துள்ளது. அதன் உரிமையாளர் இது சம்பந்தமாக பூநகரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்துள்ளார்.

மின் ஒழுக்கினால் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாமென கருதப்பட்டபோது மின்சார சபையினர் சம்பவ இடத்திற்கு வந்து ஆய்வில் ஈடுபட்டு மின் ஒழுக்கினால் இவ்விபத்து இடம்பெறவில்லையென உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து பூநகரி பொலிஸார் புலன் விசாரணையில் இடுபட்டுள்ளனர்.

இவ்விபத்து சம்பந்தமாக தமது அதிர்ச்சியை வெளியிட்ட வர்த்தக சங்கத்தினர் பாதிக்கப்பட்ட வர்த்தகருக்கு ஒருதொகைப் பணத்தை உடனடியாக வழங்க முடிவெடுத்தனர். (112)

# சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

தகப்பன், பெரிய தகப்பன், சிறிய தந்தை ஆகிய மூவரினாலும் பரிதாபமான முறையில் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்ட 20 வயது நிரம்பிய மனநலம் குன்றிய மகளை மல்லாவி பொலிஸார் மீட்டெடுத்துள்ளதுடன் தாயின் முறைப்பாட்டினடிப்படையில் மூவரையும் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜராக்கிய வேளைஅம் மூவரையும் அடுத்தமாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் பல காலமாக நடைபெற்று வந்ததாகவும், மேற்படி மூவரினதும் பாதுகாப்பில் விட்டு விட்டு தாய் வேலைக்கு சென்று விடுவதாகவும் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். (170)

* * *

மாங்குளம் பகுதியில் பாட்டனாரால் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்ட இரண்டு சிறுவர்களை மாங்குளம் பொலிஸார் மீட்டெடுத்ததுடன் சிறுவர்களின் சித்தியின் முறைப்பாட்டினடிப்படையில் பாட்டனாரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்திய வேளையில் சந்தேகநபரை அடுத்தமாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

பிள்ளைகளின் அம்மம்மா தனது கணவர் சம்பந்தமாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யக்கூடாது என பயமுறுத்தியதையடுத்தே பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யவில்லை என பிள்ளைகளின் சித்தி மன்றில் தெரிவித்தார். (170)

# விதிகளை மீறிய உணவகம் மீது யாழ். நீதிமன்றம் தண்டம் விதிப்பு

(திருநெல்வேலி)

சுகாதார மேம்பாட்டைக் கடைப்பிடிக்கத்தவறிய கோப்பாய், பருத்தித்துறை வீதியில் உள்ள உணவகம் ஒன்றின் பணியாளர்கள் இருவருக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் பெ.சிவகுமார் தலா 5000 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். இவ்வுணவகத்தின் உரிமையாளர் இந்தியாவுக்கு சென்றுள்ளதினால் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி அவரை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

நீர்வேலியில் உள்ள நான்கு உணவகங்களுக்கும், வெதுப்பகம் ஒன்றுக்கும் இதே குற்றச்சாட்டின் பேரில் மொத்தம் 65 ஆயிரம் ரூபா அபராதமாக செலுத்தும்படி கட்டளையிடப்பட்டது. அத்துடன் இவற்றில் இரண்டு உணவகங்களை மூடி திருத்த வேலைகளை மேற்கொண்ட பின்னர் அப்பகுதி சுகாதாரப் பரிசோதகரின் மூலம் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

புகைத்தலில் ஈடுபட்டமை, மேலங்கி மற்றும் தொப்பி அணியாமை, அச்சடித்த தாள்களைப் பாவித்தமை, தனிப்பட்ட சுத்தம் பேணாமை, உணவு தயாரிக்கும் இடங்களை அசுத்தமாக வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் இவ்வுணவகங்கள், வெதுபபகம் மீது சுமத்தப்பட்டிருந்தன.

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்கள் அதிகாலை 4.00 மணியிலிருந்து 9.00 மணி வரை இப் பகுதிகளில் மேற்கொண்ட திடீர் அதிரடி சோதனை நடவடிக்கையின் போது இவை சிக்கிக் கொண்டன.

கடந்த வெள்ளிக்கிழமை இவ் அபராதத் தொகை நீதவானால் விதிக்கப்பட்டது.

கோப்பாய் மற்றும் நீர்வேலிப் பிரிவுகளைச்சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்கள் பா.சயந்தன், த. சதீஸ்குமார் ஆகியோர் இவ் வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தனர். (137)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2489 திகதி 21-12-2013

ஆங்கில எழுத்து: V

வெற்றி எண்கள் 01 15 20 59

போனஸ் இல: 57

ஜக்பொட் பரிசு ரூ.18,976,475/-வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 224918 | 20/- | 4,498,360- |
| 2 இல | 15997 | 100/- | 1,599,700/- |
| 3 இல | 336 | 1,000/- | 336,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9156 | 40/- | 366,240/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 740 | 1,000/- | 740,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 15 | 10,000/- | 150,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 18,976,475/- | - |
| 1 இல + போனஸ் இல | 10753 | 100/- | 1,075,300/- |
| 2 இல + போனஸ் இல | 505 | 500/- | 252,500/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 420 | 200/- | 84,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 7 | 1,500/- | 10,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 1 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 262852 | | 10,562,600/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2013 டிசம்பர் 25 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 19,590,425/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3112)


# மதுபோதை மயக்கத்தால் பறிபோனது சைக்கிள்

(சாவகச்சேரி)

மதுபோதையில் மயங்கியவரின் சைக்கிள் மாயமாக மறைந்த சம்பவம் ஒன்று அண்மையில் வேம்பிராய் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

வேம்பிராய் இந்து மயானத்திற்கருகில் உள்ள தவறணையில் மது அருந்திய நபர் ஒருவர் போதைதலைக்கேறவே வீடு செல்ல முடியாது தள்ளாடிய நிலையில் மயானத்தின் வாயிலில் நின்ற ஆலமரத்தடியில் சைக்கிளை நிறுத்திவிட்டு படுத்துவிட்டார். சிலமணிநேரம் கழிந்து போதை குறைந்த நிலையில் எழுந்து பார்த்தபோது நிறுத்திவைத்த சைக்கிள் மாயமாக மறைந்திருந்ததைக் கண்டு திகைத்தார். பெறுமதியான சைக்கிளை இழந்த நிலையில் வீதியால் சென்றவர்களின் உதவியுடன் மட்டுவிலில் உள்ள தனது வீட்டுக்கு சென்றுள்ளார். (இ)

# பழம்பெரும் நடிகர் குமரிமுத்து மரணம்



45 வருடங்களுக்கு மேலாக தமிழ் சினிமாவில் நடித்துள்ள குமரிமுத்து 500இற்கும் அதிகமான திரைப் படங்களில் நடித்துள்ளார். வித்தியாசமான சிரிப்பினால் மக்களை சிரிப்பூட்டி பிரபல்யமானவர்.

ஆரம்ப காலத்தில் மேடை நாடகங்களில் நடித்து வந்தவர் 1960களிலிருந்து சினிமாவில் நடிக்க ஆரம்பித்து 4 தலைமுறை நடிகர்களுடன் நடித்துள்ளார். எம்.ஜி.ஆர், சிவாஜி, ரஜனி, கமல், அஜித், விஜய் என பல முன்னணி நடிகர்களின் படங்களிலும் நகைச்சுவை கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

# பசுமாடுகளை வெட்டியவருக்கு ஒருவருட கடூழிய சிறை

முள்ளியவளை 4ஆம் வட்டாரம் புதரிக்குடா பகுதியில் பெறுமதி வாய்ந்த பசுமாடுகளை, இறைச்சிக்காக திருடி வெட்டியமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரிக்கு ஒருவருட கடூழியச்சிறைத் தண்டனை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்தார்.

இந்தநபர் மீது 7.3.2011 அன்று வழக்கு தொடரப்பட்டு விசாரணையின் பின்னர் கடந்த வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்படி நபர் மேலும் பல பெறுமதியான மாடுகளை களவாடி, இறைச்சிக்காக வெட்டி விற்பனை செய்துள்ளதாக பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். (170)


"ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி"
'இந்துநெறி காப்போம் இந்துவாக வாழ்வோம்'
இந்துக்களே உங்களுடைய தார்மீக கடமையாக ஓம் நமசிவாய மந்திரத்தினை 1008 முறை எழுதி அருகில் உள்ள ஆலயங்களில் சமர்ப்பித்து எமதுசமயத்தினையும் சமயவிழுமியங்களையும் எம்மக்களையும் காத்திட
அர்ப்பணிப்புடன் ஐந்தெழுத்துமந்திரம் முதலீடு செய்வீர்களாக!

# குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு மக்கள் பொலிஸாருக்கு உதவவேண்டும்

## பொலிஸ் அத்தியட்சகர் ரணவீர

(வடமராட்சி)

எமது நாட்டை எவ்வாறு நாம் பாதுகாக்கின்றோமோ அவ்வாறு பெற்றோர்கள் தம் பிள்ளைகள் முதல் பெறுமதியான உடமைகள் வரை விழிப்புடன் இருக்க வேண்டும் என வடமராட்சி பொலிஸ நிலையங்களின் பொலிஸ் அத்தியட்சகர் என்.கே.ரணவீர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பருத்தித்துறையில் அமைந்துள்ள காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாச உணர்வுடன் வளர்த்தெடுக்க வேண்டும். அவர்கள் வீட்டிலிருந்து வெளியே சென்றுவரும் வரை சகபாடிகளுடனான தொடர்புகள் குறித்து உன்னிப்பாக அவதானித்துக் கொள்ள வேண்டும். மற்றும் பிள்ளைகளை தனிமைப்படுத்தி வீட்டில் இருந்து பெற்றோர்கள் வெளியே செல்லும் போது அயலவர்கள் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். இவ்வாறு பிள்ளைகள் மீது அதிக அக்கறை செலுத்துவதுடன் தமது வீட்டில் கண்படக் கூடிய விதத்தில் பெறுமதியான உடமைகள், ஆபரணங்களை மறைத்து வைத்து கையாழுதல் வேண்டும். திருட்டுச்சம்பவங்கள் மிகவும் சாதுரியமாக இடம் பெறுகின்றது.

எனவே இவ்வாறான சம்பவங்களுக்கு இடமளிக்காமல் இருக்குமிடத்து பொலிஸாரின் முறைப்பாட்டின் மூலமாக சம்பந்தப்பட்டவர்களை இலகுவாக கைது செய்யமுடியும். இவ்வாறிருக்க உங்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து ஒரு இரு வாரங்களில் பதில் கிடைக்கப்பெறாவிடத்து தம்மிடம் நேரில் வந்தோ அல்லது 021 226 3671 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டோ முறைப்பாடுகளை பொது மக்கள் தெரிவிக்கமுடியும் என்றார்.

மேலும் வடமராட்சி பகுதிகளில் இந்த வருடம் இவ்வாறான சம்பவங்கள் குறைந்து காணப்படுகின்ற போதிலும் பொதுமக்கள் பொலிஸாரிடம் நல்லுறவை வளர்க்க வேண்டும் என மேலும் கூறினார். (116)

# மாதகல் சம்பில்துறையில் 25 அடியில் சிவன் சிலை



(மானிப்பாய்)

மாதகல் சம்பில்துறை பகுதியில் 25 அடி உயரமான சிவபெருமானின் சிலை அமைக்கப்பட்டு வருகின்றது. அங்கிருக்கும் புத்த விகாரைக்கு அண்மையாக ஊரவர்களின் முயற்சியுடன் இச் சிலையானது அமைக்கப்பட்டு வருகின்றது. சம்பில்துறை ஐயனார் ஆலயவளவில் இப் பிரமாண்டமான 25 அடி உயரமான தியான நிலை அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்துக்களின் முழு முதற் கடவுளாகிய சிவபெருமானிற்கு யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மிகப் பிரமாண்டமான சிலை இதுவாகும்.

கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் விரைவில் பிரமாண்டமான சிலை அடியவர்களின் வழிபாட்டிற்காக திறக்கப்படவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர். (48)

# தலைமை அலுவலகத்தைச்சூழ மதில் அமைக்கும் நடவடிக்கை

(மானிப்பாய்)


வலி. தென் மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தைச் சூழ மதில் அமைக்கப்படவுள்ளது. மானிப்பாய் பிரதான வீதியில் அமைந்துள்ள வலி. தென் மேற்கு பிரதேச சபையின் கட்டடங்களை சூழ இம் மதிலானது அமைக்கப்படவுள்ளது.

மிக நீண்ட காலமாக தகரத்தினால் அடைக்கப்பட்டிருந்த நிலையில் இது குறித்து சபையில் ஆராயப்பட்ட போதே மதில் கட்டுவதற்கான அனுமதி கிடைத் திருந்தது. சபையின் தீர்மானத்தின் பிரகாரம் இம் மதிலானது அமைக்கப்படவுள்ளது.

நீண்ட காலமாக தகரத்தினால் அடிக்கப்பட்டிருந்தமையால் பாதுகாப்பு பிரச்சினைகளும் இருந்து வந்தன.

மதில் அமைக்கப்படும் போது தமது வீடுகளுக்கான பாதையில் பாதிப்புகள் ஏற்படுமென தெரிவித்து சிலர் பிரதேச சபையின் உறுப்பினர்களையும், பதில் தவிசாளரையும் சந்தித்தனர்.

சிவன் கோவிலுக்கு சொந்த மான ஆதனத்தில் வசிக்கு சிலரே இவ் விடயம் சம்பந்தமாக சந்தித்தனர். மதில் அமைப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(48)




# கூட்டமைப்பு உறுப்பினர்க்கு உளவளப் பயிற்சி அளிக்க முதல்வர் ஏற்பாடு?

நாளைக்கு 24.12.2013 வவுனியாவில் ஒரு பயிற்சி வகுப்பு நடக்கப்போகிறது.

இதற்கான ஏற்பாடுகளை வடக்கின் முதலமைச்சர் சி.வி. செய்துள்ளார்.

முதலமைச்சர் சி.வி, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இருவரும்தான் ஆசிரியர்கள். சில துணை ஆசிரியர்களும் வரக்கூடும்.

பயிற்சி வகுப்பில் படிப்பிக்கப்போகிற பாடம் என்ன தெரியுமா?

ஒழுக்கம், ஒற்றுமை, இரகசியம் காத்தல் போன்ற சமாச்சாரங்கள்.

அந்த அளவுக்கு கட்சியினுள்ளே உள்குத்துகளும் குழிபறிப்புகளும் சுயநலப்போட்டிகளும் தலைவிரித்தாடுகின்றன.

கடந்த சில நாட்களுக்கு முன் இதை முதலமைச்சர் பகிரங்கமாகவே யாழ்ப்பாணத்தில் சொல்லியிருக்கிறார்.

சொல்லியிருக்கிறார் என்று சொல்வதை விட, தன்னுடைய சகாக்களை அழைத்துத் திட்டியிருக்கிறார் எனலாம்.

'மக்களுடைய நம்பிக்கைக்கு மாறாக பிரதேச சபை உறுப்பினர்கள் பலர் நடந்து கொண்டிருக்கிறீங்கள்.

எல்லாரிடமும் சுயநலமும் ஊழலும் கூடிவிட்டது. இதனால் பிரதேச சபைகளின் வரவு செலவுத்திட்டத்தை ஒரே கட்சியினரே தோற்கடிக்கும் நிலை உருவாகியுள்ளது. இந்த மாதிரியான நிலைமை தொடர்வதை அனுமதிக்க முடியாது' என்றெல்லாம் வலு காட்டமாக சி.வி. பேசியிருக்கிறார்.

ஏற்கனவே இரண்டு பிரதேச சபைகளின் வரவு செலவுத்திட்டம் சகபாடிகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இன்னும் பல் சபைகளின் நிலையும் கிட்டத்தட்ட அப்படித்தானிருக்கு.

இதெல்லாம் நல்ல சகுனமாக முதல்வருக்குப் படவில்லை.

இதை விட இதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முதல்தான் சாவகச்சேரியில் நடந்த ஒரு கூட்டத்தில் சிறிதரன் எம்பிக்கு வலு காட்டமாகப் பதில் சொல்லவேண்டியேற்பட்டது.

அதற்கு முன்பு கிளிநொச்சியில் நடந்த இரணைமடுத்தண்ணீர்ப் பங்கீடு பற்றிய கூட்டத்திலும் சிறிதரன் எம்பி மெல்லிசாக முதல்வரைச் சாடிப்பேசும் போது, அதைக் கண்டும் காணாததைப்போல சமாளித்துக் கொண்டு, வலு பக்குவமாக சிறிதரனுக்கு அறிவுரை சொல்லியிருந்தார் சி.வி.

ஆனால், சிறிதரன் எம்பி முதல்வரையோ அவருடைய கருத்துகளையோ கணக்கிலும் எடுக்கவில்லை.

'முதல்வருக்குக் கனவிசயங்கள் விளங்கயில்லை. போகப்போகத்தான் அரசியல் எண்டால் என்ன எண்டு தெரியவரும்' என்று தன்னுடைய ஆதரவாளர்களிடம் பகிரங்கமாகவே சிறிதரன் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

சிலவேளை இந்தத் தகவல் முதமைச்சரின் காதுக்கும் எட்டித்தான் அவர், சாவகச்சேரியில் அப்படிக் காட்டமாக சிறிதரனுக்கு மறுத்தான் குடுத்தாரோ தெரியவில்லை.

கட்சிக்குள்ளே பேசி ஒரு சுமுக நிலைக்கு வரக்கூடிய ஒழுங்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினுள்ளே இல்லை.

ஆளாளுக்கு ஒவ்வொரு கோணத்தில் நின்று கொண்டு தனக்குத் தனக்கேற்றமாதிரி நிலைப்பாடுகளை எடுப்பதும் அறிக்கைகளை விடுவதுமே பலரிடம் உள்ளது.

இதனால், கட்சியை எப்படிப் பொது நிலைப்பாட்டுக்குக் கொண்டு வருவது, அதனுடைய ஒழுங்குகளை எப்படி உருவாக்குவது என்று ஒருவருக்குமே தெரியவில்லை.

சிலருக்கு இதைப்பற்றியெல்லாம் கவலையே இல்லை.

ஏதோ போகிற பஸ்ஸில ஏறுவம். ஓடுகிற தண்ணியில கரைப்பம் எண்ட மாதிரி சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு.

உழைக்கிற இடத்தில உழைப்பம். சேர்க்கிற இடத்தில சேர்ப்பம். நல்லா வாய்ச்சிருக்கு, விளையாடித் தள்ளுவம் என்ற கணக்கில் அரசியல் நடத்துகிறார்கள்.

இதையெல்லாம் பார்க்கும் சி.வி க்கு பதவியைப் பொறுப்பெடுத்த மூன்று மாதங்களிலேயே பட்ட அனுபவங்கள் எல்லாம் போதும் போதும் என்றாகிவிட்டன.

போகிற போக்கைப் பார்த்தால் இன்னும் இரண்டு மாதங்களில் இந்தப் பழம் புளிக்கும் என்ற மாதிரி ஆள் பதவியைத் தூக்கி எறிந்து விட்டு துறவுக்குப் போனாலும் போய்விடுவார் போலிருக்கு.

ஆகவேதான் இந்த அவசரப் பயிற்சி வகுப்புக்கான ஏற்பாடுகள்.

நேருக்கு நேர் மோதி, நாலு பேருக்கு முன்னால் நாறுவதை விட பேசித் தீர்ப்பம் எண்டு சிந்தித்திருக்கிறார் முதல்வர்.

விடுதலை அமைப்புகளுக்குள்ளேயே போட்டியும் பொறாமையும் பதவி வெறியும் முளைச்சு, ஆளுக்காள் சுடுபட்டதும் பிடிச்சு மண்டையில போட்டதும் கடந்த கால வரலாறு.

அரசியற் கட்சிகளுக்குள்ளும் அதே வியாதிகள் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இதற்கெல்லாம் காரணம், அரசியலை பிழைப்புக்கான–பதவி ஆசைக்கான வழியாக கொள்ளும் ஆட்களை வெல்ல வைப்பதுதான்.

மக்களை உண்மையாக நேசிப்போரை சரியாக இனங்காணாமல் விட்டால், இப்படித்தான கட்சியின் மானமும் கப்பலேறும். சனங்களின் வாழ்வும் நாசமாய்ப்போகும்.

அச்சத்தை நீக்கும் வரை மனிதன் எதையும் சாதிக்க முடியாது. - தோமஸ். கார்லைல்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வாழ்க்கை என்னும் கொடை!

தமிழ்த் தலைமையின் வரலாறானது தங்களுக்குள்ளேயே அடிபட்டுக் கொண்டதும், சக தமிழர்களையே துரோகி என்று வசைபாடியதும், ஒருவரையொருவர் குழிபறித்து விடுவதிலேயே சக்தியை எல்லாம் செலவளித்ததாகவும்தான் அறியக்கிடக்கிறது. இந்த சிறப்பியல்புகளின் காரணமாகவே நம்மிடையே "தமிழ்நன்டுக்கதை"யும் உருவாகியிருக்க வேணும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்குள் இப்போது நடக்கும் குத்துவெட்டுக்களை நிறுத்துவதென்றால் அது அரசாங்கத்தினால் தான் முடியும் என்று தோன்றுகிறது. அதாவது, அரசாங்கம் தமிழ்ப் பகுதியில் ஏதாவதொரு தேர்தலை அவசரமாக அறிவித்தால்தான் கூட்டமைப்பினர் தங்களுடைய அடிபாடுகளைச் சற்றே நிறுத்திக் கொண்டு, ஒற்றுமை அரிதாரத்தை எடுத்துப் பூசிக்கொள்வர் என்பது வரலாறு சொல்லும் சங்கதி.

அவர்களுக்குள் அடிபட்டுக்கொள்வது ஒருபுறமிருக்க, இரணைமடுக்குள விவகாரத்தில் பிரதேசரீதியாகவும் மக்களிடையே கசப்புகளை உருவாக்கிவிடுவார்களோ என்ற அச்சத்தையும் சில ஆய்வாளர்கள் எழுப்புகின்றனர். இவர்களுக்குள் நடக்கும் சண்டையினால் மக்களுக்கு நேரும் மற்றொரு அபாயம் இவர்கள் வசமுள்ள பிரதேச சபைகள் மாகாண சபை எல்லாம் முடக்க நிலைக்குப் போவதாகும்.

நமது சமூகமே ஒருவரையொருவர் துரோகிகளாக்கி விலக்கவும், மற்ற சமூகங்கள் மீதோ அயலான் மீதோ காழ்ப்புக் கொண்டு வளரவும், தமிழ் மனங்களினுள்ளே அன்பு, சகிப்பு, தாராள மனப்பாங்கு, இணக்கம் ஆகியவை முளைத்தெழ விடாமல் கூகக்பட்டுக் கொண்டிருக்கவுமான இந்த நிலைமைக்கு இத்தனைகால தமிழ்த் தலைமைகளே பொறுப்பாவர்.

இவர்கள் தொடர்ந்து இங்கு தக்கவைத்துவரும் வெறுப்பும் பகையும் ஆவேசமும் இளைய மனங்களைத் திரிபடைய வைத்து விரக்தியிலும் எதிர்காலம் குறித்த அவநம்பிக்கையிலுமே தள்ளியிருக்கின்றன. இளைய மனங்களிலிருந்து அன்பு, கருணை, சக மனிதர்களிடமான நேசம், வாழ்வின் மீதான நம்பிக்கை என்பன இப்படித் தொலைந்து போவது குறித்துப் பதற்றமே உண்டாகிறது.

அன்பை உதறிவிட்டு மனதினுள் ஆழமான காழ்ப்புணர்வுகளை நிரப்பிக் கொள்கிறோமே என்று கவலைப்படாமலிருக்க முடியவில்லை. அன்பினையும் அடுத்தவரை சகிப்பதையும் தொலைத்துவிட்ட பின்னால் வாழ்வில் நம்பிக்கை கொள்ள மிச்சம் என்ன இருக்க முடியும்?

வாழ்க்கையின் மீது பிடிப்பும், எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையும்தானே இளமையின் சொத்து! எவ்வளவோ சாதிக்கவும், கற்றுக் கொள்ளவும் துடிப்புடனிருக்கும் இளைய பருவம் சிதைய அனுமதிப்பது வேறு யாருமல்ல. இந்த சமூகத்தை இப்படிக் குரோதமும் குழிபறிப்பு அரசியலுமாக வழிநடத்திவந்த தலைமைகளினுடைய குறைபாடுதான்.

இவர்களோடு சேர்ந்து, விரக்தியும் வெறுப்பும் விரோதமுமான சூழலையே உருவாக்கித் தந்துகொண்டிருக்கும் சமூகப் பெரியவர்கள், ஊடகங்கள், மதப் பெரியவர்கள் எல்லோருமேதான் இந்தக் குற்றத்திற்கு உடந்தையாகிறார்கள்.

வெறுப்புணர்வுகளை வளர்த்து விட்டுக் கொண்டிருப்பதுதான் இளைஞர்களைத் தவறான வழிகளுக்குத் தள்ளுகிறது. கஷ்டங்களைச் சொல்லி யார் யாரிடமோ அனுதாபம் வேண்டி அழுது கொண்டிருப்பதில் லாபமில்லை. நம்முடைய பிரச்சினைகளை நாம் சமாளிக்க விரும்பினால் நிறைவான அளவில் நம்பிக்கையும் உறுதியுமே தேவையாக இருக்கிறது.

அனுதாபத்தை எதிர்பார்த்து அரற்றிக் கொண்டிருப்பதும், அடுத்தவர் மீது ஆயுதம் கொள்வதும் மனதில் வன்முறை நிறைப்பதும், மற்றவர்களது-நமது வாழ்வை வீம்புகளால் நரகமாக்கிக் கொள்வதற்கும் அல்ல நாம் பிறந்திருப்பது! வாழ்க்கை ஒரு கொடை! நாம் வாழவே பிறந்தோம்! - ஆசிரியர்.

# யுத்தம் முடிவுக்கு வந்தமை அனைவரும் வரவேற்கத்தக்கது

## பாக். சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)
இலங்கையில் பயங்கரவாதம் இல்லா தொழிக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என பாகிஸ்தான் சபாநாயகர் சர்தார் அய்யாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட தீவிர முயற்சிகள் சர்வதேசத்தால் வரவேற்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் வரலாற்றுக் காலம் முதல் மிக நெருங்கிய பிணைப்பு காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

கொழும்புக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் சபாநாயகர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியிருந்தார்.

பாகிஸ்தான் பிரதமருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள வழியமைத்தது என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகள் மிக சிறப்பான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை பாராட்டுக்குரியது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, யுத்தம் இடம்பெற்ற காலத்தில் பாகிஸ்தான் சிறந்த முறையில் ஒத்துழைப்பு வழங்கியதாகவும் இதற்காக நன்றி பாராட்டுவதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் ஒத்துழைப்பு இல்லாமல் இருந்தால் பயங்கரவாதத்தை இல்லாதொழித்திருக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாகிஸ்தான் இலங்கையின் நெருங்கிய நண்பர் என்பதனை நிரூபித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# தையல் பயிற்சி நிறைவு விழா

வடமராட்சி இடம்பெயர்ந்தோர் நலன்பேணும் அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தையல் பயிற்சி நிறைவுவிழாவின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு' நேற்று முன்தினம் சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சட்டபீட மாணவி தங்கவேல் விமர்சி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மந்திகை மருத்துவமனை வைத்திய அதிகாரி திருமதி.வி.தங்கவேல் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட ஊடகவியலாளர் சங்கத் தலைவரும், இடம்பெயர்ந்தோர் அமைப்பின் தலைவருமான, வே.தவச்செல்வன், சமூக சேவையாளர் ம.சத்தியசீலன், பருத்தித்துறை காணி மாவட்டப் பதிவகத்தைச் சேர்ந்த ஸ்ரீகாந்தன், காண்டீபன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தொடர்ந்து பயிற்சி பெற்ற 30 இற்கும் மேற்பட்ட மாணவர்களிற்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து பரிசில் வழங்கும் நிகழ்வும் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

# கலைஞர் கௌரவிப்பு

(கொழும்பு)
வலி.வடக்கு கலாசாரப் பேரவையின் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கலாசாரப் பேரவைத் தலைவர் பரமநாதன் தலைமையில் காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலி.வடக்கைச் சேர்ந்த 10 கலைஞர்களுக்கு கலைச்சுடர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதுடன் கலாபூசணம் விருது பெற்ற நான்கு கலைஞர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு அனைத்துக் கலைஞர்களையும் கலந்துகொள்ளுமாறு கலாசாரப் பேரவையின் நிகழ்வு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளார்கள். (90)

# புதிய விலங்கியல் பூங்கா அம்பாந்தோட்டையில் நிர்மாணம்

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ரிதீகம பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் இலங்கையின் முதலாவது சவாரி விலங்கியல் பூங்காவின் முதல் கட்ட நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகியுள்ளன.

இந்த விலங்கியல் பூங்காவில் ஆபிரிக்க, ஆசிய, அவுஸ்ரேலிய சிங்கங்கள் மற்றும் சிறிய விலங்குகளுக்காக வலயங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் ஆபிரிக்க சிங்கங்களுக்கான வலயத்தின் நிர்மாணப் பணிகள் பெருமளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அடுத்த வருட ஆரம்பத்தில் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக திறக்கப்படவுள்ளதாக இலங்கை தேசிய விலங்கியல் பூங்கா பணிப்பாளர் அனுர டி சில்வா தெரிவித்தார்.

சுமார் 500 ஏக்கரில் இந்த சவாரி விலங்கியல் பூங்கா நிர்மாணிக்கப்பட்டு வருவதோடு இதற்காக 1600 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு வருகிறது.

இந்த சவாரி விலங்கியல் பூங்காவில் சிங்கங்கள், புலிகள், சிறுத்தை இனங்கள், வேட்டை நாய்கள் உட்பட ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த விலங்குகளை காணமுடியும் எனவும் அவர் கூறினார்.

அத்துடன் ஒரு விலங்கியல் மருத்துவமனை மற்றும் அதிகாரிகளுக்கான இரண்டு வாசஸ்தலங்களும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வர்த்தக சமநிலையில் குழப்பம் தென்னிலங்கை வியாபாரிகளால் பாதிப்பு

(கொழும்பு)
வடக்கில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு கப்பல், விமானப் போக்குவரத்தை திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ். வணிகர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். வணிகர் சங்கத்தின் ஏற்பாட்டில் வர்த்தகர்கள், வங்கிகள், வடமாகாண வணிக அமைச்சருடனான சந்திப்பு நடைபெற்றபோதே இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இச்சந்திப்பில் வர்த்தகர்கள் கருத்துத் தெரிவிக்கையில், யுத்தத்திற்குப் பின்னரான சூழலில் வர்த்தகர்கள் பல்வேறு வகையான வருமான இழப்புக்களை சந்தித்து வருகின்றார்கள்.

இந்த இழப்புக்களை ஈடுசெய்ய முடியாத நிலை அரசியல் பொருளாதார நிதி நிறுவனங்களின் நடைமுறைகளாலும் திறந்த பொருளாதாரக் கொள்கைகளாலும் ஏற்பட்டுள்ளது.

யுத்த காலத்தில் இத்தகைய இழப்புக்கள் ஏற்படவில்லை. ஆனால் தற்போது பொருளாதாரத்தை தென்னிலங்கையில் இருந்து எதிர்பார்க்கும் நிலை தோன்றியுள்ளது.

இந்த நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். எமது மாவட்டத்தில் வர்த்தக நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த அரசியல் மற்றும் நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்பும் தேவையாக உள்ளது.

மக்களின் தொகையை கணக்கெடுக்காத அளவுக்கு மீறிய நிதிநிறுவனங்களின் வருகையால் மக்களின் பணம் தென்னிலங்கையை நோக்கிச் செல்கின்றது.

ஒருசில அரச சார்பற்ற நிறுவனங்கள் நிதி உதவிகளைச் செய்யும் போது பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதாரத்தையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தாது வசதியாக உள்ளவர்களுக்கான உதவிகளை வழங்கி பாதிப்புகளை ஏற்படுத்தும் நிலையினைத் தோற்றுவிக்கின்றது.

# இரணைமடுவும் தமிழர் எதிர்காலமும்

**இரணைமடுக் குளத்திலிருந்து நீர் எடுப்பது தொடர்பாக விவசாயிகள் தெரிவித்த அச்சங்களுக்கு திட்ட அதிகாரிகளும் ஆலோசகர்களும் கூறிய பதில்களில் வெளிப்படைத் தன்மை காணப்படவில்லை. எப்படியாவது திட்டத்தை நடைமுறைப்படுத்தியே ஆகவேண்டும் என்ற நோக்கம் மட்டுமே காணப்பட்டது. விவசாயிகளுக்கு தங்களின் வாழ்வாதாரம் பறிபோய்விடுமோ என்ற பயம். அதிகாரிகளுக்கும் ஆலோசகர்களுக்கும் ஒதுக்கப்பட்ட பணம் திரும்பிப் போகப் போகின்றதே - தாங்கள் இதுவரைகாலமும் அனுபவித்து வரும் வசதிகள் இல்லாமல் போகப் போகின்றதே என்ற பயம். விவசாயிகளால் தெரிவிக்கப்பட்ட அச்சங்களுக்கு அதிகாரிகளும் ஆலோசகர்களும் தெளிவான பதில்களைக் கூறவில்லை.**

'பொருளியல்' வரதராஜன்

இரணைமடுக்குளத்திலிருந்துயாழ். மாவட்டத்திற்கு நீர் வழங்கும் திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் 1800 கோடி ரூபா கடனுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டதாகும். இத் திட்டத்திற்குப் பொறுப்பாகவுள்ள நீர்ப்பாசனத் திணைக்களம், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை என்பன ஆசிய அபிவிருத்தி வங்கியோடு ஒப்பந்தம் செய்து, பெருந்தொகையான சம்பளத்தோடு திட்டத்திற்கான ஆலோசகர் குழுவை நியமித்து திட்ட வேலைகளை ஆரம்பித்தன. இது தொடர்பான எதுவித கலந்துரையாடலும் ஆரம்பத்தில் கிளிநொச்சி விவசாயிகளுடன் நடைபெறவில்லை.

ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அப்பிரதேச மக்களின் ஒப்புதல் தேவை என்பது, ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவித் திட்டத்தின் ஓர் முக்கிய அம்சமாகும். இதனடிப்படையில் கிளிநொச்சி விவசாயிகளிடம் ஒப்புதல் பெற முற்பட்டபோதே பிரச்சினை ஆரம்பமாகியது.

திட்டங்களுக்காக மக்கள்அல்ல. மக்களுக்காகவே திட்டங்கள். எனவே எந்த மக்களுக்காக திட்டங்கள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றதோ அந்த மக்களோடு கலந்துரையாடியே இத்திட்டங்களை செயற்படுத்த வேண்டும்.

உலகில் ஒரு வெற்றிகரமான நாட்டை மக்களுடன் ஆலோசிக்காமல் உருவாக்கமுடியாது என சிங்கப்பூர் என்ற நாட்டை வெற்றிகரமாகக் கட்டியெழுப்பிய அதன் முன்னாள் பிரதமர் திரு. லீ குவான் யூ கூறியுள்ளார். ஆனால் இங்கு எந்தவொரு திட்டமும் மக்களோடு கலந்துரையாடப் படுவதில்லை. இரணைமடு குளத்திலிருந்து நீர் வழங்கும் திட்டம் தொடர்பாக கிளிநொச்சிப் பிரதேச விவசாயிகளோடு ஆலோசிக்கப்படவில்லை என்பது அன்றைய கலந்துரையாடலில் கலந்து கொண்ட விவசாயிகள் வெளியிட்ட கருத்துக்களிலிருந்து அறியக் கூடியதாக உள்ளது.

ஆலோசகர்களும் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் குளிரூட்டப்பட்ட அறைக்குள் திட்டங்களை உருவாக்குகின்றார்கள். எனவே இத் திட்டங்கள் மூலம் மக்கள் அல்ல ஆலோசகர்களும் அதிகாரிகளும் அரசியல்வாதிகளுமே நன்மைகளைப் பெறுகின்றனர். பொருளாதார அபிவிருத்தியை மக்கள் உணரக்கூடியதாக - அனுபவிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். அதுதான் நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்தி.

அண்மையில் கிளிநொச்சி நகரம் முழுவதும் மின்விளக்குகள் பொருத்தப்பட்டன. கிளிநொச்சி நகரமே ஒளிவெள்ளத்தில் மிதந்தது. ஆனால் இன்றைய நிலைமை என்ன? மூன்றரை இலட்சம் ரூபா மின் கட்டண பாக்கி இருந்ததனால் மின்சார சபை மின் இணைப்பை துண்டித்துவிட்டது. அன்று ஒளிவெள்ளத்தில் மிதந்த கிளிநொச்சி நகரம் இன்று இருளில் மூழ்கிக் கிடக்கின்றது. அப்படியென்றால் இம் மின் திட்டத்தினால் நன்மை அடைந்தவர்கள் யார்? அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் ஒப்பந்தகாரர்களுமே. மக்கள் நன்மையை அனுபவிக்கவில்லை.

குறுங்கால அரசியல் நோக்கங்களுக்காக - இலாபங்களுக்காக அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் மக்களுக்கு எதுவித நன்மையையும் தரப்போவதில்லை என்பதற்கு இது ஓர் உதாரணம்.

இரணைமடு குளத்திலிருந்து நீர் எடுப்பது தொடர்பாக விவசாயிகள் தெரிவித்த அச்சங்களுக்கு திட்ட அதிகாரிகளும் ஆலோசகர்களும் கூறிய பதில்களில் வெளிப்படைத் தன்மை காணப்படவில்லை. எப்படியாவது திட்டத்தை நடைமுறைப்படுத்தியே ஆகவேண்டும் என்ற நோக்கம் மட்டுமே காணப்பட்டது. விவசாயிகளுக்கு தங்களின் வாழ்வாதாரம் பறிபோய்விடுமோ என்ற பயம். அதிகாரிகளுக்கும் ஆலோசகர்களுக்கும் ஒதுக்கப்பட்ட பணம் திரும்பிப் போகப் போகின்றதே - தாங்கள் இதுவரை காலமும் அனுபவித்து வரும் வசதிகள் இல்லாமல் போகப் போகின்றதே என்ற பயம். விவசாயிகளால் தெரிவிக்கப்பட்ட அச்சங்களுக்கு அதிகாரிகளும் ஆலோசகர்களும் தெளிவான பதில்களைக் கூறவில்லை.

இரணைமடுக்குள நீர் மாவட்டத்திற்கே போதுமானதாக இல்லை என்ற நிலையில் எவ்வாறு நீரைப் பெறுவது என்ற விவசாயிகளின் வினாவிற்கு ஆலோசகர்களின் பதில் பின்வருமாறு இருந்தது. குளக்கட்டு இரண்டடி உயர்த்தப்பட்டு அதனால் கிடைக்கும் மேலதிக நீர்தான் இத் திட்டத்திற்குப் பயன்படுத்தப்படும்.

இங்கு எழும் வினா என்னவென்றால் சிறுபோகத்தில் 36,000 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் பயிரிடுவதற்கு இந் நீர் போதுமானதா? உண்மையில் 36,000 ஏக்கர் நிலப்பரப்பு நீருக்காக காத்திருக்கின்ற உண்மையை மறைத்து 20,000 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர். சரி இந்த 20,000 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் பயிரிடுவதற்காவது நீர் வழங்கப்படுமா? என்ற விவசாயிகளின் வினாவிற்கு அதிகாரிகள் பதில் கூறவில்லை. மாறாக சிறுபோக காலத்தில் விவசாயிகள் நெல் பயிரிடாமல் சிறு தானியங்களைப் பயிரிட வேண்டும் என்று ஆலோசனை கூறுகின்றார்கள்.

இந்த ஆலோசனை உள்நோக்கம் கொண்டது. சிறு தானியப் பயிர்ச் செய்கைக்கு பெருமளவு நீர் தேவைப்படாது. இதன்மூலம் நீரைச் சேமித்து எப்படியாவது நீர் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்திவிட வேண்டும் என்ற முனைப்புத்தான் அதிகாரிகளிடம் காணப்படுகின்றது. இந்த ஆலோசனையினால் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கும் வட மாகாண மக்களுக்கும் ஏற்படப்போகும் பாதிப்புக்களை இவ் அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவில்லை.

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் யாழ். மாவட்டத்தில் சிறுபோகத்தில் நெல் பயிரிடுவது கிடையாது. 2012ஆம் ஆண்டு சிறுபோக காலத்தில் வட மாகாணத்தின் மொத்த நெல் உற்பத்தி 35,928 மெ.தொன் ஆகும். இதில் 18,298 மெ.தொன் கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதன்படி 2012 சிறுபோக காலத்தில் மாகாணத்தின்மொத்த நெல் உற்பத்தியில் 51 சதவீதம் கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவ் உற்பத்தி 14,260 ஏக்கர் நிலப்பரப்பில் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் சிறுபோக காலத்தில் கிளிநொச்சி விவசாயிகள் நெல்லைப் பயிரிடாமல் சிறுதானியப் பயிர்ச் செய்கையை மட்டும் மேற்கொள்ளவேண்டும் என்ற ஆலோசனையின் மூலம் வட மாகாணத்தின் சிறுபோக நெல் உற்பத்தி 50 சதவீதம் வீழ்ச்சியடைந்துவிடும் என்ற உண்மை அதிகாரிகளுக்குத் தெரியாதா?

விவசாயிகளின் மற்றுமொரு அச்சம் வறட்சிக்காலத்தில் என்ன நடைபெறும் என்பதாகும். இதற்கு ஆலோசகர்கள் கூறிய எளிமையான பதில், அக்காலங்களில் தண்ணீரை எடுக்க மாட்டோம் என்பதாகும்.

இது விவசாயிகளைத் திருப்திப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட மிக மோசமான பதில் ஆகும்.

இவ்வாறு நீர் எடுக்காமல் விட்டால் யாழ். மாவட்ட மக்களுக்கு இக்காலப் பகுதியில் நீர் வழங்க முடியாமல் போகும். இவ்வளவு காலமும் நீரை வழங்கிவிட்டு திடீரென் நீர்வழங்குவதனை நிறுத்தினால் அம் மக்களுக்கு நீர் எங்கிருந்து கிடைக்கும்? இக் காலப்பகுதியில் நீர் வழங்குவதற்கு மாற்றுத் திட்டம் ஏதாவது உண்டா? கிளிநொச்சி மக்கள் உங்களுக்கு நீர் வழங்க மறுக்கின்றார்கள் என்று யாழ். மாவட்ட மக்களுக்கு கூறப் போகின்றார்களா?

இதன்மூலம் எதிர்காலத்தில் பிரதேச வாதத்தைக் கிளப்பிவிடப் போகின்றார்களா? ஒரு தாய் பிள்ளைகளாக வாழ்பவர்களை தண்ணீருக்காக மோதச் செய்யப் போகின்றார்களா?

இங்கு இரண்டு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

1. இரணைமடு குள அபிவிருத்தி வேலைகளும் அதனைச் சூழவுள்ள விவசாய நில அபிவிருத்தி வேலைகளும்.

2. யாழ் மாவட்ட மக்களுக்கு தூய குடிநீர் வழங்கும் திட்டம். இவை இரண்டையும் ஒன்றாக இணைத்துப் பார்க்கத் தேவையில்லை. யாழ் மாவட்ட மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை முதலில் அம்மாவட்டத்திற்குள்ளேயே மேற்கொள்ளவேண்டும்.

1. மழை நீரைச் சேகரிக்கும் திட்டம்.

2. மாவட்டத்தில் காணப்படும் நன்னீர் நிலைகளை அபிவிருத்தி செய்தல்.


3. கடல் நீரை நன்னீராக்கும் திட்டம்

இவை தொடர்பான விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு செயற்திட்டங்களை வகுக்கவேண்டும்.

இரணைமடுக்குளத்திலிருந்து யாழ். மாவட்டத்திற்கு நீர் வழங்கும் திட்டத்தை கைவிடுவதன் மூலம் இரணைமடு குள அபிவிருத்தி வேலைகளையும் கைவிட வேண்டும் என்பது அர்த்தம் அல்ல. ஆசிய அபிவிருத்தி வங்கியோடு மீள பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து, இத் திட்டத்தை கிளிநொச்சி மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான திட்டமாக மாற்றுவதற்கு சாத்தியப்பாடுகள் உண்டா என்பதனை ஆராயவேண்டும்.

இரணைமடு குள அபிவிருத்தி வேலைகளுக்காக விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியமும் இலங்கை அரசாங்கமும் இணைந்து 29.32 மில்.டொலர் நிதியுதவியுடனான ஓர் திட்டத்தை 31-5-2012இல் ஆரம்பித்துள்ளது. இவ்வேலைகள் 30-3-2017இல் முடிவடையவேண்டும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 20,890 ஏக்கர் நிலம் நீர்ப்பாசன வசதியைப் பெறும் எனவும் 2000 குடும்பங்கள் நன்மையடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்ட வேலைகள் இப்போது ஆரம்பகட்டத்திலிருப்பதனால் வட மாகாணசபை காலம் தாழ்த்தாமல் இதனைப் பொறுப்பெடுத்து கண்காணித்து செயற்படுத்தவேண்டும். மாகாண விவசாய, நீர்ப்பாசன அமைச்சருக்கு இவை சமர்ப்பணம்.



# பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டில் சூசகமாக தெரிவித்தார் ஜனாதிபதி



(கொழும்பு)

அடுத்த வருடம் தேர்தல் ஆணடாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதில் முக்கிய தேர்தல்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஜனாதிபதி தேர்தல் அல்லது பொதுத்தேர்தல் என்பனவற்றில் ஒன்று நடத்தப்படும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற போது இந்தத் தகவலை ஜனாதிபதி வெளியிட்டார்.

இந்தக்கூட்டத்தில் சுமார் 1000 பேர் வரை பங்கேற்றிருந்தனர். இதேவேளை தென் மற்றும் மேல மாகாண சபைத்தேர்தல்களும் அடுத்த ஆண்டில் நட்த்தப்படவுள்ளதை ஜனாதிபதி உறுதி செய்தார். இதற்கிடையில் எதிர்வரும் ஜனவரி 6 ஆம் திகதியன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பாலஸ்தீனத்துக்கும் இஸ்ரேலுக்கும் விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இதற்கு முன்னர் தென் மாகாண மற்றும் மேல்மாகாண சபைகள் கலைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உள்ளூராட்சி மட்டத்தில் அரசாங்க கட்சி உறுப்பினர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பிரச்சினை அதன்காரணமாக உள்ளூராட்சி வரவு-செலவுத்திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டமை போன்ற காரணங்களை முன்வைத்தே இந்த தேர்தல்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

# கடற்றொழில் அமைச்சர் விரைகிறார் புதுடில்லிக்கு

## சூடு பிடிக்கிறது மீனவர் விவகாரம்



அத்துமீறும் இந்திய மீனவர்கள் தொடர்பான விவகாரம் தொடர்பாக இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படவுள்ளது. இதற்காக கடற்றொழில் அமைசசர் மிக விரைவில் புதுடில்லிக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளார்.

கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன விரைவில் இந்தியாவுக்கு பயணம் செய்து இந்திய விவசாயத்துறை அமைச்சர் சரத் பவாருடன் பேச்சு நடத்தவுள்ளார்.

இதன்போது தமிழக மீனவர்களும் இலங்கையின் மீனவர்களும் இரண்டு பக்க கடற்பரபபுக்குள் அத்துமீறும் செயல்கள் தொடர்பில் பேச்சு நடத்தப்படவுள்ளது. அமைச்சர் ராஜித சேனாரத்னவின் பயணத்துக்கான ஏற்பாடுகளை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் மேற்கொண்டு வருகிறது.

எனினும் இன்னும் இது தொடர்பில் தமக்கு உத்தியோகபூர்வ அழைப்புக்கள் வரவில்லை என்று ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

# மருத்துவமனை ஊழியர்கள் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி களுத்துறை பதுரலிய வைத்தியசாலையின் அனைத்து ஊழியர்களும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்

இதனால் தற்போது வைத்தியசாலை மூடப்பட்டுள்ளதாக எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் நோயாளர் ஒருவருக்கு சிகிச்சையளிப்பதற்காக வைத்திய அதிகாரி வருவதில் ஏற்பட்டதாக கூறப்படும் தாமதத்திற்கு எதிராக நேற்றுச் சிலர் பதுரலிய வைத்திய சாலை அருகே எதிர்ப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட அனைத்து வைத்தியசாலை ஊழியர்களும் பணியைத் தொடர முடியாது என அறிவித்துள்ளதாக மேல் மாகாண சுகாதார அமைச்சர் ஜகத் அங்ககே தெரிவித்துள்ளார்

எவ்வாறாயினும் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைபெற்றுவரும் நோயாளர்களுக்கு பிரச்சினை ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒழுங்குகளை செய்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கமரூன் தமிழர்களின் பிரதிநிதியா?

## பிரித்தானிய அரசிடம் கண்டன மகஜர்



(கொழும்பு)

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் பொதுநலவாய கொழும்பு மாநாட்டின் போது புலம்பெயர்ந்த தமிழர்களின் பிரதிநிதியை போன்று செயற்பட்டதாக குற்றம சுமத்தப்பட்டுள்ளது.

பிரித்தானிய இலங்கை குழு இந்தக்குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது.

பொதுநலவாய நாடுகள் மாநாட்டின் போது கமரூன், இலங்கையின் உள்ளகப் பிரச்சினையில் தலையிட்டதாக குற்றம் சுமத்தி, இந்தக்குழு கமரூனுக்கு மனு ஒன்றையும் கையளித்துள்ளது.

ஒரு ஜனநாயக நாடு ஒன்றின் உள்ளூர் விடயங்களில் மற்றைய நாடு ஒன்று தலையிடும் போது அது விடுதலைப் புலிகளின் கனவு நனவானமைக்கு சமனானது என்றும் பிரித்தானிய இலங்கைக் குழு குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம் இலங்கை தொடர்பாக பிரித்தானிய முடிவுகளை மேற்கொள்ளும் போது அங்கு சிங்களவர்களும் முஸ்லிம்களு[ம்] வாழ்கிறார்கள் என்பதை கருத்தில் கொள்ளவேண்டும் என்றும் பிரித்தானிய இலங்கைக்குழு கோரியுள்ளது.

இந்தநிலையில் தமது மனுவுக்கு பிரித்தானிய பிரதமர் காரியாலயத்தில் இருந்து பதில் கிடைத்துள்ளதாக பிரித்தானிய இலங்கை குழுவின் தலைவர் ஜனக அழப்பெரும, தாம் குறித்த மனுவை பரிசீலனை செய்வதாக அந்த பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.



# மகிந்த ஆட்சியை அகற்ற வீதியில் இறங்கிப் போராடுவோம்

## ஐ.தே.கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

மகிந்த ஆட்சியை அகற்றவும் அவரை வீட்டுக்கு அனுப்பவும் வீதியில் இறங்கிப் போராட்டம் நடாத்தப்போவதாக ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் முதல் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தவிருப்பதாக, ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவ பீடத்தின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் கருஜெய சூரிய தெரிவித்துள்ளார்.

சிறிகொத்த தலைமையகத்தில நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் 55 ஆவது வருடாந்த மாநாட்டில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவிததுள்ளார்.

2014 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல்கள் சிலவும் பொதுத் தேர்தல் ஒன்றும் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தேர்தல்களில் அரசாங்கததை தோல்வி அடைய செய்ய முடியாது என்று நினைககாமல், அது சாத்தியப்படும் எனற எண்ணத்துடன் முன்செல்லவேணடும என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் கட்சியின் தேசிய மாநாட்டின் போது, கட்சியின் தலைமைத்துவ சபையை பொறி முறைப்படுத்தல், நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்தல், வாழ்க்கைச் செலவைக கட்டுப்படுத்தல் மற்றும் பொது மக்களுக்கான நிவாரணங்களை வழங்கும் அரசாங்கத்தை உருவாக்கல் ஆகிய யோசனைகள் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

# நள்ளிரவு நேரம் தலைநகரில் உலாவரும் அமைச்சர்கள்

## மகிந்தவிடம் வாங்கிக்கட்டினர்

(கொழும்பு)

இரவில் கொழும்பு நகரில் அநாவசியமாக சுற்றித் திரியும் அமைச்சர்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார். அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் சில அமைச்சர்களை ஜனாதிபதி அழைத்து, அறிவுரை வழங்கியுள்ளார். இரவு நேரப் பயணங்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பதவிகளுக்கு ஏற்ற வகையில் அனைவரும் கண்ணியமாகச் செயற்படவேண்டும்.

ஜனாதிபதி கடுமையான தொனியில் எச்சரிக்கை விடுத்ததாகவும், குறித்த அமைச்சர்கள் அமைதியாக அறிவுரையை ஏற்றுக்கொண்டு வெளியேறிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் கட்சியின் சில அமைசசர்கள், பிரதி அமைச்சர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கொழும்பில் இரவில் சுற்றித் திரிவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பிலேயே ஜனாதிபதி அவர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# சூடானில் தொடர்ந்து பதற்றம் இலங்கையரின் பாதுகாப்பில் கரிசனை

தென்சூடான் நாட்டிற்கு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்வது குறித்து அவதானமாக இருக்குமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. தென் சூடானில் இன மோதல்கள தீவிரமடைந்துள்ளன. இதன் காரணமாக அங்கு வேலை வாய்ப்பு பெற்றுச் செல்லும் இலங்கையர்கள் தமது பாதுகாப்பு தொடர்பில் அவதானமாக செயற்பட வேண்டும் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் கோரிக்கை விடுத்துள்ளது. தென்சூடானில் இலங்கை பணியாளர்கள் 75 பேர் வரையில் பணியாற்றுகின்ற நிலையில் அவசியம் ஏற்படில் அவர்களை மீண்டும் நாட்டிற்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் டெங்கு தொற்று அபாயம்

## எச்சரிக்கிறது சுகாதார அமைச்சு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் டெங்கு நோய் பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணத்தின் சில பகுதிகளில் டெங்குநோய்த் தொற்று பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பருவப் பெயர்ச்சி மாற்றத்தினால் இந்த ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், வவுனியா, கிழக்கு மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்தில் இவ்வாறு டெங்கு பரவக் கூடிய அபாயம் ஏறபட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் தர்ம வன்னிநாயக்க தெரிவித்துள்ளார்.

டெங்கு ஒழிப்பு குறித்து போதியளவு கவனம் செலுத்துவதன் மூலம் ஆபத்துக்களை தவிர்க்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு நோயினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை தவிர்க்க அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

# பண்டிகைக்காலத்தில் அதிரடிச்சோதனை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியாகவுள்ள உணவு உற்பத்தி மற்றும் விநியோக இடங்கள் எதிர்வரும் வாரமளவில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பண்டிகைக் காலங்களை இலக்கு வைத்தே இந்த சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பொது சுகாதார சேவையின் பிரதி பணிப்பாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதனிடையே, உணவு உற்பத்தி செய்யப்படும், விநியோகிக்கும், விற்பனை செய்யப்படும் இடங்கள் சுற்றி வளைப்புக்கு உட்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான இடங்கள் தொடர்பில் ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான இடங்கள் தொடர்பில் தகவல்களை வழங்குமாறும் சுகாதார சேவையின் பிரதிப் பணிப்பாளர் சரத் அமுனுகம பொது மக்களைக் கோரியுள்ளார்.

# ஜெபவாழ்வில் மக்களுக்கான சேவை

# யாழ்.ஆயர் முன்னுதாரணம்

## மன்னார் ஆயர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

ஐம்பது வருடங்கள் ஜெப வாழ்க்கையின் மூலமாக மக்களுக்காக சேவையாற்றிய பெருந்தகை யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ். மரியன்னை தேவாலயத்தில் நடைபெற்ற யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பொன் விழா நிகழ்வில் கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றுகையிலேயே மன்னார் ஆயர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறு வயதில் இருந்து பெற்றோர்களினால் இறை பணிக்காக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கேற்ப ஜெபவாழ்க்கைக்கு அர்ப்பணிக்கப்பட்ட தோமஸ் சவுந்தரநாயகம் தமது அரும்பணிகாரணமாக மன்னார் மறைமாவட்ட ஆயராகவும் அதன் பின்னர் யாழ்.மாவட்ட ஆயராகவும் கத்தோலிக்கத்திருச்சபையினால் நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னர் மக்களுக்கு அரும்பணியாற்றி இன்று ஐம்பது வருடங்களைப் பூர்த்தி செய்திருப்பதனையிட்டு தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இதனைத் தொடர்ந்து சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் தலைவரும் வாழ்நாள்பேராசிரியரும் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமாகிய பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆயர் குறித்து வாழ்த்துரையில் யுத்தகாலத்தின் போது பிரஜைகள் குழு, சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவுடன் இணைந்து ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் மக்களுக்கு அரும்பணியாற்றியிருக்கின்றார்.

வெளிநாட்டவர்கள் எமது பகுதிக்கு வருகின்றபோது துணிச்சலுடன் இங்குள்ள நிலைமைகளை அவர்களுக்குத் தெளிவுபடுத்தி மக்களுக்காக அரும்பணியாற்றியிருப்பதாகவும் தீவகம் கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் அங்கிருந்து தமது மக்கள் பணியை ஆரம்பித்ததாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து குருமாரின் வாழ்துரைகள் இடம்பெற்றன. (பா)



கொழும்பு ரோயல் கல்லூரி நவரங்கல மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கலாபூஷண விருது வழங்கும் நிகழ்வில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மீரா லெம்பைலாபீருக்கு கலை அலுவல்கள் அமைச்சினால் கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது. (105)

# மானிய விலையில் விவசாய உரம்

வவுனியா வடக்கு நெடுங்கேணி கமநல சேவை நிலையத்தினால் 3500 ஏக்கருக்கு மானிய விலையில் விவசாய உரம் வழங்கப்படுகிறது. நெடுங்கேணி கமநல சேவைக்குட்பட்ட நெடுங்கேணி குளம் அரியாமடு ஒலுமடுக்குளம் இலங்கத்திக்குளம் மருதங்குளம் கொத்தங்குளம் மாமடுக்குளம் இறம்பைக்குளம் கிரிசுட்டான்குளம் கற்குளம் பட்டரைபிரிந்தகுளம் ஆகிய குளங்களுக்கு கீழே நெற்செய்கையினை மேற்கொண்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (40)

# சேதமடைந்து காணப்படும் கைத்தொழில் பேட்டைவீதி

(அச்சுவேலி)

அச்சுவேலி தென்மூலைச் சந்தியில் இருந்து கைத்தொழில் பேட்டைக்குச் செல்லும் வீதி சேதமடைந்து காணப்படுவதாக பயணிகளால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதியான கடந்த பல வருடங்களாக புனரமைப்புப் பணிகள் இன்றி குண்டும், குழியுமாக போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் உள்ளது.

இந்த வீதியை பாடசாலை மாணவர் முதல் பல்வேறு தரப்பினர் தினமும் பயன்படுத்தி வரும் நிலையில் இவ்வாறு புனரமைக்கப்படாது இருப்பது பயணத்தின் போது வேதனை தரும் விடயமாகவுள்ளதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இந்த வீதியின் புனரமைப்புப் பணிகளை துரித கதியில் முன்னெடுத்து பயணிகளின் இயல்பான போக்குவரத்திற்கு வழி ஏற்படுத்தி உதவுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (85)

# யாழ்.நகரில் களைகட்டும் நத்தார் வியாபாரம்

(குருநகர்)

நத்தார் மற்றும் புதுவருடம், தைப்பொங்கல் பண்டிகைக் கால வியாபாரங்கள் யாழ்.நகர், புறநகர்ப் பகுதிகளிலும் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது.

உடுபுடவைகள் நத்தார் தாத்தா பொம்மை மற்றும் சருகைகள், பலவர்ண மின்குமிழ், சோடனைக் கடதாசிகள் சவுக்குக் கிளைகள் என்பவற்றுடன் கேக் தயாரிப்புப்பொருட்களைக் கொள்வனவு செய்வதில் மக்கள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

குருநகர், கல்வியங்காடு மற்றும் சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, சாவகச்சேரி புறநகர்ப்பகுதிகளிலும் பண்டிகைக் கால வியாபாரம் களை கட்டத்தொடங்கியுள்ளது. அதனால் பிரத்தியேக நடைபாதைக் கடைகளும் புதிது புதிதாக அமைக்கப்பட்டுள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது. இதன் காரணமாக நகரப் பகுதி வீதிகளில் மக்கள் கூடுவதால் போக்கு வரவுகளில் நெருக்கடிகள் தோன்றி வருகிறது. (68)

# எண் ஜோதிடப்படி 2014 உங்களுக்கு எப்படி?

## பிறந்த திகதிகள் 4-13-22-31

சர்ப்பக்கிரகமான இராகுவின் ஆதிக்கராகிய உங்களை 2014ஆம் ஆண்டில் 2ஆம் எண் சந்திரனே ஆட்கொண்டு சரித்திரம் படைக்க வைக்கப்போகின்றார். பொறுமை சகிப்புத்தன்மை விடாமுயற்சியை கைக்கொண்டால் அதிர்ஷ்டதேவதை அரவணைப்பாள். புதிய இடங்களில் வியாபாரநிலையங்களை நம்பித்திறவுங்கள். பங்கினை முறித்துக்கொண்டு தனியே இயங்கத் தலைப்படவும். கைவிட்டிருந்த சகோதர உறவு மீண்டும் துளிர்விடும். வாய் வல்லமையினால் ஈடுபடுகின்ற காரியங்களில் வெற்றித்திருமகனாக விளங்கலாம். பிள்ளைகளின் அழைப்பினால் பெற்றோருக்கு வெளியூர் செல்லும் யோகமுண்டாகும். வீசா கிடைத்து நெஞ்சிற்கு நிம்மதி பிறக்கும். காலாவதியான பொருட்கள் பற்றி விழிப்பாக இருங்கள். விதிகளை மீறிச் செயற்படுவதினால் போக்குவரத்தில் தண்டம் செலுத்தும் நிலை ஏற்படலாம். எதிர்பாராது சிலருக்கு சுவீப்பில் அதிர்ஷ்டம் உண்டாகலாம். பிறருக்கு உதவச் சென்று உபத்திரவத்தில் சிக்கும் நிலை ஏற்படலாம். விவாக முயற்சிகளில் காணப்படும் சிக்கல் முடிச்சுக்கள் அகன்றுவிடும். நண்பர்கள் பொறுத்தகட்டத்தில் கைதூக்கி விடுவர்.

உங்கள் பெயரினை 28 எண் தவிர்த்து 1ஆம் எண்ணிலேயே வையுங்கள். கூட்டெண் 8 வரின் மட்டுமே 5ஆம் நம்பர் நலந்தரும் எண்ணாக எண்ணுங்கள். வெளிர் நீலக்கல் அல்லது கோமேதகத்தை ஆபரணங்களில் பதிக்கவும். அதிர்ஷ்ட நிறமாக நீலநிற ஆடைகளே ஏற்றது. கையொப்பம் வைக்கின்ற போது பின்வரும் வச்னங்களை மனதில் எண்ணுக "நாளாந்தம் எல்லாவழிகளிலும் என்னுடைய வாழ்க்கை முன்னேறி முன்னேறி வருகின்றது" அம்பாள், மாதா முதலான பெண் தெய்வ வழிபாடு கைக்கொள்ளத்தக்கது. 1,10,19,14,23 திகதிகளில் புதிய முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்.

(தொடரும்)

ஜோதிர் வித்யாரத்னா
வி.ஏ.சிவராசா

# முரசின் இன்றைய பலன்

(23.12.2013 திங்கட்கிழமை)



விஜய வருஷம் மார்கழி மாதம் 08 ஆம் திகதி.
மக நட்சத்திரம் மு.ப. 01.18 வரை. பின் பூரம்.
சித்தம்/சஷ்டி.
இராகுகாலம் 07.55 - 09.25 வரை. சுபநேரம் 12.25 - 01.55 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** பிரச்சினைகளை முழுவுக்கு கொண்டுவர யதார்த்தமான முடிவினை எடுத்தல், பதவிக்குவருமென எதிர்பார்த்தகேடு மனுவினால் அற்றுப்போனதில் மகிழ்வு.

**ரிஷபம்** தாழ்வு மனப்பான்மையைக் கைவிட்டதால் துணிவுடன் செயலாற்ற முன்வரல், பிரச்சினைகளை வென்றெடுக்க பெரியோரின் துணையைத்தேடிச் செல்லல்.

**மிதுனம்** இலகுவாக முடியுமென நம்பி இருந்தபணி சுமையாகி தவிக்க வைத்தல், குடும்பத்தில் மகழ்வுதாண்டவமாடுவதினால் கவின்நிலை ஏற்படல்.

**கடகம்** அனுமதி கிட்ட பகீரதப்பிரயத்தனத்தை மேற்கொண்டதால் காரிய ஜெயம், நிலுவையைப் பெற நம்பிக்கையீனம் ஏற்பட்டதால் காவல் துறையை நாடுதல்.

**சிம்மம்** எதிர்பாராத பொறுப்புக்கள் தலைமேல் சுமத்தப்படலாம், ஓய்வு நேரத்தில் குடும்ப அங்கத்தவர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியைத் தக்க வைப்பீர்கள்.

**கன்னி** காணிப்பிரச்சினை தலைதூக்கல், தொலைபேசிச்செய்தியால் காது குளிரும் மகழ்வான சங்கதிவரும்.

**துலாம்** அரசுப் பணி ஏற்க மனம் வராமை, நிலுவையைச் செலுத்தாததால் காவல்துறை செல்ல முஸ்தீபு.

**விருச்சிகம்** பொறுப்பில்லாமல் பணம் கொடுத்ததால் அவலநிலை வந்து கவலை தக்க வைத்தல், புதிய ஜீவன் ஏற்படுவதினால் குடும்பத்தில் குதூகலம் தோன்றுதல்.

**தனுசு** புத்திமதியைக் கேட்டதனால் வரவிருந்த பேராபத்து மறைந்து விடுதல், கனவு கண்ட சுபவாழ்வு கானல் நீராகியதால் கவலை வாட்டுதல்.

**மகரம்** அடகு பொருள் மீட்டெடுக்க நண்பரின் உதவியை நாடிச்செல்லல், பொறுமை காத்ததால் காரிய ஜெயம்.

**கும்பம்** வெளியூர் பயணம் வெற்றியடைதல், சுபகாரியம் நடாத்த நண்பர் பண உதவி செய்தல்.

**மீனம்** பெற்றோரைப் பராமரிக்க துணைதேடிப் பெற்றதால் நிம்மதி, போட்டிகளில் பரிசில்களும் பாராட்டும் பெறுதல்.

# தொடர் நியூசிலாந்து வசம்



(ஹமில்டன்)

மூன்றாவது டெஸ்டில் எட்டு விக்கெட் வித்தியாசத்தில் இலகுவாக வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி, டெஸ்ட் தொடரையும் 2-0 என கைப்பற்றியது.

நியூசிலாந்து சென்றுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி, 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதலிரண்டு போட்டியின் முடிவில், நியூசிலாந்து அணி 1-0 என முன்னிலையில் இருந்தது. மூன்றாவது டெஸ்ட் ஹமில்டனில் நடைபெற்றது. முதல் இனிங்ஸில் மேற்கிந்தியத்தீவுகள் 367 ஓட்டங்கள், நியூசிலாந்து 349 ஓட்டங்கள் எடுத்தன.

இரண்டாவது இனிங்ஸில் மே.தீவுகள் அணி 103 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதன் மூலம் நியூசிலாந்து அணிக்கு 122 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. மூன்றாவது நாள் ஆட்ட நேர முடிவில், இரண்டாவது இனிங்ஸில், நியூசிலாந்து அணி விக்கெட் இழப்பின்றி ஆறு ஓட்டங்கள் பெற்றிருந்தது.

இந்நிலையில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தில் இரண்டாவது இனிங்ஸை தொடர்ந்த நியூசிலாந்து அணிக்கு புல்டன் (10) ஏமாற்றினார். பின் இணைந்த ருதர்போர்ட்,வில்லியம்ஸன்ஜோடி பொறுப்பானஆட்டத்தை வெளிப்படுத்தியது. வீராசாமி பெருமாள் சுழலில் அரைசதம் கடந்த வில்லியம்ஸன் சீக்கினார். எதிர்முனையில் இருந்த புல்டன் தொடர்ந்து ஓட்டவேட்டை நடத்த, நியூசிலாந்து அணி இரண்டாவதுஇனிங்ஸில் 2 விக்கெட்டுக்களை 124 ஓட்டங்களைப் பெற்று எட்டு விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரை நியூசிலாந்து அணி 2-0 என கைப்பற்றியது. இதில் புல்டன் ஆட்டமிழக்காது 48, வில்லியம்ஸ் 56 ஓட்டங்களைப் பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகன், தொடர் நாயகன்விருதை ரெய்லர் வென்றார்.இரு அணிகளுக்குமிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்வான் திடீர் ஓய்வு



(சிட்னி)

இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக திடீரென அறிவித்துள்ளார். இங்கிலாந்து அணியின் அனுபவ சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் (வயது-34). அவுஸ்ரேலியா சென்றுள்ள இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட பாரம்பரிய ஆஷஸ் தொடரில் பங்கேற்கிறது. முதல் மூன்று போட்டிகளிலும் படுதோல்வியடைந்த இங்கிலாந்து அணி தொடரை 0-3 என இழந்தது. இதில் பங்கேற்று வரும் இவர் சர்வதேச போட்டிகள் மற்றும் முதல் தர போட்டிகளில் இருந்து உடனடியாக ஓய்வு பெறுவதாக திடீரென அறிவித்துள்ளார். அவரது இந்த முடிவு அதிர்ச்சியானது. போட்டி நடைபெற்று கொண்டிருக்கும் தொடரின்போது ஓய்வு அறிவித்தது அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஓய்வு குறித்து ஸ்வான் குறிப்பிடுகையில், பேர்த்தில் நடைபெற்ற 3ஆவது டெஸ்டின் போதே நான் ஓய்வு முடிவை எடுத்துவிட்டேன். டெஸ்ட் போட்டியில் பந்து வீசுவதற்கு உரிய உடல்நிலை எனக்கு தற்போது இல்லை என்றார்.

ஸ்வான் இதுவரை 60 டெஸ்டில் 255 விக்கெட்களைக் கைப்பற்றியுள்ளார். தவிர, 79 ஒருநாள் போட்டிகளில் 104 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

# கொல்கத்தாவில் உலகக் கிண்ணம்



அடுத்த ஆண்டு பிரேசிலில் நடைபெறவுள்ள உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் சம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் (பிபா) சார்பில் வழங்கப்படவுள்ள உலகக் கிண்ணம் நேற்று கொல்கத்தாவிற்கு கொண்டு வரப்பட்டது.

இந்த உலகக் கோப்பை உலகம் முழுவதிலுமுள்ள பல்வேறு நாடுகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக இப்போது பூடானில் இருந்தே நேபாளத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் இருந்து கொல்கத்தாவுக்கு நேற்று கொண்டு வரப்பட்டது.

6.175 கிலோ கிராம் எடை கொண்ட தங்கத்தால் ஆன இந்த உலகக் கோப்பை கால்பந்துக்கு பெயர்போன கொல்கத்தா இரசிகர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. இந்த உலகக் கோப்பை 88 நாடுகளுக்கு எடுத்து செல்லப்படவுள்ளது.. 88 நாடுகளுக்கும் இந்த கோப்பை எடுத்துச் செல்லப்படும்போது 1 இலட்சத்து 49 ஆயிரத்து 576 கி.மீ. பயணித்திருக்கும். 8 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இந்த கோப்பையை பார்த்திருப்பார்கள் என பிபா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கிண்ணம் வென்றது பேயர்ன் முனிக்

(அகாதிர்)

சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிபா) கிளப் அணிகளுக்கான உலக கோப்பை கால்பந்து தொடரின் கிண்ணத்தை பேயர்ன் முனிக் அணி கைப்பற்றிக்கொண்டது.

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் 10ஆவது கிளப் அணிகளுக்கு இடையே உலக கோப்பை தொடர் மொராகோவில் நடைபெற்றது. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பேயர்ன் முனிக் அணியும், ராஜா கஸமிளன்ஸி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய பேயர்ன் முனிக் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

# மோர்கல் காயம் அணிக்கு இழப்பு

(ஜோகனஸ்பேர்க்)

மோர்கல் காயமடைந்தது அணிக்கு மிகப் பெரிய இழப்பு என தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் பிலாண்டர் தெரிவித்துள்ளார். மோர்கல் இல்லாததுமிகுந்த வேதனையாக உள்ளது. சுழற்பந்து வீச்சாளர்கள் அதிக ஓட்டங்கள் விட்டுக்கொடுக்கும் நிலையில் நான், ஸ்ரெய்ன், கலிஸ் ஆகியோர் பந்து வீசும் சுமையை பகிர்ந்து கொள்ளும் நிலையில் உள்ளோம். கப்டன் ஸ்மித்துக்கு இது ஒரு கடினமான நாள்.அடுத்த டெஸ்ட் போட்டியில்மோர்கல் பங்குபற்றக்கூடிய சூழ்நிலை பெரும்பாலும் இல்லை என்றே தோன்றுகின்றது. இது எங்கள் அணிக்குப் பெரும் இழப்பாகவே நான் கருதுகின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாதுகாப்பு திருப்தியெனில் வருவோம்

பாகிஸ்தானின் பாதுகாப்பு நிலவரங்கள் திருப்திகரமாக இருந்தால், இலங்கையின் கிரிக்கெட் அணி அங்கு சுற்றுலா போட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை கிரிக்கெட் சபையின் அறிக்கை ஒன்றை மேற்கோள்காட்டி, பாகிஸ்தானிய ஊடகங்கள் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளன.

2009ஆம் ஆண்டு பாகிஸ்தான் - லாகூரில் இடம்பெற்ற இலங்கை கிரிக்கெட் அணி மீதான தாக்குதலைத் தொடர்ந்து, அங்கு எந்த கிரிக்கெட் அணியும் சென்றிருக்கவில்லை. இந்த நிலையில் பாகிஸ்தானின் பாதுகாப்பு நிலவரங்கள் திருப்திகரமாக இருந்தால், இலங்கை கிரிக்கெட் அணியை அங்கு அனுப்பத்தயாராக இருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் எதிர்வரும் நாட்களில் பாகிஸ்தான் மற்றும் இலங்கை கிரிக்கெட் தரப்புகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தை ஒன்றுக்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# புதிய பயிற்றுவிப்பாளர் மொயின்கான்

(லாகூர்)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தற்போதைய தலைமைப் பயிற்சியாளரான அவுஸ்ரேலியாவின் வட்மோரின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு பெப்ரவரியோடு முடிவுக்கு வருகிறது. அதனால் பாகிஸ்தானின் புதிய தலைமைப் பயிற்சியாளராக முன்னாள் பாகிஸ்தான் கப்டன் மொயின்கான் நியமிக்கப்படுவார் எனத் தெரிகிறது. குறுகிய கால அடிப்படையில் மொயின் கான் பயிற்சியாளராக நியமிக்கப்படுவார் எனக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் நம்பத்தகுந்த வட்டாரங்கள் பி.டி.ஐ. செய்தி நிறுவனத்திடம் கூறியதாவது, வட்மோரின் பதவிக்காலம் முடிந்தவுடன் மொயின் கான் புதிய தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்படுவார். அவர் ஆசிய கோப்பை, ருவென்ரி-20 உலகக் கோப்பை ஆகிய போட்டிகளுக்கு பாகிஸ்தானின் தலைமைப் பயிற்சியாளராக செயல்படுவார். அதன்பின்னர் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரும், முன்னாள் பயிற்சியாளருமான வக்கார் யூனிஸ் பாகிஸ்தான் அணியின் நீண்டகால தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது என்று தெரிவித்தன.



# சகீர் 300

(ஜோகனஸ்பேர்க்)

டெஸ்ட் போட்டியில் 300 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய இரண்டாவது இந்திய வீரர் என்ற சிறப்பை சகீர்கான் பெற்றுள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கெதிராக நேற்று ஜோகனஸ்பேர்க்கில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸில் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய சகீர்கான், இரண்டாவது இனிங்ஸில் கலிஸின் விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலமே இந்த மைல் கல்லை எட்டினார்.

இதுவரை 89 டெஸ்ட் போட்டிகளில் பங்குகொண்டுள்ள சகீர்கன் தனது 122ஆவது இனிங்ஸில் இந்த மைல் கல்லை எட்டினார்.

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர்களில் கபில்தேவ்வே அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவர் 435 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார்.

## தேசிய மட்ட மேசைப்பந்தாட்டம்

# 4 பிரிவுகளில் யாழ். வீராங்கனைகள் அசத்தல்




விருந்தினர்களுடன் ஒவ்வொரு பிரிவிலும் சம்பியன் பெற்றோர்




சிறந்த வீராங்கனை சிந்துஜா

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கான தேசிய மட்ட மேசைப்பந்தாட்டப் போட்டித் தொடரில் யாழ். மாவட்ட வீராங்கனைகள் நான்கு பிரிவுகளில் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றி அசத்தியுள்ளனர்.

ஆசியா ஜேர்மன் விளையாட்டுத்துறை பரிமாற்றத் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட அகில இலங்கை ரீதியிலான மேசைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் பெண்களுக்கான ஆட்டங்கள் நேற்று முன்தினம் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் 08, 10, 12, 15, 18, 21, மற்றும் திறந்த பிரிவினரிற்கான ஒற்றையர் ஆட்டங்கள் இடம் பெற்றன.

8 வயதுப் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை வீராங்கனை ஜனனி உமாசங்கர் பண்டாரவளை சசெக்ஸ் கல்லூரி வீராங்கனை தரணி கவிந்திய ஆகியோர் மோதினர்.இதில் ஜனனி உமாசங்கர் 2:0 என்ற நேர் செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தை வென்றார்.

10 வயதுப் பிரிவு இறுதிப் போட்டியில் மவுண்ட் லெவேனியா பௌத்த பாடசாலை வீராங்கனை இமல்ஷா லக்ராந்தி அதே பாடசாலை வீராங்கனை ஒஷாடி உமயங்கன ஆகியோர் மோதினர். இதில் இமல்ஷா லக்ராந்தி 2:1 எனற செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

12 வயதுப் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் பண்டாரவளை சசெக்ஸ் கல்லூரி வீராங்கனை சயூரி பவனிக மவுண்ட்லெவேனியா பௌத்த பாடசாலை வீராங்கனை இமல்ஷா லக்ராந்தி ஆகியோர் மோதினர் இதில் சயூரி பவனிக 2:0 என்ற நேர் செற் கணக்கில் வென்று சம்பியனானார்.

15 வயதுப் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் கண்டி சென். அன்ரனீஸ் கல்லூரி வீராங்கனை அயோதா சந்தீபனி கொழும்பு பிஷப்ஸ் கல்லூரி வீராங்கனை ரக்மா கம்சவை எதிர்கொண்டார். இதில் அயோதா சந்தீபனி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

18 வயதுப் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வீராங்கனை எஸ். சிந்துஜா, கொழும்பு பிஷப்ஸ் கல்லூரி வீராங்கனை அனுஷி ஜெயலத் ஆகியோர் மோதினர். இதில் எஸ். சிந்துஜா 2:0 என்ற நேர் செற் கணக்கில் வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

21 வயதுப் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வீராங்கனை எஸ். சிந்துஜா, சிவகங்கா சிவபாலன் ஆகியோர் மோதினர். இதில் எஸ். சிந்துஜா 2:0 என்ற நேர் செற் கணக்கில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

திறந்த பிரிவுக்கான இறுதிப் போட்டியில்

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வீராங்கனை எஸ்.சிந்துஜா, யாழ். இந்து மகளிர் கல்லூரி வீராங்கனை பிரதுக்ஷா ஆகியோர் மோதினர். இதில் எஸ். சிந்துஜா 2:0 என்ற நேர் செற் கணக்கில் வென்று திறந்த பிரிவில் சம்பியனாகினார்.

இதேவேளை, இப்போட்டித் தொடரில் சிறந்த வீராங்கனையாக 18 மற்றும் 21 வயதுப் பிரிவு மற்றும் திறந்த பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளில் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிய தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வீராங்கனை எஸ்.சிந்துஜா தெரிவானார்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மாகாண சபை உறுப்பினர் இ.ஆர்னல்ட் தம்பதிகள், விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவரும் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியருமான மோகன், தேசிய மேசைப்பந்தாட்ட சங்கத்தின் முன்னாள் செயலாளர் சந்தன பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு வருடமும் இடம்பெற்று வரும்போட்டிகள் இம் முறையே முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்றது. இப் போட்டிகளை யாழ். மற்றும் வவுனியா மாவட்ட மேசைப்பந்தாட்ட சங்கம் ஏற்பாடு செய்துள்ளதாக யாழ். மாவட்ட மேசைப் பந்தாட்ட சங்கத் தலைவர் மோகன் தெரிவித்தார். இப்போட்டிகளுக்கு அபான்ஸ், ஸ்ரக் இன்ரநஷனல் நிறுவனங்கள் அனுசரணை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி., 48)

---

## யாழ்ப்பாணத்து கால்பந்து சமர்

# அரையிறுதியில் ஞானமுருகன்

(உரும்பிராய்)

யாழ்ப்பாணத்து கால்பந்து சமர் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு மயிலங்காடு ஞானமுருகன் அணி முன்னேறியுள்ளது.

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் யாழ்ப்பாணத்துக் கால்பந்துச் சமர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரின் கடைசி லீக் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ஊரெழு றோயல் அணியும், மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதின. இரு அணிகளுமே பலம் வாய்ந்த அணிகள் என்பதால் இப்போட்டி குறித்து அதிக எதிர்பார்ப்பு நிலவியது. இருப்பினும் மயிலங்காடு ஞானமுருகன் அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்த முற்பட்டதுடன் இரு கோல்களைப் போட்டு முன்னிலை பெற்றிருந்தது. இதற்குப் பதில் கோல் போடும் முனைப்புடன் றோயல் அணி செயற்பட்டபோதும் இறுதி வரை அனைத்து முயற்சிகளும் முறியடிக்கப்பட்டன. நிறைவில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, நாவாந்துறை சென். நீக்கலஸ், குருநகர் பாடுமீன், நாவாந்துறை சென். மேரிஸ் அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளதாகவும், அரையிறுதி, மற்றும் இறுதிப் போட்டிகள் எதிர்வரும் தைப்பொங்கல் தினத்திற்கிடையில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இப்போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும்,போட்டியின் ஆட்டநாயகன், சிறந்த கோல் காப்பாளர் விருது போன்றனவும் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

---

# இளைஞர் வெற்றிக் கிண்ண தாச்சி இன்று முதல் அரையிறுதி




(மானிப்பாய்)

இளைஞர் வெற்றிக் கிண்ண தாச்சிச் சுற்றுப் போட்டியில் அரையிறுதிப் போட்டிக்கு தாவடி காளியம்பாள் அணி முன்னேறியுள்ளது. இதேவேளை, அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் நடைபெறவுள்ளன.

வலி. தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தும் இளைஞர் வெற்றிக் கிண்ண தாச்சிச் சுற்றுப் போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் உடுவில் உதயசூரியன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் சண்டிலிப்பாய் உதயசூரியன் அணியும், தாவடி காளியம்பாள் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே போட்டியை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த தாவடி காளியம்பாள் அணி முதல் அரைப்பாதியின் போது 5:1 என்னும் புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாவது அரைப்பகுதியில் மேலும் 3 புள்ளிகளை தாவடி காளியம்பாள் அணி பெற்றுக் கொண்டது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் 2 புள்ளியையே சண்டிலிப்பாய் உதய சூரியன் அணி பெற்றது.

போட்டி நிறைவில் தாவடி காளியம்பாள் அணி 8:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

இதேவேளை, இன்றைய தினம் நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதிப் போட்டியில் தையிட்டி வள்ளுவர் அணியும் தாவடி களியம்பாள் அணியும்மோதவுள்ளன. இரு அணிகளுமே பலம் வாய்ந்த அணிகள் என்பதால் இப்போட்டி இறுதி வரை பரபரப்புமிக்கதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மயிலிட்டி கண்ணகி, ஆலடி சிந்து அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

---

# வேலணையில் இன்று

## கழகங்களுக்கான முக்கிய சந்திப்பு

(வேலணை)

வேலணைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கழகங்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று காலை 9.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டத்தில் நடைபெறவுள்ளது.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள விளையாட்டு விழா சம்பந்தமான முக்கிய முடிவுகள் இக்கலந்துரையாடலின்போது தீர்மானிக்கப்படவுள்ளதாகவும், இதில் கலந்து கொள்ளும் கழகங்களே விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற முடியும் என்பதால் பிரதேசத்திற்குட்பட்டஅனைத்து கழகத் தலைவர், செயலாளர்களையும் தவறாது இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் ஜசிதரன் கேட்டுள்ளார். (93)

உறுப்பினர்களுக்கிடையிலான குத்துவெட்டுக்கள், முரண்பாடுகளின் தொடர்ச்சியாக மக்களது ஒற்றுமையின் வெளிப்பாடாக தமிழ் மக்களை நம்பவைத்து ஏமாற்றி இந்த உள்ளூராட்சி சபைகளை தமிழ் கூட்டமைப்பினர் கைப்பற்றிக்கொண்டிருப்பதன் போலித்தனம் இந்த வரவு - செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டதில் வெளிப்பட்டிருக்கிறது.

கிடைத்த வடக்குமாகாண சபையில் தம்முடன் ஒத்துழைக்கக் கூடிய பங்காளிக்கட்சி மாகாண சபை உறுப்பினர்களுக்கு மாத்திரம் பொறுப்புக்களை வழங்கி ஏனையோரை ஓரங்கட்ட முற்பட்ட நிலைமைகளும் இந்த வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டதில் பங்காற்றியிருக்கின்றன.

நிர்ப்பந்திக்கப்படும் நிலைமைகள் உருவாகி பிரச்சினைகளை தீர்ப்பதற்குப்பதில் அவற்றை தீராப்பிரச்சினையாக்கி அரசியல் ஆதாயம் தேடுபவர்கள் என்ற குட்டு அம்பலமாகிவிடும்.


இது தமது இனப்பற்றின் போலித்தனங்களை அம்பலப் படுத்திவிடும் என்பதால், மக்களுக்காக அரசுடன் ஏதாவது

உறுப்பினர்கள் விரும்பவில்லை என்பதையே அவர்களது வரவு - செலவுத் திட்டங்கள் மீதான வாதங்கள் வெளிப்படுத்துகின்றன.

கிழக்கில் தமிழ் கூட்டமைப்பினரின் காரைதீவு பிரதேசசபையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டம் சக

# இனி தோற்கடிப்பும் தொடர் கதையாகவே இருக்கும்

- சாலையூரான் -




தமது பிரதேச சபைகள் மூலம் தமிழ் மக்களுக்காக ஏதாவது செய்ய முற்பட்டால் அரசுடன் குறைந்தபட்ச இணக்கத்துக்கு செல்ல வேண்டும்.

வடக்கிலும் கிழக்கிலுமாக தமிழ்க் கூட்டமைப்பின் இரு பிரதேசசபைகளின் வரவு செலவுத்திட்டம் ஆளும்தரப்பு உறுப்பினர்களாலேயே தோற்கடிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு தோற்றப்பாட்டுக்காக விடுதலைக்காக புறப்பட்ட அனைத்து அமைப்புக்கள், கட்சிகளையும் இணைத்துக் கொண்டு அதனை தமிழ்

விடுதலைக்காக புறப்பட்ட போராட்ட அமைப்புக்களை தனது கூட்டுக்குள் இணைத்துக் கொண்டதன் மூலம் தாமும் விடுதலையை நேசிப்பவர்களாக காண்பிக்க முயற்சிததன் விளைவாகவும் இதனை கூறமுடியும்.

இந்த அமைப்புக்கள் தமிழரசுக்கட்சியை விஞ்சி விடக் கூடாதென்பதற்காக தமக்கு

அவ்வாறான இணக்கத்துக்கு சென்றால் அதனை அரசின் அடிவருடிகளாக எதிர்த்தரப்புக்கள் குற்றம் சாட்டுவதற்கும் பதில் கூறிக்கொண்டிருக்க வேண்டும்.

சிலசமயம் அந்தப் பதில்கள் சற்றுப் பிசகிவிட்டால் ஒரு பொய்யை மறைப்பதற்கு இன்னொரு பொய்யை கூற

இணக்கத்துக்குச் செல்வது தேவையற்ற பிரச்சினைகளை கொண்டுவந்துவிடும் என்பதே தமிழ்க் கூட்டமைப்பின் நிலைப்பாடாக தெரிகிறது.

இவ்வாறான நிலைமைகளால் எதற்கும் எதிலும் அரசை குற்றம் கூறுவதே மிகச்சிறந்த புத்திசாலித்தனமான அரசியல் என எண்ணிச் செயற்பட்டதன் பலனாக, இப்போது அவர்களது உறுப்பினர்களே அவர்களுக்கெதிராக செயற்படும் நிலைமை தமிழ் கூட்டமைப்பின் பிரதேச சபைகளுக்குள் உருவாகியிருக்கிறது.

இனத்தின் பெயரால் அரசுக்கெதிராக எதனையும் முன்னிறுத்த முனையும் அரசியல் கலாசாரம் உள்ளூரில் பின்தங்கிய கிராமங்களின் மேம்பாட்டுக்கான உள்ளாட்சி நிர்வாகத்தையும் அதன் வளங்களையும் தேசியத்தின் பெயரால் தமக்குள் சுருட்டிக்கொள்வதிலும் எஞ்சியதை அரசுக்கெதிராக செயற்படுவதில் விரயமாக்கியதிலும் போய் முடிந்திருக்கிறது.

தமிழ்க் கூட்டமைப்பின் இந்த அரசியல் அணுகுமுறையை பிரதேச சபைகளில் அங்கம் வகிக்கும் அவர்களது

உறுப்பினர்களின் எந்த ஆலோசனையும் பெறப்படாமலேயே அதன் தவிசாளரால் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு நியாயம் கேட்டு போராடிய சக உறுப்பினர்களுக்கு மிரட்டல் பாணியில் பதில் கூறப்பட்டிருக்கிறது.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள தமிழ் கூட்டமைப்பு பிரதேச சபைகளின் மாதாந்தக் கூட்டங்கள் மீதான அவதானிப்பில் சபையின் தீர்மானத்தை பெற்றுக்கொள்ளாமலே பிரதேசத்துக்கான திட்டங்களை நடைமுறைப் படுத்தியமைக்காக ஆளும்தரப்பு உறுப்பினர்கள் தவிசாளருடன் பல சந்தர்ப்பங்களில் முரண்பட்டிருக்கிறார்கள்.

அரசுக்கெதிரான புரட்சியின் பெயரால் சபையின் வளங்களை துஷ்பிரயோகம் செய்யும் இந்தப் போக்கை தமிழ்க் கூட்டமைப்பினர் கொண்டிருக்கும் வரை அவர்களது பிரதேசசபை கூட்டங்கள் குழப்பத்தில் முடிவதும் அவ்வாறே அவர்களது வரவுசெலவு திட்டங்கள் தோற்கடிக்கப்படுவதும் தொடர் கதையாகவே இருக்கும்.

## தாடியும்... தூக்கமும்



ஒரு ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் இரண்டு விஷயங்களில் தன்னைப் பற்றிப் பெருமைப் பட்டுக்கொள்வார்.

ஒன்று அவருடைய நீண்ட தாடி பற்றிய பெருமை. வெண்மை நிறத்தில் அவருடைய காலைத் தொடுமளவுக்கு நீண்ட தாடி அவருக்கு. அடுத்தது படுத்தவுடன் தூங்கிப் போகும் அவருடைய பழக்கம் பற்றியது.

யாரிடம் பேசினாலும் இதைப் பற்றி பெருமையாகச் சொல்லிக் கொள்வார். இந்த இரண்டு விஷயங்களிலும் தன்னை யாரும் மிஞ்ச முடியாது என சொல்வார். ஒரு நாள் அவருடைய பேரன் ஊரிலிருந்து வந்திருந்தான்.

அவனிடமும் தாத்தா இது பற்றி பேசினார்.


பேரன் “சரி தாத்தா. நீங்கள் தூங்கும் போது உங்கள் நீண்ட தாடி போர்வைக்கு மேலே இருக்குமா இல்லை போர்வைக்கு அடியிலா?” என்று சந்தேகம் கேட்க, படுத்தவுடனே தூங்கிப் போகும் பழக்கத்தால் தாத்தாவுக்கு பதில் சொல்லத் தெரியவில்லை. இன்று தூங்கும் போது பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

இரவு தூங்கும் போது போர்வைக்கு அடியில் தாடி இருக்க வெளியே தெரியட்டும் என்று அதை எடுத்து போர்வைக்கு மேலே போட்டார். அது பார்ப்பதற்கு நன்றாக இல்லாததால் மீண்டும் எடுத்து போர்வைக்கு அடியில் போட்டார். மீண்டும் சரி வராததால் மேலேயும் மறுபடி கீழேயும்..... இப்படியே போர்வைக்கு மேலே... கீழே என்று மாற்றி மாற்றிப் போட்டுக் கொண்டே இருந்ததில் அன்று இரவு தூங்கவேயில்லை.

மறுநாளும் இப்படி முயற்சித்து தூக்கம் தொலைக்கவே மனம் வெறுத்துப் போன தாத்தா தாடியா? தூக்கமா? என்று யோசித்து முடிவில் தன்னுடைய நீண்ட தாடியை வெட்டி விட்டார்.


பிறகென்ன? தாடி பற்றிய கவலை இல்லாமல் நிம்மதியாகத் தூங்கத் தொடங்கினார். ஹாஹா...

## கலண்டர் உருவானது எப்படி?


Aztec calendar stone

மனிதன் காலத்தை அளவிட எண்ணினான். முதலில் பயிர்த் தொழில் செய்யும் காலங்களைக் கவனித்தான். விதைப்பது முதல் அறுவடை செய்வது வரையிலான காலத்தைக் கணக்கிட்டான். இது முதல் முயற்சி. தொடர்ந்து எகிப்தியர்கள் ஆண்டுக்கு ஒருமுறை நைல் நதியில் வெள்ளம் வருவதை அறிந்து வெள்ளத்தைக் காலம் அளக்கும் காரணியாகக் கொண்டார்கள்.

ஒரு மதகுரு ஒருமுறை வெள்ளம் வருவதற்கு இடைப்பட்ட காலத்தில் 12 முறை சந்திரன் தோன்றி மறைவதைக் கவனித்துவிட்டார். இது 12 moons என்று அழைக்கப்பட்டு பின்னர் months என்றாகி உள்ளது. பின்னர் சில குறிப்பிட்ட நட்சத்திரங்கள் தோன்றி மறைவதை அடிப்படையாகக் கொண்டு 365 நாள்கள் எனப் பிரித்தனர். எகிப்தியர்கள்தான் கலண்டர் முறைக்கு வித்திட்டவர்கள் எனலாம்.




இக் கலண்டர் முறை ரோம சக்கரவர்த்தி ஜூலியஸ் சீசரால் வகுக்கப்பட்டுள்ளது. இதில் ஏற்பட்ட சிறு சிக்கல்கள் குழப்பங்களைக் களைந்து போப் கிரிகோரி என்பவர் தீர்வு கண்டுள்ளார். இன்று நம்மிடம் உள்ள கலண்டர் கிரிகோரி காலண்டர் ஆகும்.

இஸ்லாமியக் கலண்டருக்கும் யூத மதக் கலண்டருக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. இரண்டும் சந்திரனை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகின்றன. இஸ்லாமியக் கலண்டரில் ஒரு மாதத்திற்கு 29 1/2 நாள்களே!

ஜனவரி 1 இலிருந்து கணக்காண்டு தொடங்குபவர்களும், ஏப்ரல் 1 இலிருந்து கணக்காண்டு தொடங்குபவர்களும் உண்டு. ஆனால் உலக வங்கியின் கணக்காண்டு செப்ரெம்பர் 1 ஆம் திகதியிலிருந்து தொடங்குகிறது.

வழக்கத்திலுள்ள ஆங்கில ஆண்டுடன் 31ஐக் கூட்டினால் வருவது வள்ளுவராண்டு.

(உ-ம்) 2013 + 31 = 2044


# அன்பே வா!

- ஆரூர்தாஸ் - 3


'அன்பே வா' படப்பிடிப்பில் எம்.ஜி.ஆர்- ஏவி.எம். சரவணன்.

செட்டியாரின் விருப்பப்படி எட்டாவது எண் கொண்ட புதிய தளம் கட்டி முடிக்கப்பெற்றது. அதில் கலை இயக்குனர் ஏ.கே.சேகரின் கற்பனையில் தோன்றிய எம்.ஜி.ஆர். ஊட்டி மாளிகையின் கண்கவர் கூடமும், அதனைச் சார்ந்த படுக்கை அறையும் மற்றும் மேன்மாடமும் அதிகப்பொருட் செலவில் அசலாக உருவாகி இருந்தது! 8.12.1965 காலையில் முதல் நாள் படப்பிடிப்பிற்கு வந்த எம்.ஜி.ஆர். தளத்தின் உள்ளே நுழைந்த மாத்திரத்தில் அங்கு அமைக்கப்பெற்றிருந்த அந்த அழகிய மாளிகையைப் பார்த்து மலைத்துத் திகைத்துப் போய்விட்டார்.

இதென்ன சினிமாப்பட செட்டா? அல்லது உண்மையாகக் கட்டப்பட்ட மாளிகைதானா என்று சந்தேகம் கொண்டு அங்கிருந்த ஒரு கறுப்பு வண்ணக் கிரில்லை விரலால் சுண்டித்



தட்டிப் பார்த்தார். அது "டிங் டிங்" என்று ஓசை எழுப்பியது. ஆமாம். அது அசல் ஸ்டீலால் ஆன ஒரிஜினல் கிரில்தான் என்று அறிந்து கொண்டார். இதை நான் ஜாடையாகக் கவனித்தேன்.

தளத்தை விட்டுத் தனது புதிய தனி மேக் அப் அறைக்குள் அடி எடுத்து வைத்த "மக்கள் திலகம்" மயக்கம் போட்டு விழாத ஒரு குறைதான்! குளிர்சாதனத்திலிருந்து தவழ்ந்து வந்த இளங்காற்று, நறுமணங்கமழும் இனிய "ஜாஸ்மின்" ஸ்பிரேயுடன் கலந்து எம்.ஜி.ஆரின் மனதை மகிழ்வித்தது.

ஒப்பனை இட்டுக் கொள்வதற்காக உட்காரும் சுழல் நாற்காலி, அதன் எதிரே இருக்கும் பெரிய பெல்ஜியம் முகம் பார்க்கும் கண்ணாடி! ஏனைய ஒப்பனைக்குரிய சாதனங்கள் அத்தனையுமே புத்தம் புதியது.

இந்திய உடம்பில் அமெரிக்க தலையையும், அதனுள்ளே பிரிட்டிஷ் மூளையையும் கொண்டிருந்த காரைக்குடி ஆவிச்சி செட்டியாரின் ஏகமகன் ஆன மெய்யப்ப செட்டியார் - மருதூர் கோபாலமேனனின் நான்காவது புதல்வரான - பூதலம் புகழ் ராமச்சந்திரன் என்னும் எம்.ஜி.ஆரை மயங்க வைப்பதற்காக அல்ல - அவருக்கு மதிப்பும் மரியாதையும் அளிப்பதற்காகச் செய்த இனிய ஏற்பாடுகள் இவை என்பதை ஒப்பனை அறையில் எம்.ஜி.ஆருக்கு நான் விளக்கினேன். அதைக்கேட்டு அவருடைய செவ்விதழ்களில் ஒரு சிறு பெருமிதப் புன்னகை நெளிந்தது.

எம்.ஜி.ஆர். நடித்த தேவர் பிலிம்ஸ் "வேட்டைக்காரன்" படம் 1964 ஆம் ஆண்டு பொங்கல் ரிலீஸ். இந்தப்படம் 100 நாட்கள் ஓடியது.

1965ஆம் ஆண்டு பொங்கலுக்கு எம்.ஜி.ஆர். நடித்த வாகினியின் "எங்க வீட்டுப்பிள்ளை" ரிலீஸ். 100 நாட்கள் ஓடியது. அவற்றைத்தொடர்ந்து வரும் 1966 பொங்கலுக்கு எம்.ஜி.ஆர். நடிக்கும் தங்கள் "அன்பே வா" படத்தை வெளியிட சகோதரர்கள் விரும்பினர்.

சரவணன் இதுபற்றி எம்.ஜி.ஆரிடம் தெரிவித்தார். அதற்கு எம்.ஜி.ஆர். ஏற்கனவே ஆர்.எம்.வீரப்பனின் சத்யா மூவீஸ் "நான் ஆணையிட்டால்" படத்தை பொங்கலுக்கு ரிலீஸ் பண்ண ஒத்துக்கொண்டிருக்கிறேன். அதனால் அவர்கிட்டே இதைப்பத்திப் பேசுங்க என்றார்.

அதன்படி சரவணன் ஆர்.எம்.வீ.யிடம் பேசினார். அவர் சம்மதித்து தன் படத்தை தள்ளி வைத்துக்கொண்டார்.

14.1.1966 பொங்கல் நன்னாள். சென்னை மவுண்ட் ரோடில் புகழ் பெற்ற "காசினோ" தியேட்டரில் எம்.ஜி.ஆர். நடித்த ஏவி.எம்.மின் "அன்பே வா" ரிலீஸ்.

காசினோவில் காலைக்காட்சிக்கே கட்டுக்கடங்காத கூட்டம். ஒரு வாரத்திற்கான எல்லா வகுப்பு டிக்கெட்களும் விற்றுத் தீர்ந்து விட்டன. ஆனாலும் தியேட்டரின் முன்னால் கூட்டம் அலைமோதியது.

வழக்கம்போல நான் காலைக்காட்சிக்கே சென்று தியேட்டரின் மேல். மாடி வாயிலுக்கு அருகில் நின்றபடி மக்களோடு சேர்ந்து மக்கள் திலகத்தின் "அன்பே வா"வைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தேன்.

இடைவேளையின் போது, தியேட்டர் மனேஜர் சங்கர் மேலே ஓடிவந்து என்னிடம், "எம்.ஜி.ஆர். ராமாவரம் தோட்டத்திலிருந்து உங்களுக்கு போன் வந்திருக்கு. சீக்கிரம் வாங்க" என்றார். நான் விரைந்து கீழே வந்து போன் ரிசீவரை எடுத்து ஹலோ சொன்னேன். எதிர் முனையில் இருந்து எம்.ஜி.ஆரின் அன்றாட உணவுக் கவனிப்பாளரான ரத்தினம் பேசினார்.

"அண்ணன் (எம்.ஜி.ஆர்.) உங்ககிட்டே பேசணும் சொன்னாரு. ஒரு நிமிஷம் இருங்க." இப்போது எம்.ஜி.ஆரின் குரல்:-

"வணக்கம். பொங்கல் வாழ்த்துக்கள். வீட்டுக்குப் போன் பண்ணினேன். நீங்க காசினோவுக்கு படம் பார்க்கப் போயிருக்கிறதா தங்கச்சி சொல்லிச்சு. அங்கே எப்படி இருக்கு?

நான்:- "கைத்தட்டல் ஒலி அதிர்ச்சியிலேயும் விசில் சத்தத்திலேயும் காசினோவே இடிஞ்சி விழுந்திடும் போலிருக்கு."

எம்.ஜி.ஆர்:- (சிரித்தபடி) சரி. இன்னும் அரை மணி நேரத்தில நீங்க இங்கே வரணும். ஒரு சந்தோஷமான செய்தி உங்களுக்கு சொல்லப்போறேன். உங்க கார் அங்கே இருக்கா? இல்லே நான் அனுப்பட்டுமா?

நான்:- வேண்டாண்ணே. என் கார்லதான் வந்திருக்கேன். இதோ - இப்பவே புறப்படுகிறேன்.

(தொடரும்)

# பாலியல் வன்முறைகள்; எதிர்கொள்ளுதல் குறித்த விவாதத்திற்கான ஒரு முன்வரைவு

- அ.மார்க்ஸ் -

தருண் தேஜ்பால் விவகாரத்தில் ஊடகங்கள் நடந்து கொண்ட விதத்தை விருப்பு, வெறுப்பு இன்றியும், கொஞ்சம் மனம்விட்டும், முத்திரை குத்தப்படுதலுக்கு அஞ்சாமலும் விவாதிப்பது இன்றைய காலத்தின் தேவை. தொழிற் போட்டி அல்லது அரசியல் காரணங்களுக்காகத் தேஜ்பால் பழிவாங்கப் படுகிறார் என்கிற அடிப்படையில் நான் இதைக் கூறவில்லை. ஊடக மற்றும் பொதுப்புல அறம் சார்ந்த ஒரு பிரச்சினையாக நான் இதை முன்வைக்கிறேன்.

ஆண்களும் பெண்களும் அதிக அளவில் பொதுப் புலங்களில் சேர்ந்து செயற்படவேண்டிய ஒரு காலச் சூழலில் நாம் வாழ்கிறோம். பெண்களின் கௌரவம் பல்வேறு அம்சங்களில் கீழ்நிலைப் படுத்தப்படக் கூடிய இத்தகைய பொதுப் புலச்சூழலில் அவர்களின் கண்ணியம் பாதுகாக்கப்படுவது குறித்த ஒரு புதிய பிரக்ஞையும், எழுச்சியும் இன்று உருவாகியுள்ளது. அதே நேரத்தில் இவையெல்லாம் பொதுப் புலங்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சுமூகமான பழகு நிலையையே அழித்து விடக் கூடாது. ஒருவரை ஒருவர் சந்தேகத்துடனும் அச்சத்துடனும் பார்க்கும் நிலையும் வந்துவிடக் கூடாது.

அலுவலகங்களில் பெண்கள் குடும்பச் சூழலிலிருந்தும், குடும்பச் சிறையின் இறுக்கங்களில் இருந்தும் விடுபட்டுச் சக ஊழியர்களுடன் சரளமாகப் பழகுவதை நாம் எந்த ஒரு பொது வெளியிலும் காண இயலும். இதையும் அதிகாரத்தைப் பயன்படுத்திப் பாலியல் சலுகைகளைக் கோரும் அத்துமீறல்களையும் நாம் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். பின்னதை நாம் மிகக் கடுமையாக எதிர்கொள்ளும் அதே நேரத்தில் சரளமான பாலியல் வேறுபாடுகளற்ற பழகுச் சூழலை நாம் அழித்துவிடக் கூடாது.

Times of india நாளிதழில் ஒரு செய்திக் கட்டுரை. கார்பொரேட் அலுவலகங்களில் தற்போது பெண்கள்



அவ்வப்போது கூடி கழிவறை சுத்தமாக இல்லாதது முதல் பாலியல் முறை மீறல்கள் வரை, தங்களின் பிரச்சினைகளைப் பேசுவது, தேவையான பிரச்சினைகளை மேலெடுத்து செல்வது என்பன அதிகரித்துள்ளன என்கிறது கட்டுரை. இவற்றை நிறுவனங்களும் கணக்கில் எடுத்துக் கொண்டு உடனுக்குடன் தீர்க்க முயல்கின்றன என்றும், முன்கூட்டியே பெண்களின் இது போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்வது பற்றிய ஆலோசனைகளை அவை இது குறித்த நிபுணர்களிடம் பெறக்கூடிய நிலை உருவாகியுள்ளதையும் அக்கட்டுரை பதிவு செய்கிறது. இப்படியான பெண்களின் பிரச்சினைகள் குறித்த, குறிப்பாக பாலியல் ரீதியான தொந்தரவுகளைக் களைவது குறித்த நிறுவன ரீதியான பொறியமைவுகள் ஆங்காங்கு உருவாக்கப்படுதல் நூறு சதம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. சமீப காலத்தில் ஏற்பட்ட விழிப்புணர்வின் வெளிப்பாடாகவே இதைக் காண வேண்டும்.

ஆனால் அதே கட்டுரையில் இன்னொரு சம்பவமும் உள்ளது. அலுவலக ஆண் ஊழியர் ஒருவரின் "பார்வை" சரியில்லை என ஒரு பெண் கருதுகிறார். உரையாடலின்போது வேறு இரு பெண்களும் கூட அதே கருத்தைத் தெரிவிக்கின்றனர். உடனடியாக இது அந்த நிறுவனத்தின் மனித வள அதிகாரியின் பார்வைக்குக் கொண்டு செல்லப்படுகிறது. "பிரச்சினை பெரிதாவதற்கு முன் நடவடிக்கை" எடுக்க அவர் உறுதி பூணுகிறார்.

இந்த இடம்தான் நாம் இன்று மனம் விட்டுப் பேச வேண்டிய புள்ளியாக எனக்குப் படுகிறது. ஒரு ஊழியரின் பார்வை எந்த அளவுவரை ஆபத்தற்றதாகவும் (normal), எந்த இடத்தில் அது வரம்பு மீறுகிறது எனவும் எத்தகைய அளவுகோலை வைத்து நாம் தீர்மானிப்பது? ஆணாதிக்கச் சமூகத்தில் அன்றாடம் அத்துமீறல்களை எதிர்கொண்டுள்ள பெண்களின் உள்ளுணர்வே இந்த அம்சத்தில் போதுமானது எனக் கொள்ளலாமா? இல்லை இதில் வேறு விவாதிக்கப்பட வேண்டிய அம்சங்கள் உள்ளனவா?

இப்படியான சூழல் ஒரு பொது வெளியில் இறுக்கத்தை ஏற்படுத்திவிடாதா?

பாதுகாப்பே ஒரு மூச்சிறுக்கும் கவசமாகவும் சுதந்திரத்தை முடக்கும் கூண்டாகவும் ஆகிவிடுமா?

இதற்கு என்னிடம் உடனடியாகப் பதிலில்லை. எனினும் நாம் எல்லோரும் கவலை கொள்ள வேண்டிய, கருத்தூன்ற வேண்டிய ஒரு புள்ளி இது என்பது மட்டும் விளங்குகிறது.


# நிகழ்வுகளின் பதிவுகள்....





யாழ்.எயிட் நிறுவனத்தால் பின்தங்கிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வில் மாணவனுக்கு புத்தகப்பை வழங்கப்படுவதையும், உபகரணங்களைப் பெற்ற மாணவர்களையும் காணலாம்.





திசைகாட்டி வீசா ஆலோசனை நிறுவனத்தின் கலை இலக்கிய மன்ற ஆரம்பவிழா அண்மையில் இடம்பெற்ற போது கலை இலக்கிய மன்றத் தலைவர் கலாநிதி த.கலாமணி உரையாற்றுவதையும், வாழ்வகத் தலைவருக்கு சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் மடிக்கணனி வழங்குவதையும் காணலாம். (54)




பெண்கள் வன்முறை எதிர்ப்புவாரத்தை முன்னிட்டு பளைப்பிரதேச செயலர் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வு நாடக ஆற்றுகை.... (130)

காரைநகர் பண்டத்தரிப்பான்புலம் ஸ்ரீ சிதம்பரேஸ்வரா சிவகாமி அம்மன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஆருத்திராதரிசன பூசை வழிபாடுகளைக் காணலாம். (50)




கடல் ஆராய்ச்சியின் போது உயிர்நீத்த ஹாட்லிக்கல்லூரி மாணவர்களின் ஞாபகார்த்தமாக அண்மையில் இடம்பெற்ற இரத் ததான நிகழ்வில் ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் இரத்ததானம் செய்வதனைக் காணலாம். (116)

கிளிநொச்சி ஜெயந்திநகர் புதிய பொய்கை முன்பள்ளியின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றபோது முன்பள்ளி மாணவியின் நடன நிகழ்வையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் அரச அதிபர் தி.இராசநாய கம் மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் காண லாம்.



நட்டாங்கண்டல் மருத்துவமனையில் நடைபெற்ற மக்களுக்கான செயற்றிட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு பயன்தரு மரக்கன்று தென்மராட்சி லயன்ஸ் கழகத்தினால் அண்மையில் வழங்கப்பட்டது.




கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவும் ஒக்ஸ்பாம் நிறுவனமும், இணைந்து பாடசாலைகளுக்கான mega phone, Fist aid Box என்பன அண்மையில் வழங்கப்பட்ட போது. (90)

# வைத்தியர்கள் இன்மையால் சிகிச்சை பெறமுடியாத நிலை

## நெடுந்தீவு வைத்தியசாலையில் அவலம்

(மானிப்பாய்)

நெடுந்தீவு வைத்தியசாலையில் சுமார் 2 வாரங்களாக வைத்தியர்கள் இல்லாமையால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரியவருகின்றது.

இது குறித்து தெரியவருவதாவது, நெடுந்தீவு மக்களிற்கான ஒரே ஒரு வைத்தியசாலையாக இவ் வைத்தியசாலை உள்ளது. இந்த நிலையில் கடந்த இரு வாரங்களாக வைத்தியர்கள் அங்கில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

முன்னதாக இரு வைத்தியர்கள் நியமிக்கப்பட்டு சுழற்சி முறையில் இருவரும் கடமையாற்றி வந்த நிலையில் கடந்த இரு வாரங்களாக அவர்கள் வைத்தியசாலைக்கு வருவதில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அங்குள்ள மக்கள் பல்வேறு இன்னலகளை எதிர்கொள்வதாக தெரிகின்றது.

மழை மற்றும் பனிகாலம் ஆதலால் சிறுவர்களும் பெரியவர்களும் காய்ச்சல், சளி, இருமல் போன்ற நோய்களுக்காளாகின்றனர். அத்துடன் இரவுகளில் திடீரென ஏற்படும் நோய் நிலைகளிற்கு அனுமதிக்கப்படும் நோயாளர்களிற்கு சிகிச்சையளிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

தற்போது இங்குள்ள தாதி உத்தியோகத்தர் ஒருவர் சாதாரண நோய்களுக்கு தானே பரிசோதிதது மருந்து வழங்கி வருகின்றார். பெரிய நோய்களுக்கும், சிகிச்சையளிக்க முடியாதுள்ள நோயாளிகளையும் வேறு வைத்தியசாலைக்கு மாற்றம் செய்தும் சிகிச்சையளித்து வருகின்றார்.

அத்துடன் கடலில் பயணிக்கும் அம்புலன்ஸ் வண்டி பழுதடைந்துள்ளமையால் சாதாரண படகுகளிலும், கடற்படையினரின் படகுகளிலுமே நோயாளர்கள் வேறு வைத்தியசாலைகளிற்கு எடுத்துச் செல்லப்படுவதால் அபாயகரமான நிலைமை ஏற்பட்டுள்ளன. இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொண்டு உயிரிழப்புகளைத் தடுக்க வேண்டுமென நெடுந்தீவு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (48)

# ஏழைகளுக்கு உதவி செய்பவர்களின் அறப்பணி போற்றுதற்குரியது

### கலாநிதி ஆறுதிருமுருகன்

(யாழ்.நிருபர்)

சிதம்பரத்தில் யாழ்ப்பாண மக்கள் புண்ணிய நாச்சியார் மடம கட்டிய வரலாறு உண்டு. அவ்வாறே ஈழத்துச் சிதம்பரத்தில் காரைநகர் மக்கள் மடம் கட்டி அன்னதானம் செய்கின்றனர். இந்தப் பெரிய மடத்தை தனது சொந்தப் பணத்தில் கட்டிய புரவலர் சிவஞானம் உமாதேவி தம்பதியரின் பணி போற்றுதற்குரியது என கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்தார்.

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயத்தில் புதிதாக கட்டப்பட் ஸ்ரீமனோன்மணி அம்பாள் மண்டபத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

ஈழத்துச் சிதம்பர வீதியில் 86 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்த மடாலயம் இன்று பெரு விருட்சமாக எழுச்சிபெற்று அன்னதானப் பணியினைச் சிறப்பாகச் செய்து வருகிறது.

தானங்களில் சிறந்தது அன்னதானம். ஒருவன் போதும் என்று சொல்லத்தக்க ஒன்று உணவு மட்டுமே. உடையையோ வேறு பொருளையோ தானம் செய்யும் போது இன்னும் வேண்டும் வேண்டும் என்றே கேட்பார்கள். ஆனால் சோறு கொடுக்கும் போது மட்டும் போதும் போதும் என்று மனம் திருப்திப்படுவார்கள். அன்னதானம் செய்வது இறைதொண்டு. அதனால் இது மகேஸ்வர பூசை எனப்படுகிறது.

1997 இல் துர்க்கா மணி மண்டபத்தில் அன்னதானம் 25 நாட்கள் நடைபெற்றபோது 20 நாட்களுக்கு மேல் காரைநகர் மக்களே அன்னதானம் செய்தார்கள். இங்கு அதைச் சிறப்பாகச் செய்கிறார்கள். இந்த சிவப்பணி இந்தக் கிராமத்துக்கே பெருமை சேர்ப்பதாக அமைகிறது.

ஆலயங்கள், அன்னதான மடங்கள், பள்ளிக்கூடங்கள், வைததியசாலைகள் கட்டுவது அன்னதானம் செய்வது என்று அறப்பணிகளுக்கு அள்ளி வழங்கும் இவ்வூர் மக்கள் புண்ணியம் செய்தவர்கள். அறப்பணி செய்வதற்கும் முற்பிறப்பில் புண்ணியம் செய்திருக்கவேண்டும்.

சிவஞானம் உமாதேவி தம்பதிகள் சிவனும், உமையும் போன்று இணைந்து கடவுள் தந்த சொத்தை தரும காரியங்களுக்குப் பயன்படுத்தும் இந்த தம்பதியினரின் சந்ததி உயர்வடையும். இவர்களின் சாதனையோடு ஒப்பிடும்போது நாம் என்ன செய்தோம் என்று எண்ணத்தோன்றுகிறது எனவும் குறிப்பிட்டார். (10)

# சமாதான நீதவானாகும் வாழ்வகத் தலைவர்



(திருநெல்வேலி)

சுன்னாகம் வாழ்வகத் தலை வர் ஆறுமுகம் ரவீந்திரன் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிமன்ற நீதிவானும், மாவட்ட நீதிபதியுமான ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் இவர் சத்தியப் பிரமாணம் செய்தார்.

இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மாற்று வலுவுள்ளோர்களில் சமாதான நீதிவான் பட்டம் கிடைக்கப்பெற்ற முதலாமவர் இவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளரான ரவீந்திரன் யாழ். பல்கலைக்கழகக் கலைப்பட்டதாரி என்பதுடன், பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ளதுடன் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை தரம் 3 ஐச் சேர்ந்தவராவார்.

கைதடி நவீல்ட் பாடசாலை, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர்.

இவரது துணைவியாரும் ஒரு ஆசிரியையே. பல்கலைக் கழகத்தில் படிக்கும்போது ரவீந்திரனை அவர் விரும்பித் திருமணம் செய்துகொண்டார்.

இரண்டு பெண்களும், ஒரு ஆணும் இவரதுபிள்ளைகள். ரவீந்திரனைத் தவிர அனைவரும் பார்வையுள்ளவர்கள். மூத்தமகள் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தனியார் வங்கியொன்றின் உத்தியோகத்தராவார்.

தனது இந்த உயர் நிலைக்கு வாழ்வக ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத் தம்பியே காரணம் எனக்கூறி அவரை ரவீந்திரன் நினைவு கூருகினறார். (137)



நெல்லியடி சனசமூக நிலையத்தின் சன்மார்க்க முன்பள்ளி பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றபோது சிறார்களின் நடனநிகழ்வைக் காணலாம். (18)

# வேலை வாய்ப்புச் செய்திகள்

மாதாந்தம் வெளிவரும் சிறுவர் சஞ்சிகைக்கு அம்பாறை, பதுளை, யாழ்ப்பாணம், புத்தளம், வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து சஞ்சிகையை சந்தைப்படுத்துவதற்கு விற்பனை அதிகாரிகள் தேவை.

தொடர்புக்கு : 0770490366

---

கொழும்பிலுள்ள நிறுவனமொன்றுக்கு Type Setting, Page setup, Designing செய்வதற்கு பகுதிநேர - முழுநேர உழியர்கள் தேவை.

தொட்புக்கு :0750288028

---

தற்போது ஆண்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புக்கள், உங்களுக்குத் தேவையான வேலைகளை நீங்களே தேர்ந்தெடுத்து கொள்ள முடியும். வயது 20 - 60 நல்ல சம்பளம் இலங்கையில் எப்பகுதியிலிருந்தும் தொடர்பு கொள்ளலாம். - 0114345313, 0770133003

---

பாரம் ஏற்றியிறக்கக்கூடிய வேலையாட்கள் தேவை. தங்குமிட வசதிகள் உண்டு. அத்தோடு மாதம் 27.500/= ரூபாய்க்கு மேல் உழைக்கலாம்.

தொடர்புக்கு : 0715324584, 0714376165

---

கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, பதுளை, குருநாகல், வெலிமடை, கண்டி, ஹற்றன் ஆகிய இடங்களிலிருந்து ஆட்சேர்ப்பு உண்டு. கொழும்பைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் வேலைவாய்ப்பு - பிஸ்கட், சொக்லேட் கிளவுஸ், பொலித்தீன், யோகட், ஜாம் என்பவற்றில் உற்பத்தி பொதியிடல் களஞ்சியப் பிரிவுகளில் வேலைவாய்ப்பு. தங்குமிடம் உணவு உண்டு.

தொடர்புக்கு : 0778508118

---

நன்கு அனுபவமுள்ள மேசன் பாஸ்மார்கள், கையாட்கள் உடன்தேவை. மேசன் சம்பளம் 1400/=

தொடர்புக்கு : 4181792

---

Typesetting, Graphic Designer கிளிநொச்சியில் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள Printing Press and Gift Place இற்கு தமிழ், ஆங்கிலம் தெரிந்தவர்கள் தொடர்புகொள்க.

தொடர்புக்கு 0779113956

---

அச்சக தொழில் நிறுவனத்துக்கு ஆண் தொழிலாளர்கள் தேவை. மாதச் சம்பளமாக 20 ஆயிரம் தரப்படும். வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு தங்குமிட வசதியுண்டு.

மேலதிக விபரங்களுக்கு : 0714022059

---

Innovage International இன் புதிய கிள்ளைகளின் நிர்வாகப் பிரிவின் வெற்றிடங்களுக்கு 25 வயதுக்கு குறைந்த இளைஞர், யுவதிகள் பயிற்சியளித்து இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலிருந்தும் விண்ணப்பிக்கலாம்.

உணவு தங்குமிட வசதிகள் இலவசம்

தொடர்புக்கு் : 0775515511, 0779383046

---

Medical Rcpresenfatives பாடநெறி 4 மாத கால பயிற்சியின் பின்னர் திருப்திகரமான சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு பாடநெறியை பூர்த்தி செய்யும் அனைவருக்கும் சான்றிதழ்.

தொடர்புக்கு 0771694834

---

தனியார் நிறுவனத்துக்கு சாரதி உதவியாட்கள் தேவை. நிரந்தரத் தொழில் உணவு, தங்குமிடம் உண்டு.

தொடர்புக்கு 0777554068, 0726293122

---

திருமண அழைப்பிதழ் மற்றும் காகிதாதிகள் விற்பனை செய்யும் கடையொன்றிற்கும் கடதாசி கணக்கிடுவதிலும் விற்பனை செய்வதிலும் அனுபவமுள்ள ஆண், பெண் விற்பனை உதவியாளர்கள் தேவை.

தொடர்புக்கு : 0112451487

---

கொழும்பிலுள்ள நிறுவனமொன்றுக்கு லொறிச்சாரதி தேவை. உடன்தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு: 0773600556

---

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கோழிப்பண்ணை ஒன்றுக்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

தொடர்புக்கு : 0755118616

# மீண்டும் தலையெடுக்கிறது சாதிப்பாகுபாடு

# தமிழரசுக்கட்சிக்குள் முளைகொள்ளும் அசிங்கம்

## பருத்தித்துறை உபதலைவர் லோகசிங்கத்தின் மனக்குமுறல்



(யாழ்ப்பாணம்)

வடக்கில் புலிகளின் கை ஓங்கியிருந்த காலத்தில் அடங்கியிருந்த சாதிப்பாகுபாடு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இந்தச் சாதிப்பாகுபாடு கூர்மை அடைந்துள்ளது. வடக்கு மாகாண சபையையும் பிரதேச சபைகளையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தமிழரசுக் கட்சியின் இந்தப் பிரதேச மட்ட நிர்வாகத்திலேயே இந்தச் சாதிப் பாகுபாடு மீண்டும் துளிர்விட ஆரம்பித்துள்ளது.

என்று பருத்தித்துறைப் பிரதேச சபையின் உபதலைவர் மாணிக்கம் லோகசிங்கம் தெரிவித்தார். படிப்படியாக வளர்ந்து வரும் இந்தச் சாதித்துவேசத்தால் இதுவரை பாதிக்கப்பட்டவர்கள் அதிகம்.

இந்தச் சாதிக்கொடுமையால் தானும் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கும் அவர் தனது உள்ளக் குமுறலை வேதனையுடன் வெளிப்படுத்தினர்.

முன்னொரு காலத்தில் வடக்கில் தலைவிரித்தாடிய சாதி வெறிக்கொள்கை பிரபாகரன் காலத்தில் ஆயுதத்திற்குப் பயந்து அறவே இல்லாமல் போயிருந்தது உண்மையே. இன்று அது மீண்டும் தலைவிரித்தாடுவதைக் காண முடிகிறது.

குறிப்பாக தமிழரசுக் கட்சியிலிருக்கும் தலைவர்கள் இந்தப் பாகுபாட்டை வெளிப்படையாகவே காட்டி வருகிறனர். எனக்கும் அந்தக் கொடுமை நடந்தது என்கிறார்.

நான் இதனை சொன்னால் எவருமே நம்பமாட்டார்கள். ஆனால் என்னிடம் ஆதாரங்கள் பல உள்ளது. அத்துடன் என்னைப் போன்று பாதிக்கப்பட்டவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்கள் தமிழரசுக் கட்சியிலுள்ள பல மேட்டுக் குடியினர் தெரிவிப்பது போன்று தம்மை தீண்டத்தகாதவர்கள் என வெளியே சொல்ல விரும்புவதில்லை. அதனால்தான் பல விடயங்கள் கிடப்பிலேயே உள்ளன.

அண்மைக்காலமாக வடக்கில் தமிழரசுக்கட்சியினர் தமது மேட்டுக்குடித்தனத்தைக் காட்டி வருகின்றனர். அவர்கள் எம்மைப் போன்றவர்களைப் புறந்தள்ளி தமது செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். இது தவறு என்பதை உணர வைப்பதே எனது நோக்கம்.

புலிகளின் மறைவிற்குப் பின்னர்தான் இது வெளித்தோன்ற ஆரம்பித்தது. அதுவரை இவர்கள் புலிகளுக்குப் பயந்து அடக்கிவைத்திருந்தார்கள், அடங்கியும் இருந்தார்கள்.

# அதிகரிக்குமா? பால்மாவின் விலை



(கொழும்பு)

எதிர்வரும் வாரங்களில் பால் மாவின் விலை உயர்வடையக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பால் மா விலையை உயர்த்த அனுமதியளிக்குமாறு நிறுவனங்கள் நுகர்வோர் அதிகாரசபையிடம் ஏற்கனவே கோரியுள்ளன.

இதன்படி, 400 கிராம் எடையுடைய பால் மா பக்கட் ஒன்று 50 ரூபாவினாலும், ஒரு கிலோ கிராம் எடையுடைய பால் மா பக்கட் ஒன்று 100 ரூபாவினாலும் உயர்த்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் பால் மாவிற்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பதுக்கி வைக்கப்பட்ட சில தொகுதி பால் மா பக்கட்டுகளை நுகர்வோர் அதிகாரசபையினர் அண்மையில் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பண்டிகைக் காலத்தில் அத்தியாவசிய பொருட்களுக்கான விலை உயர்த்தப்பட மாட்டாது என அரசாங்கம் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரதேசசபையை நகரசபையாக தரம்உயர்த்த நடவடிக்கை

## சங்கானையில் நகர உருவாக்கம்

(நவாலி)

வலிகாமம் மேற்கு பிரதேசசபையை நகரசபையாக தரம் உயர்த்துவதற்கும் சங்கானை நகரில் நவீன வசதிகளைக் கொண்ட மீன் சந்தைக் கட்டடத் தொகுதி ஒன்றை உருவாக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வலி.மேற்கு பிரதேசசபைத்தவிசாளர் தெரிவித்தார்.

சங்கானை நகருக்கான நவீன மீன்சந்தை புதிய இடத்திலாக அன்றி பழைய இடத்திலா முன்னகர்த்துவது தொடர்பான பொது மக்கள், பொது அமைப்புக்களின் அபிப்பிராய கூட்டம் வலி.மேற்கு பிரதேசசபை புதிய சபா மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு தலைமை உரையாற்றிய தவிசாளர் தற்போதுள்ள மீன் சந்தை நகர அபிவிருத்திக்கு குந்தமாக உள்ளது. அத்துடன் பல்வேறுபட்ட நெருக்கடிகளைக் கொண்டுள்ளதுடன் போக்குவரத்திற்கும், வாகன தரிப்படத்திற்கும் மற்றும் சுகாதாரத்திற்கும் ஏனைய நிறுவக வளர்ச்சிக்கும் போதுமானதாக இல்லை.

எனவே தற்போதுள்ள மீன் சந்தையை இன்னுமொரு படி தரம் உயர்த்தி வாகன தரிப்பிடத்துடன் கூடிய நவீன வர்த்தக தொகுதியை அமைப்பதுடன் புதிய மீன் சந்தை அமைப்பதற்கான சங்கானை பட்டின அபிவிருத்தி சபையால் எமக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 5 பரப்பு காணியை நகர அபிவிருத்தி, தூரநோக்கு மற்றும் வருமான எல்லை கருதி புதிய இடத்தில் இந்த புதிய மீன் சந்தையை அமைக்க அனைவரும் ஒருமித்தவர்கள் முன்வரவேண்டும் என்று தெரிவித்தார்.

பிரதேசசபையின் சபா மண்டபத்தில் இரண்டு நிமிட இறைவணக்கத்துடன் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் தங்கள் கருத்துக்களையும் வாதங்களையும் மக்கள் பிரதிநிதிகள் முன்வைத்தனர்.

சங்கானை பட்டின அபிவிருத்தி சபை உறுப்பினர் கு.குணசிறி தெரிவிக்கும் போது வலி. மேற்கு பிரதேச சபை ஏனைய சபைகளுக்கு முன்னுதாரண சபையாக எதிர்காலத்தில் மிளிர வேண்டும்.


இதனை விட ஒரு படிமேலாக நகரசபையாக வரவேண்டும் இதற்காகவே நாம் எல்லோரும் ஒன்றிணைந்து மிகக் கஷ்டப்பட்டு நிதிகளை சேமித்து காணிகளை பெற்று பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் காணியை வழங்கியுள்ளோம் என்றார். மேலும் பிரதேச சபையின் எதிர்க்கட்சிதலைவர் சிவகுருபாலகிருஸ்ணன் (ஜீவன்) உரை நிகழ்த்தும்போது,

வலி.மேற்கு பிரதேச சபையின் உட்கட்டுமான வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமாக நாம் கைகொடுத்து உதவுவோம்.

வலி.மேற்கு பிரதேசத்தில் உள்ள 30 கிராம அலுவலர் பிரிவினை கொண்ட மக்களின் அபிவிருத்திக்கு பிரதேச சபையுடன் இணைந்த வகையில் முன்னெடுப்போம். சங்கானை மீன் சந்தை புறநெகும திட்டத்தில் முன்னெடுப்பதற்கான அரச அனுமதியை நான் முன்னின்று செயற்படுத்தி அனுமதியை பெற்றுக்கொடுத்தேன் என்று தெரிவித்தார்.

மேற்படி அபிவிருத்தி கூட்டத்தில் வலி.மேற்கு பிரதேச செயலக கிரா அதிகாரி என்.மகிழ்ராஜா, சபை ந.பி.இராஜகுமார் உறுப்பினர் க.ஜயலிங்கம், உறுப்பினர் ச.கனகராசன் ஆகியோர் உரையாற்றினர். உபாதவிசாளர் ந.சிவரஞ்சன், உறுப்பினர் க.சபாநாயகம் மற்றும் பிரதேச சபை அலுவலர்கள், செயலாளர், மற்றும் சங்கானை பட்டின அபிவிருத்தி சபை உறுப் பினர்கள் கலந்து கொண்டனர்.

## பரமர் சங்கமம்



'நாய்க்குத் தெரியுமா போர்த் தேங்காய்' எண்டால் விளங்குதுதானை சம்பந்தா சம்பந்தம் இல்லாதவர்கள் ஒண்டைப் பற்றிக் கருத்துக் கூற முற்படுவதைத்தான் அது சுட்டும். பரமர் இண்டைக்குப் பேசு பொருளாக எடுத்துக் கொண்டிருப்பதும் அத்தகைய இருவரைப் பற்றித்தான்.

அதனைத் தமிழகத்தினர் 'எதை எவன் பேசுவ்து எண்ட விவஸ்த்தையே இல்லாமல் போயிட்டுது' எண்டு சொல்வார்கள். இலங்கைக் கிரிக்கெட் துறையில் புகழ் சூடிய தமிழன் முரளிதரன், அதுபோல இலங்கைக் கிரிக்கெட் முதன்மை வீரராகவும், ஒரு கால கட்டத்தில் அணித்தலைவராகவும், சில ஆண்டுகள் அரசின் நியமனபாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவர் சனத்ஜெய சூரிய.

சமீபத்தில் இவ்விருவரும் திருவாய் மலர்ந்தருளிய விடையம் பெரிய சர்ச்சைகளைக்கிளப்பி விட்டிருப்பதும் அறிஞ்ச விடையங்கள். பொதுநலவாய மாநாட்டுக்கு வந்த பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் சொல்லிய இலங்கை அரசு யுத்தக் குற்றச்சாட்டினை நடுநிலையாக விசாரணை நடத்த வேண்டும் அல்லது சர்வதேச விசாரணைக்கு கொண்டு செல்ல துணை போக வேண்டி ஏற்படும் என்னும் கருத்தை வெட்டி இருவரும் அபிப்பிராயம் தெரிவித்து இருந்தனர்.

முரளிதரன் இருபது, முப்பது குடும்பங்கள் பாதிக்கப்பட்ட சம்பவத்துக்கு சர்வதேச விசாரணை தேவையா? என்னும் பாங்கிலும், சனத் ஜெயசூரியா சர்வதேச விசாரணை நடத்தப்பக் கூடாதென்னும் தோறணையிலும் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். கருத்துக் கூற சகல மக்களுக்கும் உரிமை உண்டு நடிகரோ, எழுத்தாளரோ, விளையாட்டு வீரரோ அருக்குச் சுதந்திரம் உண்டு.

அதனாலன்றோ எல்லாமே தறிகெட்டு நடந்து கொண்டிருக்கு, தமிழகத்தை சினிமா நடிகர், நடிகை, வசன கர்த்தா கைப்பற்றியும் அரை நூற்றாண்டும் ஆகிவிட்டது. நேருவோ, பண்டாரநாயக்கவோ, ஜீ.ஜீ.பொன்னம்பலமோ, டி.எஸ்.சேனநாக்கவோ, எஸ்.ஜே.வி.செல்வநாயகமோ பாடசாலைகளில் படிக்கும் காலங்களில் நாடக நடிகராகவும், விளையாட்டு வீராராகவும் திகழ்ந்திருக்க மாட்டாரெனச் சொல்லி விட முடியாதல்லவா?

ஆயினும் அரசியலில் சட்டத்தரணித் தொழிலை மேற்கொண்டவர்கள் அதிகமாக ஈடுபட்டு வந்துள்ளமையும் சுட்டிக காட்டத்தக்கது. தொழில் ரீதியாக எதனைக் கொண்டிருந்த போதும் அரசியல், உலக அரசியல் சார்ந்த மட்டத்தில் கருத்துக்கூற அதற்கென அடிப்படை அனுபவம் அறிவு என்பன இல்லாமல் அதற்கான தகைமைகள் வந்து விடாதல்லவா?

ஒரு முட்டாளின் இதயம் அவனது வாயிலிருக்கும், அறிஞனின் வாய் இதயத்தில் இருக்குமெண்டது போல நாய்க்குத் தெரியுமா போர்த்தேங்காயெண்டதும் இது விடயத்தில் பொருத்தம் இல்லையே சொல்லுங்க பாப்பம்...

# டுபாய் விமானநிலையத்தில் திருட்டு

## படப்பிடிப்பாளர் வசமாக சிக்கினார்

(கொழும்பு)

டுபாய் அனைத்துலக விமான நிலையத்தில், மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான ஒளிப்பதிவுக் கருவிதிருடப்பட்டுள்ளது. இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கருதி ஜனாதிபதி மகிந்தவின் படப்பிடிப்பாளர் ஒருவர் அதிகாரிகளிடம் சிக்கினார்.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அண்மையில், தென்னாபிரிக்கா, மற்றும் கென்யாவுக்கான பயணங்களை முடித்துக் கொண்டு இலங்கை அதிபர் கொழும்பு திரும்பிய போதே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

டுபாய் விமான நிலையத்தில், இலங்கை அதிபர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போது, அவரது ஊடகக் குழுவில் இடம்பெற்றிருந்த ஒளிப் படப்பிடிப்பாளர் ஒருவர், 2325 டொலர் (3 இலட்சம் ரூபா) பெறுமதியான, கண்காணிப்பு காணொளிப்பதிவு கருவியை சுங்கத் தீர்வையற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் இருந்து திருடினார்.

அவர் அதனை தனது பையில் மறைத்துக் கொண்டு வேகமாக வெளியே செல்லமுயன்ற போது, அதனை கண்காணிப்பு காணொளிக் கருவி ஊடாக அவதானித்த பாதுகாப்பு அதிகாரிகள் அவரைத் தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

அதையடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளின் போது, ஜனதிபதியின் குழுவில் இடம்பெற்றிருந்தவர் என்று விபரம் தெரிய வந்ததை அடுத்தே, குறிப்பிட்ட ஒளிப்படப்பிடிப்பாளரை டுபாய் அதிகாரிகள் விடுவிததனர்.

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
## G.C.E. (O/L) Examination model Paper

விஞ்ஞானம்

# கல்வி முரசு

1) நிலக்கீழ் தண்டு மூலம் பதியமுறை இனப்பெருக்கம் மேற்கொள்ளும் தாவரம்
1) கரும்பு 2) இஞ்சி 3) மரவள்ளி 4) வற்றாளை


2) மையநரம்புத் தொகுதியில் சுவாசத்தைக் கட்டுப்படுத்தும் பகுதி
1) மூளையம் 2) முண்ணான்
3) நீள்வளையமையவிழையம் 4) மூளி

3) ஆவியுயிர்ப்பைக் குறைப்பதற்கு நாகதாளியில் காணப்படும் இசைவாக்கம்
1) இலை சதைப்பற்றாகக் காணப்படுதல்
2) இலை முற்களாக மாறிக் காணப்படுதல்
3) பரந்த வேர்த்தொகுதியைக் கொண்டிருத்தல்
4) தண்டில் பச்சையுருமணி காணப்படுதல்.

4) ரெப்டீலியா, அம்பீபியா கூட்டத்தைச் சேர்ந்த அங்கிகள் முறையே
1) பாம்பு, ஆமை 2) முதலை, தவளை
3) உடும்பு, ஆமை 4) பல்லி, முதலை

5) வளிமண்டலத்திற்கு நைதரசன் சேரும் முறை
1) நீலப்பச்சை அல்காக்கள் மூலம் பதித்தல் மேற்கொள்ளப்படுதல்.
2) சில பற்றீரியா இனங்கள் மூலம் இறந்த தாவர விலங்கு உடலை பிரிகைக்குள்ளாக்குதல் மூலம்.
3) அவரைத் தாவரங்களில் உள்ள வேர் முடிச்சுகளின் பற்றீரியா செயற்பாட்டின் காரணமாக.
4) சில பற்றீரியா இனங்கள் மூலம் மண்ணில் உள்ள நைத்திரேற்றை நைதரசன் இறக்கம் செய்வதன் மூலம்.

6) உருவில் தெறிவினைச் செயற்பாடு காட்டப்படுகின்றது. அதன் தூண்டல், இயக்க நரம்புக்கலம், புலன் நரம்புக்க்லம், விளைவு காட்டி என்பவற்றை சரியாகக் குறிப்பது.





| தூண்டல் | இயக்க நரம்புக்கலம் | புலன் நரம்புக்கலம் | விளைவுகாட்டி |
|---|---|---|---|
| 1) B | D | C | A |
| 2) A | C | D | B |
| 3) B | C | D | A |
| 4) A | D | C | B |

7) மனிதனின் செங்குருதி சிறுதுணிக்கையில் இயல்பு என முன்வைத்த விடயங்கள் வருமாறு
A - கரு காணப்படாது
B - ஒட்சிசன் பெற்றுக்கொண்டதும் சிவப்பு நிறத்தைப் பெறும்
C - மாறாத வடிவத்தைக் கொண்டது.
இவற்றில் உண்மையானவை
1) A, C மட்டும் 2) A, B மட்டும்
3) B, C மட்டும் 4) A, B, C

8) உடலின் அகப்புற சூழலில் குளுக்கோசு மட்டம் அதிகரிக்கும் போது உடலில் நடைபெறும் மாற்றங்கள் அல்லாதது.
1) சதையிலிருந்து இன்சுலின் சுரக்கப்படும்.
2) குளுக்கோசு கிளைக்கோஜனாக மாற்றப்படும்.
3) சதையிலிருந்து குளுக்கோஜன் சுரக்கப்படும்.
4) குளுக்கோசு கொழுப்பாக மாற்றப்படும்.

9) அகஞ்சுரக்கும் சுரப்பியல்லாதது
1) கபச்சுரப்பி 2) தைரோயிற்சுரப்பி
3) உமிழ்நீர்ச்சுரப்பி 4) அதிரினல் சுரப்பி

10) படத்தில் தாவர இலையின் அமைப்பு தரப்பட்டுள்ளது. இதில் மேற்றோல் நீட்டங்கள் காணப்படுவது?




1) சூரிய ஒளியை நன்றாகப் பெறுவதற்கு
2) பூச்சிகளைப் பிடிப்பதற்கு
3) ஆவியுயிர்ப்பை குறைப்பதற்கு
4) காபனீரொட்சைட்டு வாயுவை தேக்க வைத்துக் கொள்வதற்கு

11) ஒருவரின் குருதியமுக்கம் 120 : 140 mmHg ஆகக் காணப்பட்டது. இவரின்
1) குருதியமுக்கம் சாதாரண நிலையில் காணப்படுகின்றது.
2) இதயவறை விரிவடையும்போது நாடியினுள் உயர் குருதியமுக்கம் காணப்படுகின்றது.
3) நாடியினுள் கொலஸ்ரோல் படிந்து காணப்படுதல்.
4) குருதி சுருங்கலமுக்கம் 140 mm Hg ஆகும்.

12) ஒளி கிடைக்கும் திசையில் தாவரத்தின் அங்குர நுனி வளரும் முறை படத்தில் காட்டப்பட்டுள்ளது. இத்தோற்றப்பாட்டை சரியாக விளக்குவது?




1) அங்குர நுனிக்கு சற்றுக் கீழே ஒளி கிடைக்கும் பக்கத்திற்கு எதிர்த்திசையில் உள்ள கலங்கள் ஒட்சிசன்களின் செறிவு அதிகரிக்கும் போது கலங்கள் நீள்கின்றன.
2) அங்குர நுனியில் உள்ள கலங்களில் ஒட்சிசன் செறிவு அதிகரிக்கும்போது அக்கலங்கள் நீள்கின்றன.
3) அங்குர நுனிக்குச் சற்றுக் கீழாக ஒளி கிடைக்கும் திசையில் உள்ள கலங்களில் ஒட்சிசன்செறிவு அதிகரிக்கும்போது அக்கலங்கள் நீள்கின்றன.
4) அங்கு நுனியில் உள்ள கலங்களில் ஒட்சிசன் செறிவு குறைவதால் அக்கலங்கள் நீளத்தில் அதிகரிக்கும்.

13) கீழே தரப்பட்டுள்ள பதார்த்தத்தின் I மூலாகக் காணப்படுவது எது?
1) ஐதரசன் 2g இல் உள்ள ஐதரசன் அணு
2) ஒட்சிசன் 8g இல் உள்ள ஒட்சிசன் அணு
3) 8g நீரில் உள்ள நீர் மூலக்கூறுகள்
4) 16g மெதேனில் உள்ள ஐதரசன் அணு


14) வழங்கப்பட்ட கரைசல் அமிலமா எனக் கண்டறிய பின்பற்ற வேண்டிய பொருத்தமான செயற்பாடு பின்வருவனவற்றுள் எது?
1) புளிப்புச் சுவையை அறிய நாவில் தடவிப் பார்த்தல்.
2) செம்பு உலோகத்தை இட்டு ஐதரசன் வாயு வெளியேறுகிறதா எனப் பார்த்தல்.
3) மின்னைக் கடத்துகின்றதா எனப் பரிசோதித்தல்.
4) சோடியம் காபனேற்றைச் சேர்த்து காபனீரொட்சைட்டு வெளியேறுகின்றதா எனப் பரிசோதித்தல்.

15) $2\,Mg_{(s)} + O2_{(g)} \rightarrow 2MgO_{2(s)}$ மக்னீசியம் தகனமடையும் போது மக்னீசிய மொட்சைட்டு வெளியேறியது. அதற்குரிய சமப்படுத்தப்பட்ட சமன்பாடு மேலே தரப்பட்டுள்ளது. மக்னீசியமொட்சைட்டு 4 மூலைப் பெறுவதற்குத் தேவையான மக்னீசியத்தின் திணிவு
1) 2g 2) 24g 3) 48g 4) 96g

16) ஈயநைத்திரேற்றுக் கரைசலை நான்கு பரிசோதனைக் குழாயினுள் எடுத்து அவை ஒவ்வொன்றினுள் செம்பு, மக்னீசியம், ஈயம், நாகம் என்ற உலோகத் துண்டுகளை ஒவ்வொன்றாக இட்டனர். எந்த ஈய நைத்திரேற்றுக் கரைசல் மாற்றமடையாது இருக்கும்.
1) மக்னீசியம், நாகம் 2) செம்பு, மக்னீசியம்
3) ஈயம், செம்பு 4) செம்பு, நாகம்

17) Z என்னும் நியமக்குறியீடு அல்லாத மூலகம் ஒட்சிசனுடன் Zo என்னும் சூத்திரத்தை ஆக்குகின்றது. குளோரைட்டின் சூத்திரம் $Zcl_2$ ஆகும். Z மூலகம் ஆவர்த்தன அட்டவணையில் எத்தனையாம் கூட்டத்தைச் சேர்ந்தது.
1) i 2) II 3) vi 4) vii


18) படத்தில் காட்டப்பட்டுள்ள பரிசோதனை அமைப்பில் சேகரிக்கப்பட்ட வாயு




1) தணற்குச்சியை எரிய வைக்கும்
2) பொப் என்னும் சத்தத்துடன் எரியும்
3) சுண்ணாம்பு நீரைப் பால்நிறமாக்கும்.
4) ஈர நிலப்பாசிச் சாயத்தாளை சிவப்பாக மாற்றும்.


19) மின்பகுபொருள் பற்றிய சரியான விளக்கத்தைத் தரும் கூற்று
1) அது ஐதான கரைசலாகக் காணப்படும்
2) அது இலகுவாக் நீரில் கரையும்
3) பங்கீட்டு வலுப் பிணைப்பைக் கொண்டது
4) உருகுநிலையில், கரைசல் நிலையில் அயன்களை உருவாக்கும்.

20) பல்வேறு அமுக்கங்களின் போது குழாயில் சிறைப்படுத்தப்பட்ட வாயுவின் கனவளவை அறிந்து அமுக்கத்திற்கும் கனவளவிற்குமான தொடர்பைக் காட்ட வரையப்பட்ட வரைபுகளில் சரியானது எது?



21) தாக்க வேகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணி ஒன்றை கண்டறியும் பொருட்டு நடத்தப்பட்ட செயற்பாட்டை படம் காட்டுகின்றது. அவர்கள் பரிசோதித்த காரணி

1) தாக்கிகளின் பௌதீக நிலை
2) ஊக்கி
3) வெப்பநிலை
4) தாக்கிகளின் செறிவு




22) அறைவெப்பநிலையில் காணப்படும் மூன்று திண்மங்களான A, B, C என்பவற்றை வளியில் தகனமடைய விடப்பட்டபோது பின்வரும் அவதானங்கள் பெறப்பட்டன. (வழங்கப்பட்ட குறியீடுகள் நியமக் குறியீடுகள் அல்ல)

A - விரைவாக எரிந்து பெறப்பட்ட வெள்ளை நிறத்தூள் நீரில் கரைந்து பெறப்பட்ட கரைசலின் $p^H$ 14 ஆகும்.
B - எரிந்து வாயுக்களை உருவாக்கும். இவை நீரில் கரைந்து $P^H$ பெறுமானம் 4.5 ஐக் காட்டும்.
C - எரிந்து நீரில் கரையாத கறுப்பு நிறத்தூளைத் தந்தது.

A, B, C மேலே தரப்பட்ட இயல்புகளைக் கொண்ட மூலகங்கள் முறையே.

1) நைதரசன் மக்னீசியம், காபன் 2) சோடியம் காபன், செம்பு
3) மக்னீசியம், சோடியம், செம்பு 4) கந்தகம், நைதரசன்,அலுமினியம்


23) $Al(OH)_{3(aq)} + 3\,HCl_{3(aq)} \rightarrow Alcl_{3(aq)}\,3H_2O_{(1)}$ மேற்படி தாக்கம் தொடர்பான கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் உண்மையான கூற்று (Al=27) O=16 H=1 Cl=35.5)

1) 2 மூல $Al(OH)_3$ நடுநிலையாக்குவதற்கு 6 மூல் HCl அமிலம் தேவை
2) $Al(OH)_3$ பிரிகையடைந்து $AlCl_3$, $H_2O$ உருவாகும்.
3) $Al(OH)_3$, Hcl அமிலத்துடன் தாக்கமடைந்து காரமும், நீரும் உருவாகும்.
4) 78g $Al(OH)_3$ , HCl 36.5g Hcl அமிலத்துடன் தாக்கமடைந்து 3 g நீர் கிடைக்கும்.

24) அறை வெப்பநிலையில் திண்மமாகக் காணப்படும். பளிங்குருவற்றை வடிவங்களில் உள்ள பல்பகுதிய வடிவங்கள் பலவற்றை இயற்கையில் கொண்ட மூலகங்கள்.

1) மக்னீசியம் 2) சோடியம்
3) சல்பர் 4) பொன்


25) பின்வரும் வரைபு காலினால் உதையப்பட்ட பந்தின் இயக்கத்திற்குரிய வேக நேர வரைபாகும். பந்து சென்றதூரம்.




1) 50 m
2) 25 m
3) 10 m
4) 5 m


26) படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு வில்லைகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது

1) கூட்டு நுணுக்குக்காட்டியில்
2) அரிய இருவிழியனில்
3) தொலைகாட்டியில்
4) வழுக்கி எறியியில்




27) இச்சுற்றில் ஆளியை மூடும்போது கிடைக்கும் அவதானம்

1) மோட்டார் ஒருபக்கம் சுழன்று சிறிது நேரத்தில் நிற்கும்
2) கொள்ளளவி ஏற்றம் பெறுதல்.
3) மோட்டார் தொடர்ச்சியாக இயங்கும்.
4) மோட்டார் மாறிமாறி இரண்டு திசையிலும் இயங்கும்.




28) இசைக்கவையின் மீடிறன் 256 Hz ஆகும். வளியில் ஒலியின் வேகம் 330ms$^{-1}$ எனின் அலை நீளத்தைக் காண்க.

1) $\frac{330}{256}$ m 2) $\frac{330}{256}$ Hz
3) 330 x 256m 4) $\frac{330 \times 256 \text{ Hz}}{2}$

29) வலிமையான மின்காந்தமொன்றை உருவாக்குவதற்கு பின்வரும் எந்த சுற்றினூடாக ஒரேயளவான மின்னோட்டத்தைச் செலுத்த வேண்டும்.

1) உருக்கினைச் சுற்றி அதிகளவான எண்ணிக்கையில் சுற்றப்பட்ட சுருள்
2) வலிமையான காந்தத்தின் மீது சுற்றப்பட்ட குறைந்தளவு எண்ணிக்கையான கம்பிச்சுருள்
3) வலிமை குறைந்த காந்தத்தின் மீது அதிகளவு எண்ணிக்கையான கம்பிச்சுருள் சுற்றப்பட்டதில்
4) மென்னிரும்பினைச் சுற்றி சுற்றப்பட்ட அதிகளவு எண்ணிக்கையான கம்பிச்சுருள்

30) நுணுக்குப் பண்ணிக்கு கிடைக்கும் ஒலியை மின்துடிப்பாக மாற்றும் செயன்முறையை அழைப்பது

1) பரிபாடையாக்கம் 2) மட்டிசைத்தல்
3). மட்டிசைப்பழித்தல் 4) ஊடுகடத்தல்

31) அமல், உமேஸ் நிறுத்தாருவலையின் இருபுறமும் இருக்கின்றனர். அமல் நிறுத்தாருவலையின் முனையில் உமேஸ் சுழலிடத்திற்கு அண்மையிலும் அமர்ந்துள்ளபோது நிறுத்தாருவலை சமநிலையில் உள்ளது. அவர்களின் நிறை பற்றிய சரியான கூற்று.

1) அமல், உமேஸ் இருவரினதும் நிறை சமனாகும்.
2) அமல் உமேஸை விட பாரம் கூடியவர்
3) உமேஸ், அமலை விட பாரம் கூடியவர்
4) அமல், உமேஸின் நிறை பற்றி யாதும் கூற முடியாது

32) மின்முலாமிடலுக்கு மாணவர்கள் தெரிவு செய்த பதார்த்தங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

a - முலாமிடப்போகும் உலோகத்தின் உப்பின் நீர்க் கரைசல்
b - முலாமிடப்போகும் உலோகத்தின் கோல்
c - ஆடலோட்டமின்
d - கண்ணாடித்தாழி


மேற்கூறிய பொருள்களுள் மின்முலாமிடலுக்கு பயன்படுத்தப்படாத பதார்த்தம்

1) a 2) b 3) c 4) d

33) மின்சூழிலிருந்து வெளியேறும் ஒளியை மிக நீண்டதூரத்திற்குச் செலுத்துவதற்குச் செய்யவேண்டியது


1) தெறியியினை அகற்றுதல்
2) தெறியியின் குவியத்தில் மின்குமிழ் இருக்கும் வகையில் பொருத்துதல்.
3) தெறியியின் குவியத்திற்கு முன்னால் மின்குமிழ் இருக்கும் வண்ணம் பொருத்துதல்
4) தெறியியின் குவியத்தினுள் மின்குமிழ் இருக்கும் வண்ணம் பொருத்துதல்.

34) கல்லை வளியில், நீரில் முழுமையாக அமிழ்த்திப் பெறப்பட்ட வாசிப்புகள் படத்தில் காட்டப்பட்டுள்ளன. கல்லினால் இடம்பெயர்க்கப்பட்ட நீரில் நிறையும், கல்லின் மீது நீரினால் வழங்கப்படும் மேலுதைப்பும்




1) 2N, 2N
2) 5N, 3N
3) 2g, 3N
4) 5g, 3g

35) படிகூட்டு நிலைமாற்றியொன்றை திருத்தமாகக் காட்டுவது



1) 2) 3) 4)

36) அடுப்புக்கு அருகில் நின்று கொண்டிருக்கும் ஒருவருக்கு சூட்டை உணரலாம். இங்கு அடுப்பில் இருந்து வெப்பம் கடத்தப்படும் முறை.


1) கடத்தல் 2) ஆவியாதல்
3) கதிர்வீசல் 4) மேற்வாவுகை

37) A,B, C,D என்னும் நான்கு இரசாயனப் பதார்த்தங்களின் விபரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| இரசாயன பதார்த்தம் | விபரம் |
|---|---|
| A | நிறமற்றது, நச்சுவாயுவைக்கும் தீயணைப்பதற்கு பயன்படும் |
| B | எண்ணெய் தன்மையானது விரைவில் வெடிக்கும். |
| C | எண்ணெய் தன்மையானது அரிப்புக்குள்ளாகும், நச்சுவாயு வைத்தரும். |
| D | மஞ்சள் நிறத்திண்மம் இலகுவில் எரிந்து சுவாசப்பைக்கு பாதிப்பை ஏற்படுத்தும். தூளை வெளியேற்றும். |

பின்வரும் குறியீடுகள் இரண்டும் மேலே தரப்பட்ட எப்பதார்த்தத்திற்கு இடப்படும்.


தீப்பற்றக்கூடியது


ஆபத்தானது

1) A
2) B
3) C
4) D

38) பின்வரும் கூற்றுகளுள் பிழையானது

1) மாமிச உணவைத் தவிர்த்து தாவர உணவை உண்பதன் மூலம் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.
2) பூச்சி நாசினிகளைப் பயன்படுத்துவதால் அதற்கு எதிர்ப்புத்தன்மை மிக்க பூச்சிகள் உருவாகும்.
3) செயற்கை உரங்களைப் பயன்படுத்துவதால் குறுகியகால பயன் கிட்டினாலும் நீண்டகால பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு.
4) சவர்க்காரம் பாவிப்பதைவிட காரத்தன்மையான சேர்வைகள் பயன்படுத்துவது சூழலுக்கு உகந்ததாகும்.



கிளிநொச்சி இராணுவமும் வடமாகாண ஆளுநரும் இணைந்து கிளிநொச்சியில் நடாத்திய ஒளிவிழாவில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மாணவருக்கு பரிசில் வழங்குவதையும், கலந்துகொண்டவர்களையும் காணலாம்.

(படங்கள் : கே.நந்தகுமார்)

# கப்பம் கறந்தார் பிரதி அமைச்சர் இப்போது அவர் மீது விசாரணை

(கொழும்பு)

ஒரு கோடி ரூபா கப்பம் பெற்றுக்கொண்ட பிரதி அமைச்சர் ஒருவருக்கு எதிராக விசாரணைகள் நடாத்தப்படவுள்ளன.

ஆளும் கட்சியின் முக்கிய அமைச்சர் ஒருவரின் பெயரைப் பயன்படுத்தி இவ்வாறு கப்பம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இரும்பு வர்த்தகத்தின் போது கப்பம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பிரதி அமைச்சரிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடாத்த உள்ளனர். மேல மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் குறித்த பிரதி அமைச்சர், அரசாங்க நிறுவனமொன்றின் இரும்பு வெட்டி அகற்றுவதற்காக இவ்வாறு பணம் பெற்றுக்கொண்டுள்ளார்.

மூன்று சந்தர்ப்பங்களில் குறித்த வர்த்தகரிடமிருந்து மொத்தமாக ஒரு கோடி ரூபா கப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் சிரேஸ்ட அமைச்சரின் பெயரை பயன்படுத்தியே கப்பம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# புலிகளின் காவற்துறையை விட இலங்கைப் பொலிஸார் சிறந்தவர்கள்

## நிரூபிக்கவேண்டும் என்கிறார் பொலிஸ்மா அதிபர்


இதுவரை வடக்கு மற்றும் கிழக்கில் மக்கள் அறிந்து வைத்திருந்த புலிகளின் பொலிஸாரை விடவும் எமது இலங்கை பொலிஸார் வித்தியாசமானவர்கள், நல்லவர்கள் என நிரூபிக்க வேண்டுமென பொலிஸ் மா அதிபர் என்.கே. இளங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வின் போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கல்லூரியிலிருந்து 240 தமிழ் கனிஷ்ட பொலிஸ் அதிகாரிகளும் 233 தமிழ் கனிஷ்ட கானஷடபிள்கள் வெளியேறினர்.

வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் மக்களுக்கு சிநேகபூர்வமான சேவை வழங்குவது முக்கியம் என பொலிஸ் மா அதிபர் என்.கே. இளங்கக்கோன் வலியுறுத்தியுள்ளார். பயிற்சி பெற்று வெளியேறும் அனைவரையும் வடக்கு மற்றும் கிழக்கிலிருக்கும் பொலிஸ் நிலையங்களில் சேவைக்கு அமர்த்த விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கில் நலிவடைகிறதா? மருத்துவ சுகாதார நிலைமை



## பழுத்த மருத்துவர்களின் அனுபவ பகிர்வு

வடக்கில் நலிவடைந்து செல்லும் மருத்துவ சுகாதார நிலைமைகளை தேய விடாது காப்பாற்றுவதன் மூலம் பெறுமதி மிக்க பல உயிர்களைக் காப்பாற்ற முடியும் என்று பழுத்த மருத்துவர்குழு வட மாகாண அரசுக்கு யோசனைகளை முன்வைத்துள்ளது. இது அவர்களுக்கு சமர்ப்பணம்.

வடக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுடைய உரிமைக்குரலாக தங்களைச் சிறந்த தலைமையின் கீழ் அதிக பெரும்பான்மையுடன் மக்களின் ஆதரவு பெற்று நிர்வாகம் உருவாகியுள்ளது.

தங்கள் பணிகள் சிறப்பாக அமைய எமது கடந்த 50 வருட தொழில்சார் அனுபவங்களைக் கொண்டு தங்களின் கவனத்திற்காக சமர்ப்பிக்கின்றோம். நாம் வைத்தியர்களாக பதவியேற்று 15 வருடங்கள் தென்பகுதியிலும், 36 வருடங்கள் வடபகுதியிலுமாக பல்வேறு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றியுள்ளோம்.

இலங்கை ஒரு வறிய நாடு. அதில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக ஏற்பட்ட சூழ நிலையால் எமது மக்கள் பல இன்னல்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டது.

நாங்கள் தற்சமயம் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை உலக சுகாதார நிறுவன 1980 ஆம் ஆண்டு எமது நாடு போன்ற வறிய நாடுகளின் பிரச்சினைகளை ஆராய்ந்து (Health for all by 2000) சகலருக்கும் சுகாதாரம் 2000 ஆம் ஆண்டின் என்ற ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை வகுத்து அதைப் பின்பற்ற 21 விடயங்களையும் முன்வைத்தது. அதில் அடங்குபவை. (ஒரு மனிதனுக்குத் தேவையான அனைத்து விடயங்களும் அடங்கியது)

**அதில் முக்கியமானவை**

1. ஆரம்ப சுகாதார கவனிப்பு
2. சுகாதாரக் கல்வி
3. சூழல் சுகாதாரம்
4. பாதுகாப்பான குடிநீர்
5. தொற்றுநோய் தடுப்பும் கட்டுப்பாடும்.
6. தொற்றாத் தன்மையுடைய நோய் கட்டுப்பாடும், தடுப்பும்.
7. உள ரீதியான பாதுகாப்பு - கட்டுக்கோப்பான குடும்பம், சமூகத்தை உருவாக்குதல்.
8. விபத்துக்களைத் தவிர்த்தல்

இந்தத் தீர்மானங்களின் நோக்கங்கள் ஒரு மனித வாழ்க்கை நன்கு அமைய வழிகாட்டியனவாக இருந்தது. அந்த தீர்மானத்துக்கு அமைய நாம் எமது சுகாதார சேவைகளை முன்னெடுத்தோம்.

நாட்டின் பொருளாதார வளங்கள் இயற்கை வளங்கள், மனிதவளம் ஆகியவற்றை பயன்படுத்தி முன்னேற்றம் காணப்பட்டது.

துரதிஷ்டவசமாக உள்நாட்டு யுத்தநிலை ஏற்பட்டு மேற்குறிப்பிட்ட விடயங்களின் நன்மைகள் பாதிக்கப்பட்டன. ஆனாலும் எமது பகுதிகளில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களின் தேவை அறிந்து சேவை வழங்கியபடியால் மக்கள் தம்மை பாதுகாக்கும் வழிகளைப் பின்பற்றினார்கள்.

நோய் நிலை சேவை புனர்வாழ்வு நடவடிக்கைகள் எமது பகுதிகளில் சிறப்பாக அமைந்தன. இயன்றளவு தேவையற்ற மரணங்கள், அங்கவீனத்துவம் தவிர்க்கப்பட்டது. மக்கள் வழங்கப்பட்ட நோய் தடுப்பு, கட்டுப்பாடு, புனர்வாழ்வு, முதலுதவி சேவைகளை நன்கு பயன்படுத்தினார்கள்.

**தற்சமயம் இருக்கும் நிலை (மிகவும் கவலைக்குரியது)**

சமூக சீர்குலைவுகள், இடம்பெயர்ந்த வாழ்க்கை, நவீன தொழில்நுட்பம் மற்றும் சுகாதார சேவையில் ஆரம்ப சுகாதார சேவையின் முக்கியத்துவம் உணரப்படாமை, குடும்பத்தினது கட்டமைப்பு சீர்குலைதல், புதிய கலாசார நடத்தை, யுத்தத்தின் பின் காணப்படும் நெருக்கீட்டு நிலை, குறிப்பாக யுத்தம் நிறைவடைந்த பின் ஏற்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட நிலைகளுக்கு நாம் சிந்தித்து செயலாற்ற வேண்டிய காலம் வந்துவிட்டது.

போதைவஸ்துப் பாவனை மதுப்பாவனைக்கு அடிமையாதல், பாலியல் நோய்கள் குறிப்பாக எயிட்ஸ் நோய், குடும்ப உளவியல் சீர்குலைவு, பாதுகாப்பின்மை, மக்களிடையே ஏற்படும் நிலை குறிப்பாக இளம் வயதினர் பாதிக்கப்படுவதைக் காண்கின்றோம்.

இவை 2009 இற்கு முன்னர் கட்டுப்பாட்டில் இருந்தவை. இந்நிலை தொடர்வது மக்களுக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தி நலிவற்ற சமுதாயமாக நாம் மாறுவதை தடுத்தல் வேண்டும். அத்துடன் உடன் நடவடிக்கை எடுக்காவிட்டால் எமது இனத்தின் தனித்துவம் அழிந்து போகும்.

**நாம் செய்ய வேண்டியது என்ன?**

1. எமது மக்களையும் இணைத்து சேவைகளை முன்னெடுத்தல் அவசியம் மக்களின் ஆதரவு இல்லாத சேவை பயன்பாடு மிகவும் குறைவு. இதில் கல்வி நடவடிக்கை சேவைக்கு முன் அவசியம்.

2. சமூகத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகளை அந்தந்த மக்கள் பகுதிகளுக்கு விளக்கி நாம் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கச் செய்தல் வேண்டும்.

3. அண்மைக் காலத்தில் சட்டங்கள் பல ஏற்படுத்தப்பட்டன. அதைப் பயன்படுத்தி மக்களை வற்புறுத்தி, வாழ்விடங்கள், கடைகள் ஆகியவை சட்டத்துடன் இணைந்தவர்களுடன் வீடுகள், கடைகள் தரிசித்து சட்ட நடவடிக்கை எடுப்பதால் நிலைமை சீராகாது. சட்டம் என்பது மனிதனுக்கு வழிகாட்டியாகப் பயன்படுத்தி கல்வி நிகழ்ச்சிகளை நடத்தினால் அதை மக்கள் பின்பற்றுவார்கள்.

4. இளைஞர்கள், யுவதிகளில் காணப்படும் நோய்கள், உளத்தாக்கங்கள், அவர்களுக்கு விசேட நடைமுறைக்கு ஏற்ப கல்வித் திட்டங்களை உருவாக்கி அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் சேவைகளை நடைமுறைப்படுத்தல் அவசியம்.

2009 இற்கு முன்னர் (உதாரணமாக) மிகவும் கஷ்டமாக யுத்த நிலையில் பாடசாலையில் இருந்து விலகும் நிலையில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு இனவிருத்தி சுகாதாரம் சம்பந்தமான கல்வி நிகழ்ச்சிகள் மிகவும் பலன் தந்துள்ளது.

சுகாதார சேவைகளை பொறுத்தமட்டில் பின்வரும் விடயங்களில் கூடிய கவனம் செலுத்தி நோய்களில் இருந்து காப்பாற்றுதல் அவசியம்.


1. சுகாதாரக் கல்வி
2. சூழல் சுகாதாரம்
3. தொற்றும் தன்மை நோய்த் தடுப்பு - கட்டுப்பாடு.
4. தொற்றாத் தன்மை நோய்த் தடுப்பு - கட்டுப்பாடு
5. உளச் சுகாதாரம் இனவிருத்தி பிரச்சினைகள் பாலியல் நோய்கள், குடும்ப உறவுகளை மேம்படுத்தல்.
6. விபத்துக்களைத் தவிர்த்தல், வன்முறை கலாசாரத்தை இல்லாமல் செய்தல்.

எமது முக்கியமான மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த அதிக பணவசதி தேவையில்லை. அவற்றை நடை முறைப்படுத்தும் உணர்வு எல்லோருக்கும் உருவாக்கவேண்டும்.

மேலும் நோய் வந்தபின் சிகிச்சை அளிப்பதிலும் பார்க்க அது வருமுன் காப்பது சிறந்தது. சுகாதாரத்துடன் சம்பந்தப்பட்ட சகல ஊழியர்களும் சேவை மனப்பான்மையுடன் செயலாற்றி எம்மக்களை வழி நடத்தவேண்டும்.

இ.தெய்வேந்திரன்
M.B.B.S., D.A. (Lond)

# தென் சூடானில் மோதல் தீவிரம் ஒருவாரத்தில் 500 பேர் பலி



தெற்கு சூடானில் கேந்திர முக்கியமான போர் நகரை, முன்னாள் அதிபருக்கு விசுவாசமான கிளர்ச்சிப் படையினர் கைப்பற்றி மூன்று நாட்கள் கடந்துள்ள நிலையில், அதனை மீண்டும் கைப்பற்ற அந்நாட்டு இராணுவத்தினர் முயன்று வருகின்றனர்.

முன்னாள் துணை அதிபர் ரீக் மஷார் தன்னை பதவியிலிருந்து கவிழ்க்க சதித்திட்டம் தீட்டுவதாக அதிபர் சல்வா கீயர் குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், அங்கு கடந்த ஞாயிறு முதல் நடந்து வரும் இன வன்முறைகளில் 500 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

போர் நகருக்கு அருகே, அமெரிக்க பிரஜைகளை மீட்டுவரச் சென்ற விமானமொன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியதில் நான்கு அமெரிக்க இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

இன்னொரு பக்கத்தில், தெற்கு சூடானின் மூத்த இராணுவ கட்டளையதிகாரியான ஜெனரல் ஜேம்ஸ் கோங், எண்ணெய் தயாரிப்பிற்கு முக்கியமான யூனிட்டி மாநிலத்தில் உள்ள கிளர்ச்சிப் படையினருடன் சேர்ந்து கொண்டுள்ளார்.

இப்போது தெற்கு சூடானில் யுத்தம் பரவிவருகிறது. நாட்டின் பெரும்பான்மை இடங்களை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக நாட்டின் முன்னாள் துணை அதிபர் ரீக் மஷார் தெரிவித்தார்.

தெற்கு சூடானில் பெருமளவு எண்ணெய் உற்பத்தியில் முக்கியமான யூனிட்டி மாநிலத்தை தனக்கு விசுவாசமான படையினர் கைப்பற்றி வைத்திருப்பதாக ரீக் மஷார் கூறுகிறார்.

மோதலில் ஈடுபட்டுவரும் கிளர்ச்சிப் படையினர் தனது கட்டுப்பாட்டிலேயே இயங்குவதாக முன்னாள் துணை அதிபர் ம'ார் இப்போது ஏற்றுக்கொண்டுள்ளார். அதிபர் சல்வா கீயருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தான் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், ஆட்சி கவிழ்ப்புக்கான சதி முயற்சியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதாகியுள்ள முன்னணி அரசியல்வாதிகள் அதற்கு முன்பதாக விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும் முன்னாள் துணை அதிபர் கூறியுள்ளார்.

உலகச் செய்திகள்

## ஈராக்கில் குண்டுவெடிப்பு 15 இராணுவத்தினர் பலி



ஈராக்கில் ஷியா பிரிவு ஆட்சியாளர் நூரி அல் மாலிக்கிக்கு எதிராக சன்னி பிரிவு போராளிகள் சண்டையிட்டு வருகின்றனர். கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் நடந்துவரும் இச்சண்டை பிரிவினைவாத சண்டையாக தீவிரமடைந்துள்ளது. அல் கொய்தாவுடன் தொடர்புடைய இந்தச் சன்னி போராளிகளை ஒடுக்கும் நடவடிக்கைகளை அன்பர் மாகாணத்தில் இராணுவத்தினர் மேற்கொண்டனர். அப்போது அவர்கள் திட்டமிட்டுக்கொண்டிருந்த கட்டடவளாகத்தில் குண்டு ஒன்று வெடித்தது. இதில் ஈராக் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இது தற்கொலைப்படைத் தாக்குதலால் நடந்ததா அல்லது இரகசியமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததால் ஏற்பட்டதா என அறிய முடியவில்லை


## ஜெயலலிதாவின் அசையும் சொத்துக்கள் ஒருமாதத்தினுள் ஒப்படைக்க அவகாசம்

முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில், அசையும் சொத்துக்களை ஒப்படைக்க தமிழக நீதித்துறைக்கு ஒரு மாதம் அவகாசம் அளித்து பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. இந்த வழக்கில் தொடர்புடைய ஜெயலலிதாவின் அசையும் சொத்துக்கள், ரிசர்வ் வங்கியின் சென்னை கருவூலத்தில் உள்ளது.

இந்நிலையில், தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன், வழக்கில் தொடர்புடைய ஜெயலலிதாவின் சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிடக்கோரி மனுத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவை விசாரித்த நீதிபதி, வழக்கில் தொடர்புடைய ஜெயலலிதாவின் அசையும் சொத்துக்களை டிசம்பர் 21 ஆம் திகதிக்குள் நீதிமன்றத்தில் ஒப்படைக்க ஏற்கனவே உத்தரவிட்டிருந்தார்.



இந்த நிலையில், வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, சொத்துக்குவிப்பு வழக்கில் தொடர்புடைய அசையும் சொத்துக்களை ஒப்படைக்க அவகாசம் வேண்டும் என்று தமிழக நீதித்துறை கேட்டுக்கொண்டது. இதையடுத்து, தமிழக நீதித்துறைக்கு ஒரு மாதம் அவகாசம் அளித்த நீதிபதி, வழக்கு விசாரணையை ஜனவரி 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.


## அமெரிக்க உளவாளி தேவ்யானியின் வீட்டில்

### தந்தை பரபரப்புத் தகவல்

தனது மகள் தேவ்யானியின் வீட்டில் இருந்த வேலைக்கார பெண் சங்கீதா, அமெரிக்காவின் இரகசிய உளவாளி என அவரது தந்தை அதிரடி புகாரை தெரிவித்துள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய தேவ்யானியின் தந்தை உத்தம் கோப்ராகடே, கடந்த ஒரு ஆண்டுகாலமாக நடைபெற்று வரும் இந்த பிரச்சினைகளை ஆராயும் போது மிகப் பெரிய சதி இருப்பதை உணர முடிகிறது.

சந்தர்ப்ப சூழ்நிலைகளை வைத்துப் பார்த்தால் வேலைக்காரப் பெண் சங்கீதா, சி.ஐ.ஏ. உளவாளியாகத்தான் இருந்திருப்பார் போல, இந்த வழக்கில் நாங்கள் பலிகடாக்களாக்கப் பட்டுவிட்டோம்.



தேவ்யானி மிகவும் துணிச்சலான பெண், தமது கடமையில் சிறப்பாக செயறபடக் கூடியவள் என்று தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த இந்திய குடியரசுக் கட்சியின் தலைவர் இராமதாஸ் அத்வாலே, வேலைக்கார பெண் சி.ஐ.ஏ. ஏஜெண்ட் என்ற அடிப்படையில் மத்திய அரசு விசாரணை நடத்த வேண்டும், தேவ்யானி மீதான வழக்கு கைவிடப்படும் வரை எமது கட்சித் தொண்டர்களின் போராட்டம் தொடரும் என்று கூறியுள்ளார்.

## பாகிஸ்தானில் இரகசிய அணுஉலை குற்றம் சாட்டுகின்றது அமெரிக்கா




பாகிஸ்தான் இரகசியமாக அமைத்து வரும் நான்காவது அணு உலையின் கட்டுமானப் பணிகள் முடியும் நிலையில் உள்ளதாக, அமெரிக்காவின் அறிவியல் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த அணு உலையில், அணு ஆயுதங்களை உருவாக்குவதற்கான மூலப் பொருள் தயாரிக்க பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

பாகிஸ்தான் கட்டி வரும் அணு உலையை செயற்கைக் கோள் உதவியுடன் அமெரிக்க அமைப்பு பல ஆண்டுகளாக கண்காணித்து வருகிறது.


இதையடுத்து, அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கடந்த நவம்பர் மாதம் எடுக்கப்பட்ட செயற்கைக் கோள் படத்தில் 4 ஆவது அணு உலை முடிவடையும் நிலையில் உள்ளது தெரியவந்துள்ளது. இந்த அணு உலையில் சிறிய வகை அணு ஆயுதங்களை தயாரிக்க புளூடோனியம் என்ற மூலப் பொருள் தயாரிக்கவும் பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளது.

இதற்கான தொழில்நுட்பங்களை தவறான முறையில் பாகிஸ்தான் கொள்முதல் செய்துள்ளது என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

## அமெரிக்க தூதரகத்தில் சோதனை நடாத்துங்கள்

### வலியுறுத்துகிறார் யஷ்வந்த்சின்ஹா



அமெரிக்கத் தூதரகத்தில் முழுமையான சோதனை நடத்தப்பட வேண்டும் என்று பா.ஜ.க. மூத்த தலைவரும் முன்னாள் வெளியுறுவுத்துறை அமைச்சருமான யஷ்வந்த் சின்ஹா வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்கத் தூதரகத்தில் தூதரக அதிகாரிகள் என்ற அந்தஸ்தில் இல்லாத பலர், அதற்கான அடையாள அட்டைகளுடன் வலம் வருகின்றனர். அதனால், தூதரகத்தை சோதனை செய்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேவ்யானி கோப்ரகடேவை கைவிலங்கிட்டு கைது செய்ததும் ஆடையைக் களைந்து சோதனை செய்ததும் கடும் கண்டனத்துக்குரியது.

சர்வதேச உறவுகள் சிறக்க, இரு தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும். ஆனால், தேவ்யானி மீதான வழக்கை அமெரிக்கா திரும்பப் பெற மறுத்து விட்டது.

தேவ்யானி கைது செய்யப்பட்டதை எதிர்த்து இந்தியா நடவடிக்கை எடுக்காவிட்டால், இந்தியா பலவீனமான தேசம் என்று சர்வதேச சமூகம் நினைக்கும் என்று தெரிவித்தார்.

சமீபத்தில், பிரேசிலில் அமெரிக்கா உளவு பார்த்ததற்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கு மேற்கொள்ளவிருந்த சுற்றுப்பயணத்தை பிரேசில் ஜனாதிபதி இரத்து செய்ததை சின்ஹா சுட்டிக்காட்டினார்.

# வடமராட்சி கிழக்கு கிராமங்களுக்கு மின்விநியோகம் இன்று ஆரம்பம்

(வடமராட்சி)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கு மீள்குடியேற்றக் கிராமங்களுக்கு இலவச மின்விநியோகத் திட்டம் இன்று ஆரம்பிக்கப்படுகின்றது.

நத்தார் தினத்தை முன்னிட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய துரித கதியில் இம்மின்சார விநியோகம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதற்கமைய இன்று வெற்றிலைக்கேணி கிராம அலுவலர் பிரிவுக்கும், முள்ளியான் (கட்டைக்காடு) கிராம அலுவலர் பிரிவுக்குமான மின்விநியோகத்தை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) ஆரம்பித்து வைககின்றார்.

பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளருமான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு வடக்கின் வசந்தத்தின் வடமாகாண மின்திட்ட பொறியியலாளர் எஸ்.குணசீலன், மருதங்கேணி பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன், யாழ் மாவட்ட மின் அத்தியட்சகர் இராஜேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

வெற்றிலைக்கேணிக்கு 2 கோடி 65 இலட்சமும், கட்டைக்காட்டுக்கு ஒரு கோடி 34 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு இம்மின்விநியோகம் வழங்கப்படவுள்ளது.

அடுத்தகட்டமாக போக்கறுப்பு, குடாரப்பு, நாகர்கோவில் மேற்கு மற்றும் கிழக்கு கிராம அலுவலர் பிரிவுகளுக்கான மின்விநியோகத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (116)

# பாதசாரிகள் கடவை அமைக்கக் கோரிக்கை


(வடமராட்சி)

மந்திகை வைத்தியசாலை சந்தியில் வீதி அகலிப்புக்கு முன்னர் இருந்த பாதசாரிகள் கடவை தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளதால் அவ்விடத்தில் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் இருப்பதாக வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதான வீதி அகலிப்பு பணிக்கு முன்னர் மந்திகை வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் நன்மைகருதி யாழ். - பருத்தித்துறைக்கு திரும்பும் மந்திகை வைத்தியசாலை சந்தியிலுள்ள பஸ்தரிப்பிடத்தில் பாதசாரிக் கடவை போடப்பட்டிருந்தது.

தற்போது பருத்தித்துறை யாழ். பிரதான வீதி அகலிப்பு ஓரளவு பூர்த்தியடைந்து வரும் இந்நிலையில் மந்திகை வைத்தியசாலைக்கு திரும்பும் வளைவில் உள்ள பஸ்தரிப்பிடத்தில் அநாவசியமற்ற முறையில் பாதசாரிகள் கடவை போடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுத்து முன்னர் இருந்த பாதசாரிக் கடவை போட்டுத்தருமாறு வைத்தியசாலைக்கு வரும் நோயாளர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



முல்லைத்தீவு மாத்தளன் பகுதியில் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. பொதுமக்களின் தகவலின் அடிப்படையில் ஐயங்கன்குளம் பொலிஸார் இவற்றை மீட்டுள்ளனர்.

# சமநிலையில் நிறைவடைந்த முதலாவது டெஸ்ட் போட்டி



(ஜோகனஸ்பேர்க்)

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது.

இந்திய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் தென்னாபிரிக்காவின் ஜோகனஸ்பேர்க்கில் நேற்று நிறைவடைந்தது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி 280 ஓட்டங்களையும், தென்னாபிரிக்க அணி 244 ஓட்டங்களையும் பெற்றது.

36 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி, புஜாரா, ஹோலி ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்டங்களைப் பெற்றது. இறுதியில் இந்திய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 421 ஓட்டங்களைப் பெற்றது. இதில் புஜாரா 270 பந்துகளை எதிர்கொண்டு 21 பவுண்டரிகள் அடங்கலாக 153, ஹோலி 193 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 96, டோனி, சகீர்கான் ஆகியோர் தலா 29, முரளி விஜய் 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிலாண்டர், கலிஸ் ஆகியோர் தலா மூன்று, டுமினி இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 458 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்ப வீரர்களான பீற்றர்சன் (74), சிமித் (44) நல்ல தொடக்கத்தை கொடுத்தனர். இதன் பின்னர் அம்லா (4) ஏமாற்றமளித்தபோதிலும் பிளசிஸ், டிவில்லியர்ஸ் இணை அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றது.

இருவரும் சதமடித்து அசத்தியபோதிலும் இந்த இணை பிரிக்கப்பட தென்னாபிரிக்காவின் வெற்றிவாய்ப்பு தகர்ந்தது.

இதில் பிளசிஸ் 134, வில்லியர்ஸ் 103, பிளண்டர் 25 ஓட்டங்களைப் பெற தென்னாபிரிக்க அணி நேற்றைய ஆட்டநேர நிறைவின்போது 7 விக்கெட்டுக்களை இழந்து 450 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

பந்துவீச்சில் மொகமட் சமி 3, சகீர்கான், இஷாந்சர்மா தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ஹோலி தெரிவானார்.

# பிரிட்டன் தீர்மானத்தை நிராகரிக்கும் அரசாங்கம்

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை பேரவையில் பிரிட்டன் எத்தகைய தீர்மானத்தைக் கொண்டு வந்தாலும் அதனை நிராகரிக்கவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வரும் மார்ச் மாதம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு தாம் இணை அனுசரணை வழங்கப் போவதாக பிரித்தானியா கடந்த வாரம் தெரிவித்திருந்தது.

பொறுப்புக்கூறல் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து இலங்கையுடனும், ஏனைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், கொமன்வெல்த் நாடுகள் மற்றும் அனைத்துலக பங்காளர்களுடனும் பிரித்தானியா தொடர்ந்து பேச்சுகளை நடத்தி வருவதாக பிரித்தானிய வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியக அமைச்சர் ஹயூகோ சுவைர் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம,

அவர்களின் தீர்மானத்தை நாம் நிராகரிக்கிறோம். அதற்கான வலிமையும் தைரியமும் எமக்கு உள்ளது.

இராணுவம் மனிதஉரிமை மீறல்களில் ஈடுபடவில்லை என்ற எமது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

## நெடுந்தீவில்...

உள்ள குதிரை இனத்தைப் பாதுகாத்து பராமரிப்பது தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சர் விஜிதமுனி சொய்சாவிடம் எடுத்து விளக்கினார்.

குறிப்பாக குதிரை உள்ளிட்ட ஏனைய கால்நடைகளுக்குத் தேவையான புற்தரைகளை வளர்ப்பது, மற்றும் அவற்றுக்குத் தேவையான குடிநீரை பெற்றுக் கொள்வதற்கு முன்னெடுக்கப்படவேண்டிய திட்டங்கள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இத்திட்டத்திற்கென நெடுந்தீவிலுள்ள வெல்லைப் பகுதியில் 100 ஏக்கர் அரச காணியை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்துள்ள அதே வேளை, 300 தொடக்கம் 400 வரையிலான குதிரைகள் உள்ளிட்ட ஏனைய கால்நடைகளை வளர்ப்பது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அமைச்சர் விஜிதமுனி சொய்சாவிடம் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் எதிர்காலத்தில் நெடுந்தீவை சுற்றுலாத்துறை மையமாக மாற்றியமைக்கும் வகையில் முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பாகவும் அங்குள்ள இயற்கை வளமான முருகைக் கல்லினாலான சுற்றுப் புறச்சுவரை அமைப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

குறித்த திட்டங்களுக்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் இவ் வேலைத்திட்டங்கள் எதிர்வரும் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கிடையில் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது ஆலோசனை மற்றும் கோரிக்கைக்கு அமைவாக நெடுந்தீவுப் பகுதியில் குதிரை உள்ளிட்ட ஏனைய கால்நடைகளை பாதுகாத்து பராமரித்து வளர்த்தெடுப்பது தொடர்பான இத்திட்டம் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சினால் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்) உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

## ஜன்னல்...

பெறுமதியான பொருட்களை திருடிச்சென்றுள்ளனர்.

இதன்போது 9 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கநகைகளும் 10,000 ரூபா பணம் உட்பட பெறுமதியான பொருட்களும் திருடிச்செல்லப்பட்டுள்ளன.

வீட்டிலுள்ளவர்கள் நேற்று அதிகாலை எழுந்து பார்த்த போது, வீட்டு முற்றத்தில் தோடு ஒன்று வீழ்ந்திருப்பதைக் கண்டெடுத்துள்ளனர். இதனைத் தொடர்ந்து வீட்டில் வைக்கப்பட்டிருந்த தங்கநகைகளை தேடிய போதே தமது வீட்டில் திருட்டு இடம்பெற்றமை இவர்களுக்கு தெரியவந்தது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற கொண்டு வருகின்றனர்.

## ஜெனிவா...

தலைவராக யாரை நியமிப்பது என்பது குறித்தோ, அரசாங்கம் இன்னமும் முடிவு எதையும் எடுக்கவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மதுபோதையில்....

பொலிஸாரினாலோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த காவலாளி மிகவும் வறுமையால் வாடும் குடும்பத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (125)

## வயோதிபப்...

சாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பத்திற்கும்...

பின் மன்னார் நீதவான் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் மனித எச்சங்கள் மீட்கப்பட்ட புதை குழி தோண்டப்பட்டது.

இதன் போது மேலும் சிதைவடைந்த நிலையில் துண்டு துண்டுகளாக மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை மேலும் இரண்டு மண்டையோடுகளும், மனித எச்சங்களும் மீட்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்றுக் காலை இரண்டாவது நாளாகவும் மன்னார் நீதவான் முன்னிலையில் மனிதப் புதைகுழி தோண்டப்பட்டது. இதன் போது மேலும் பல மண்டையோடுகளும் மனித எச்சங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இது வரை 10 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் பல மனித எச்சங்கள் அப்பகுதியில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும் பல மனித எச்சங்கள் மீட்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றுக் காலை 10 மணிமுதல் 12 மணிவரை மனிதப் புதைகுழி தோண்டப்பட்ட நிலையில் தற்போது குறித்த பணிகள் நிறுத்தப்பட்டுள்ளது. குறித்த மனிதப் புதை குழி தோண்டும் பணிகள் இன்று மீண்டும் மன்னார் நீதவான் முன்னிலையில் இடம்பெறவுள்ளது. தற்போது குறித்த பகுதியில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# மல்லாகத்தில் விபத்து; இருவர் படுகாயம்

யாழ். கே.கே.எஸ். வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் மற்றுமொருவரும் படுகாயமடைந்த நிலையில், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளொன்றும் சைக்கிளொன்றும் மோதியதிலேயே இவ்விபத்து சம்பவித்தது.

யாழ். சிறைச்சாலை உத்தியோகத்தரான சி.சர்வானந்தன் (வயது-34), இராணுவச் சிப்பாயான ஜி.ஜி.எம்.கங்கொடகெதர (வயது-21) ஆகியோரே இவ்விபத்தில் படுகாயமடைந்தவர்களாவர்.

யாழ். மல்லாகம் கே.கே.எஸ்.வீதியிலுள்ள மதுவரித் திணைக்களத்திற்கு முன்பாக ரோந்து சென்றுகொண்டிருந்த இராணுவச் சிப்பாயின் சைக்கிளுடன் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே இவ்விபத்து சம்பவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்துத் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஈரானிய கடற்படை வீரர் கல்வீச்சில் காயம்

கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் ஈரானியக் கடற்படை அணியில் இடம்பெற்றுள்ள, கடற்படை வீரர் ஒருவர், கல்வீச்சில் காயமடைந்துள்ளார். ஈரானியக் கடற்படையினர் நடந்து சென்றுகொண்டிருந்த போது, நேற்றுமுன்தினம் மாலை புறக்கோட்டைகான் மணிக்கூட்டுக் கோபுரம அருகே வீதியோரத்தில் நின்ற ஒருவர் கற்களை வீசித் தாக்குதல் நடத்தினார்.

இதில் ஈரானியக் கடற்படை வீரர் ஒருவர் காதில் காயமடைந்த நிலையில் கொழும்பு தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஈரானியக் கடற்படையினர் மீது கல்வீசிய நபரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தியபோது அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று தெரியவந்துள்ளது.

ஈரானிய கடற்படையின் நீர்மூழ்கி உள்ளிட்ட மூன்று போர்க் கப்பல்களைக் கொண்ட அணியொன்று கடந்த வெள்ளிக்கிழமை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்தின் ஆதரவுடன் புலிகளை உருவாக்க முயற்சி

## வடக்கு முதல்வர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கத்தின் ஆதரவுடன் இயங்கும் முன்னாள் தளபதி ஒருவரைக் கொண்டு, புதிய விடுதலைப் புலிகளை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வோதயாவின் ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு மற்றும் தற்காப்பு தொடர்பில் கடந்த காலங்களில் சில தமிழ்அரசியல்வாதிகள் சந்தித்த தலைவிதியை நானும் சந்திக்க நேரிடலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதி ஒருவரைக் கொண்டு விடுதலைப் புலிகளின் பெயரை பயன்படுத்தி அவ் அமைப்பை அரசாங்கம் மீண்டும் ஏற்படுத்த போவதாக நாங்கள் கேள்விப்பட்டுள்ளோம்.

வெள்ளை வான் நாடகம் வேறொரு வகையில் முன்னெடுக்கப்படலாம். போர் முடிவுக்கு வந்த பின்னரும் உள்நோக்கங்களுடன் இராணுவம் தொடர்ந்தும் வடக்கில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

எங்களது நிலங்கள், வியாபாரங்கள், தொழில் வாய்ப்புகள் பறிக்கப்பட்டுள்ளதை நாங்கள் காண்கின்றோம். போரினால் விதவையானவர்கள் மற்றும் பெண்களுக்கு நிச்சயமாக பாதுகாப்பில்லை.

அரசாங்கம் வடக்கில் பொலிஸாரின் பிரசன்னத்தை அதிகரிக்கவில்லை. மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்கள் ஏதுமில்லை என்றால் படிப்படியாக இராணுவ பிரசன்னத்தை ஏன் குறைக்கவில்லை?.

தெற்கில் உள்ள நியாயமான சாதாரண மனிதத்தன்மை நிறைந்த சிங்களவர்கள் மத்தியிலும் இந்தக் கேள்விகள் எழுந்துள்ளன.

தமிழர்களும், முஸ்லிம்களும் சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகள் சிங்களமயப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதை நிச்சயமாக எதிர்க்கின்றனர் என்றார்.

# உணவு விற்பனை நிலையங்களின் தரம் குறித்து அறிவிக்க வசதி

தரமற்ற உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள் குறித்த முறைப்பாடுகளை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சு விசேட தொலைபேசி இலக்கங்களை அறிவித்துள்ளது.

24 மணித்தியாலங்களும் முறைப்பாட்டை மேற்கொள்ளக் கூடிய வகையில் 3 விசேட தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி 011-3071073, 011-2676161, 1977 ஆகிய இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி முறைப்பாடு செய்ய முடியும்.

நாடு முழுவதிலுமுள்ள உணவு விற்பனை நிலையங்களின் தரம் குறித்து அறிவிக்கும் வகையில் சுகாதார அமைச்சினால் இந்த இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

உணவு நிலையங்கள் மீதான சோதனை நடவடிக்கைகள் இன்றிலிருந்து எதிர்வரும் 4 நாட்களுக்கு இடம்பெறவுள்ளன.

இதன்போது வெதுப்பகங்கள், உணவகங்கள், ஹோட்டல்கள் மற்றும் மரக்கறி, பழங்கள், இறைச்சிக் கடைகள் உள்ளிட்ட உணவு விற்பனை நிலையங்கள் யாவும் சோதனையிடப்படவுள்ளன.

# புலமைப்பரிசில் பரீட்சை நிறுத்தம் விசேட அறிக்கை வெளிவரும்

2016ஆம் ஆண்டில் இருந்து தரம் 5 புலைமைப் பரிசில் பரீட்சையை நிறுத்தவுள்ளதாக கல்வி அமைச்சு எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கவனம் செலுத்தியுள்ளது. கல்வி அமைச்சின் இந்தத் தீர்மானத்திற்கு தாம் இணங்குவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் நவீன் சொய்சா தெரிவித்தார்.

கல்வி அமைச்சோ கல்வி அமைச்சரோ தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்க அதிகாரிகளிடம் எந்தவொரு கலந்துரையாடலையும் மேற்கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நிறுத்தம் குறித்த கல்வி அமைச்சின் தீர்மானம் தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிடுவதற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எதிர்பார்த்துள்ளதாக நவீன் சொய்சா மேலும் தெரிவித்தார்.

# கசினோ சூதாட்டத்திற்கு அரசால் வரி விலக்கு

## என்கிறது ஐ.தே.க.

கசினா சூதாட்டத்திற்கு வரி விலக்கு அளிக்கப்பட உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது, புதிய சட்டத் திருத்தங்களின் ஊடாக இவ்வாறு வரி விலக்கு அளிக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கசினோ மற்றும் ஏனைய சூதாட்டங்களுக்கு வரி விலக்கு அளிக்கும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை அரசாங்கம் வெளியிட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

கசினோ மற்றும் வரிச் சலுகை ஆகிய சொற்களை உள்ளடக்காது அரசாங்கம் இந்த சட்டத்திருத்தங்களை உள்ளடக்க உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

மிகவும் சூசகமான முறையில் யாருக்கும் சந்தேகம் ஏற்படாத வகையில் அரசாங்கம் கசினோ தொடர்பான சட்டத்தை அறிமுகம் செய்யும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

NALIN Information Technologies(Pvt)Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
Mary Christmas & Happy New Year
23- 31 வரை
நத்தார் மற்றும் புது வருடத்தை முன்னிட்டு
கணனிகள், மடிக் கணனிகள்
HSPA Dongle (E-173), Pen drive,
Memory chip(Micro SD), External HDD,
Printer, Headphone அனைத்திற்கும்
விசேட விலைக்கழிவுகள் ! விபரங்கள் நேரில்.


இலவசம் Anti Virus (1y), Mouse, Head Phone
கணனிகள், மடிக் கணனிகள் கொள்வனவு செய்பவர்களுக்கு
No. 195/4, Parameswara Junction, Palaly Road. (C/2592)
021 222 1121 077 766 7975 021 222 4994 facebook/nalin_it
Branch: No. 116 G, K.K.S. Road, Chunnakam. 021 224 2222 077 714 0431

சுந்தர்சன் நிறுவனத்தின்
மாபெரும் மலிவு விற்பனையில் பரிசு வென்ற 50 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள்

1 ஆம் பரிசு - Abans Double Door Fridge திரு. த. அகிலன் - சாவற்கட்டு
2 ஆம் பரிசு - LG Washing Machine திரு. ஜெ. றொஹான் - சாவகச்சேரி
3 ஆம் பரிசு - Microwave Oven திரு. ந. பிருந்தன் - கோண்டாவில்

4 - 10 ஆம் பரிசில்கள் - Mixture Grinder
ற. சதீஸ்குமார் - மல்லாகம்/ச. லோகநாதன் - கோண்டாவில்/அ. குணமணி - அச்சுவேலி/ஜெ. விதுஷன் - கைதடி/த. பரஞ்சோதி - முள்ளியவளை/கே. சுரேஸ்குமார் - மாதகல்/பா. சண்முகம் - புத்தூர்

11 - 20 ஆம் பரிசில்கள் - Pedestal Fan
வே. லெபொன்ஜெயதாஸ் - மாதகல்/சி. நஜிதா - சுன்னாகம்/ஏ.பியூலா - நவாலி/வீ.சுரேந்திரன் - கே.கே.ஸ் வீதி/ஏ.நிறஞ்சன் - யாழ்ப்பாணம்/க.செல்வகுமாரன் - கோப்பாய்/லெ.ஜெனுஷ்கா - மாதகல்/எஸ்.சிவரூபன் - சங்கானை/எம்.விஜேந்ரா - திருநெல்வேலி/தியுன்சியஸ் - மன்னார்

21 - 30 ஆம் பரிசில்கள் - Mobile Phone
சு.நந்தகுமார் - ஜெயபுரம்/சோ.ஜங்கரன் - புலோலி/ஆர்.ராதிகா - யாழ்ப்பாணம்/எஸ்.றஜீவன் - கொழும்புத்துறை/+.கைத்தாம்பிள்ளை - பண்டத்தரிப்பு/வி.காந்தரூபன் - கரவெட்டி/வி.அபிராமன் - இணுவில்/ரி.சோபனா - வல்வெட்டித்துறை/வி.அக்ஷயமரகதன் - யாழ்ப்பாணம்/பி.குமரேந்திரன் - சுன்னாகம்

31 - 40 ஆம் பரிசில்கள் - Toaster
ஏ.எம்.றிசானி - மானிப்பாய்/வி.சாத்விகா - சுதுமலை/ம.ஜானகி - யாழ்ப்பாணம்/எம்.பிரைட்மன் - பாசையூர/ரி.புனிதவதி - குப்பிளான்/தயாகரன் - கோண்டாவில்/எஸ்.ஜெலனி - சாவகச்சேரி/எஸ்.றஜீவன் - கொழும்புத்துறை/மூ.லிங்கேஸ்வரன் - சுதுமலை/எஸ்.ஜெயரட்ணம் - சுழிபுரம்

41 - 50 ஆம் பரிசில்கள் - Iron
வித்தியாகௌரி - மானிப்பாய்/ப.விஜயலட்சுமி - மானிப்பாய்/எஸ்.கஸ்தூரன் - மானிப்பாய்/பி.பரமேஸ்வரி - காரைநகர்/பே.சடாசிவம் - கொக்குவில்/பி.ஏ.றாஜ்குமார் - மானிப்பாய்/றா.கலைச்செல்வி - கொக்குவில்/எஸ்.விஜயகுமாரி - வட்டுக்கோட்டை/து.சுகந்தன் - மாதகல்/எஸ்.சுபாங்கி - இணுவில்
(C/2593)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 டிசம்பர் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.